விபுலானந்த அடிகள்

திருமு. திருநாவுக்கரசு

1951

O-, MVAW
N51
104941

# விபுலானந்த அடிகள்

இலங்கைக் கல்விப் பகுதி மொழிபெயர்ப்பாளர்

**திரு மு. கணபதிப் பிள்ளை அவர்கள்**

கட்டுரையைத் தழுவி, சுவாமிகளின் குறிப்புகளைத் துணையாகக் கொண்டு தொகுக்கப்பட்டது

OFFICE OF THE REGISTRAR OF ... 19 JUL 1951 MADRAS

தொகுப்பாசிரியர்:

**திரு மு. திருநாவுக்கரசு அவர்கள்**

தென்புலோலியூர்.

**இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்**

மதுரை பிரசுரகர்த்தர் சென்னை

உரிமை பெற்றது] 1951 [விலை ரூ.2

64122

முதற் பதிப்பு — 1951

M. I. P. PROJECT
Microfilmed.

ARCHIVES LIBRARY
10491
MADRAS-600 008

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை-' 51.

# முன்னுரை

தெய்வத்துக்கும் மதத்துக்கும் பாடுபடுவது போல, தாய் நாட்டுக்கும் தாய் மொழிக்கும் பாடுபடுவது மனிதனுக்குச் சிறந்த கடமை என்ற உண்மைக்கு எடுத்துக் காட்டாய் நிற்கும் விபுலானந்த அடிகள் வரலாறு, தமிழ் மக்கள் அனைவரும் அறிந்து மகிழவேண்டிய தொன்றாகும்.

மொழி பல கற்றுச் சிறந்தாலும், தாய் மொழியினிடத்து அன்பு தலைக்கொண்டு, அதனைப் பயின்று நன்கு தேர்ச்சி பெற்று, அம் மொழியிற் கிடந்த குறைபாட்டைத் தம் உணர்வாலும் ஆராய்ச்சித் திறனாலும் நிரப்பிச் செம்மை செய்து தமிழ் மொழிக்கு ஆக்கம் தழுவிச் செய்த அடிகளார் வரலாறு, ஆலமரத்தை அதன் விழுதுகள் தாங்குவது போலத் தாய் மொழியை, அதன் நூல்களைப் பிற மொழிப்படுத்தியும் பிற மொழி நூல்களை அதன்பால் மொழி பெயர்த்தும் புதுநூல் ஆக்கியும் சிறப்புறுவித்தல் அது பயிலும் மக்கள் கடமை என்பதைத் தெள்ளிதின் விளக்கி நிற்கின்றது.

இவ் வரலாற்றுடன் அடிகளார் இயற்றிய கவிதைகள் சிலவும் இந் நூலகத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. அடிகளார் தெய்வமானதறிந்து அன்பர்கள் பாடியுள்ள இரங்கற்பாக்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.


இந்நூல் தமிழ் மக்கள் உளங்களை எல்லாம் மகிழ்விக்கும் என நம்புகிறோம்.

பிரசுரகர்த்தர்.

O-MYAW
N51

# பொருளடக்கம்

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிறப்பும் பதவியும் .... | 1 |
| 2. | சென்னை வாழ்க்கை .... | 12 |
| 3. | இலங்கை மீட்சி .... | 19 |
| 4. | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் .... | 32 |
| 5. | சொற்பணி புரிதல் .... | 37 |
| 6. | 'பிரபுத்த பாரத' ஆசிரியர் .... | 40 |
| 7. | தென்னாடு திரும்புதல் .... | 47 |
| 8. | யாழ்நூல் அரங்கேற்றம் .... | 50 |
| 9. | அடிகளார் பெரும் பிரிவு .... | 60 |
| 10. | அடிகளார் இயற்றிய கவிதைகளுட் சில .... | 69 |
| 11. | இரங்கற்பாக்கள் .... | 117 |



அடிகளார் இளமைப் பருவம்

# விபுலானந்த அடிகள்

## அத்தியாயம் 1

## பிறப்பும் பதவியும்

### பிறந்த நாடு

இலங்கையிலே தமிழ் மக்கள் ஈண்டி வசிக்கும் இடங்கள், முக்கியமாய், வடமாகாணமும் கிழக்கு மாகாணமுமாம். வட மாகாணத்தில் தலைமையாயுள்ளது யாழ்ப்பாணம். கிழக்கு மாகாணத்தில் தலைமையாயுள்ளது மட்டக்களப்பு. மட்டக்களப்பின் இயற்கையமைப்பால், அது ஏனைய தமிழ் நாட்டுப் பகுதிகளுடன் சேராமல் தனிமையுற்றும், சிங்கள நாட்டுக்கு அண்மையாய் இருந்ததனால் அங்கு வாழ்ந்து வந்த மக்களது நடை, உடை, பாவனை ஆதியன யாழ்ப்பாணத்திலிருந்து சிறிது மாறுபட்டும் வந்து விட்டன. அல்லாமலும், அந்நாட்டு வழக்கு மொழியானது யாழ்ப்பாணத்து வழக்கு மொழியினின்றும் சிறிது வேறுபட்டது. ஆயினும், தூய தமிழ்ச் சொற்கள் - சங்க காலச் சொற்கள் - இன்னும் அந்நாட்டுப் பேச்சுவழக்கிலுள்ளன. யாழ்ப்பாணத்துப் பழந் தமிழ்க்குடிகள் சிலர், பல ஆண்டுகளுக்குமுன் மட்டக்களப்புக்குச் சென்று, அங்கே குடியேறியிருந்தது முண்டு. அங்ஙனம் யாழ்ப்பாணத்திலிருந்து சென்று மட்டக்களப்பிற் குடியேறியவர்கள்தான் சுவாமிகளின் முன்னோர்கள்.

## பிறப்பு

சுவாமிகள், 1892-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27-ஆம் திகதி (கர வருஷம் பங்குனி மாதம் 16-ஆம் திகதி) ஞாயிற்றுக்கிழமை, சூரியோதய வேளையில் மட்டக்களப்பி லுள்ள காரைதீவு என்னும் கிராமத்திலே பிறந்தார்கள். சுவாமிகளுடைய தந்தையாரின் பெயர் சாமித் தம்பியார்; தாயாரின் பெயர் கண்ணம் மையார். கண்ணம்மையாரின் தந்தையாராகிய இராச கோபால பிள்ளை என்பார், உடுவிலைச் சேர்ந்த இராமநாதர் புதல்வரான வயிரமுத்துவின் புத்திர ராவர். கண்ணம்மையாரின் பாட்டியார், வட்டுக் கோட்டையைச் சேர்ந்த சேதுநாதரின் புதல்வியா ராவர்.

## கல்வி பயிலல்

சுவாமிகளுக்கு இளமையில் அவருடைய தந்தை யாரால் இடப்பட்ட பெயர் மயில்வாகனம் என்ப தாகும். மயில்வாகனனுர்க்கு வித்தியாரம்பம் செய்து வைத்தவர், குஞ்சுத்தம்பி ஆசிரிய ராவர். வித்தியா ரம்பத்தின் பின் சில காலம் வரை இவருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்தவர்கள் இவருடைய தந்தையா ரும், தாய்மாமன்மா ராகிய சிவகுருநாத பிள்ளை, வசந்தராச பிள்ளை ஆதியாஞேரு மாவர்.

## கவி இயற்றல்

அக்காலத்திலே, யாழ்ப்பாணத்துப் புலோலி யூரைச் சார்ந்த, பொ. வைத்தியலிங்க தேசிகரவர்கள், காரை தீவிலுள்ள பிள்ளையார் கோயிற் பூசகராய்

விளங்கிக்கொண் டிருந்தார். அவர், பூசை செய்வ தோடு நின்றுவிடாமல், அவ்வூர்ச் சைவப் பாடசாலை யின் தலைமை யாசிரியராகவும் திகழ்ந்தார். அவர் கல்வி கேள்விகளில் மிக வல்லவராயிருந்தபடியால், திருக்குறள், நன்னூல், சூடாமணி நிகண்டு, பாரதம், கந்தபுராணம் முதலிய நூல்களை வடமொழியுடன் மயில்வாகனனுர் ஓரளவுக்கு அவரிடமே பயின்ருர். யாப்பு, அணி படியாமல் விளையாட்டுப்போலப் பாட்டியற்றும் வன்மை இயல்பாக அமைந்திருந்தும், யாப்பிலக்கணம் அணியிலக்கணங்களைச் செவ்வனே படித்தறிய வேண்டுமென்னும் ஆசையால் உந்தப் பெற்று, அவற்றையெல்லாம் இவர் நன்கு கற்றுச் செய்யுள் யாக்கவும் பயின்று கொண்டார். சுவாமிகள் பன்னிரண்டு வயதினராக விருந்தபொழுது, தமது ஆசிரிய ரான குஞ்சுத்தம்பியவர்களை வழிபடுமுகத் தால்,

> " அம்புவியிற் செந்தமிழோ
> டாங்கிலமும் எனக்குணர்த்தி அறிவுதீட்டி
> வம்புசெறி வேண்கலச
> வல்லியருள் எனக்கூட்டிவைத்த குஞ்சுத்
> தம்பியெனும் பேயருடையோன்
> தண்டமிழின் கரைகண்ட தகைமையோன்றன்
> சேம்பதும மலர்ப் பதத்தைச்
> சிரத்திருத்தி எஞ்ஞான்றும் சிந்திப்பேனே."

என்று பாடினுர்கள்.

முதலில், வீட்டிலிருந்தே ஆங்கிலத்தைப் படித் துக் கொண்டிருந்தவர், 1902-ம் ஆண்டிலே கல்முனை மெதொடிஸ்த பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும்,

அதிலே படிக்க வைக்கப்பட்டார். அக்காலத்திலே, மயில்வாகனனாரின் தந்தையார், சிதம்பர தரிசனஞ் செய்வதற்காக யாத்திரைசென்று திரும்பிவந்த பொழுது, நாவலர் சரித்திரத்தையும், நாவலரெழுதிய நூல்கள் பலவற்றையும் அவருக்கெனவாங்கிக் கொணர்ந்து கொடுத்தார்கள். அக்காலந் தொடங்கி நாவலரவர்களே மயில்வாகனனார் வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளாக அமைந்தார்கள். நாவலரவர்கள்மீது சுவாமிகளுக்கு ஒரு பிரேமை ஏற்பட்டது. பிறருடன் உரையாடும் பொழுது, "நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்—சொல்லு தமிழெங்கே?" என அவர்கள் கூறுவதுண்டு. இளமையிலே கிறிஸ்து சமயப் பாடசாலைகளிலே கல்வி கற்றுக்கொண்டிருந்தமையால், கிறிஸ்து சமய தத்துவங்களையும் சுவாமிகள் நன்கு அறிந்துகொள்ளுவதற்கு இடமெழுவதாயிற்று.

## ஆசிரியர் பதவி

1906-ஆம் ஆண்டிலே, அவர் அர்ச். மிக்கேல் கல்லூரியிற் சேர்ந்து படித்து, பதினாறுவது வயது கழிவதன் முன்னதாக, கேம்பிரிச்சுப் பல்கலைக் கழகத்தாரால் நடாத்தப்பட்ட சீனியர் வகுப்புப் பரீட்சையிற் சித்திபெற்றார். அவ்வாண்டு தொடங்கி, ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் வரையில், மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் பாடசாலையிலே, மயில்வாகனனார் ஆசிரியராகத் தொண்டாற்றிக் கொண்டிருந்தார். 1911-ஆம் ஆண்டில், சுவாமிகள், தம்முடைய தாயாராகிய கண்ணம்மையார் காலஞ் சென்றுவிடவே, கல்முனையி

ளுள்ள கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்துகொண்டார்.

### தமிழாராய்ச்சி, சமய ஆராய்ச்சி

1911-ஆம் ஆண்டிலே, கொழும்பு அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் விசேட சித்தி பெற்று, ஆசிரிய வகுப்பிற் சேர்ந்து, இரண்டு ஆண்டுகள் வரையில் அவர் பயிற்சி பெற்ருர்; அக்காலத்திலே, தமிழை மேலுங் கற்றுக்கொள்ள வேண்டு மென்னும் அவாவினுல், ஆங்கிலத்திலும் பார்க்கத் தமிழ் படிப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டார். அவ்வேளையில், தமிழ் மொழியையும், சைவ சமய சாத்திரங்களையும், சங்க இலக்கியங்களையும் முறையே பாடங்கேட்டுப் படிக்கும் வண்ணம் கோப்பாயைச் சேர்ந்த பண்டிதர், எஸ். கந்தையா பிள்ளை அவர்களும், மதுரைத் தமிழ்ச் சங்க அங்கத்தவரும் வித்துவானுமாகிய எஸ். கைலாச பிள்ளையும், வித்துவான், சி. தாமோதரம் பிள்ளையும் இவருக்கு வந்து துணை வாய்ப்பாராயினர். இங்ஙனமாகக் கல்வி பயின்று கொண்டிருக்கும் காலத்திலேயே மயில்வாகனனுர்க்குக் கொழும்பு விவேகானந்த சபையுடன் தொடர்பு ஏற்படுவதாயிற்று.

### விஞ்ஞான "டிப்புளோமா" பட்டம்

இரண்டு ஆண்டுகள் வரை (1913—14) மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய அவர், 1915-ஆம் ஆண்டில், அரசினர் பொறியியற் கல்லூரியிற் சேர்ந்து மேற்கல்வி கற்கத் தொடங்கினுர். அங்கே, பேராசிரியர்களான

திரு. ஏ. எவ். யோசேப்பு, திரு. டபிள்யூ. என். றேய் என்னு மிருவரிடத்திலும் மயில்வாகனனார் விஞ்ஞானக் கலை பயின்றுகொண்டிருந்த காலத்தில், ஆய்கூடங்களில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும்போதெல்லாம் தமக்கருகிலே செகசிற்பியாருடைய நாடக நூலோ அன்றி வேறேதாவது ஆங்கிலக் கவிதைத் தொகுதியோ வைத்திருப்ப துண்டு. இங்ஙனமாக மயில்வாகனனார் கற்ற ஆங்கில நூல்களும் கவிதைகளும் பலவாகும். எங்ஙனமாயினும், விஞ்ஞானத் துறையிலும் முன்னின்று 1916-ஆம் ஆண்டில் வைக்கப்பட்ட பரீட்சையில் அவர் முதலாவது பிரிவிற் சித்தி யெய்தி, "டிப்புளோமா" பட்டமும் பெற்றுக் கொண்டார்.

## "கீதாஞ்சலி" மொழி பெயர்த்தல்

இங்ஙனமாக, ஆங்கிலப் புலவர்க ளியற்றிய கவிதைகளை யெல்லாம் பொருளுணர்ந்து படித்துக் கவித் திறனையும் சால்பினையும் செவ்வனே நுனித் தறிந்த மயில்வாகனனார், ஆங்கிலக் கவிதைகளின் நலத்தினைத் தமிழ் மக்களும் அறியும்படி செய்ய வேண்டுமென ஆவல்கொண்டோ, அன்றித் தமது மனத் திருப்திக்காகவோ, தமிழ் மொழியிற் பல பாடல்களை மொழி பெயர்த் தியற்றினர். வங்கத் துதித்த செங்கதிர் வேந்தராகிய இரவீந்திரநாத் தாகூர், உலகம் போற்றும் உத்தமக் கவிஞராய் விளங்கி, 'நோபல்' பரிசும் பெற்றுப் புகழடைந்ததைக் கண்டு அவருடைய பாடல்களையும் விருப்புடன் படித்தார். அப் பாடல்களில் மிகவும் ஈடுபட்டதன் காரணமாய் அவர்

மொழிபெயர்த் தியற்றிய பாடல்கள் பல. மயில்வாகனனுர்க்குக் "கீதாஞ்சலி" யிலும் "பூஞ்சோலைக் காவலன்" என்னும் நூலிலும் ஈடுபாடு மிகுதியா யிருந்தது. அவற்றுட் சிலவற்றை அவர்கள் மொழி பெயர்த்து வைத்திருந்து, பிற்காலத்தில், 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜய'த்திலே, கடவுள் வணக்கமாக வெளியிட்டதுமுண்டு.

## மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையிற் சித்தி

பிற மொழியி லுள்ள விஞ்ஞான நூல்களை யெல்லாம் துருவித் துருவிப் படித்துக்கொண் டிருந்தவரெனினும் அவர் தமிழ்மொழியினைச் சிறிதும் மறந்தாரல்லர்; உத்தியோகத்தையே பெரிதெனக் கருதி, ஆங்கில மோகத்தில் மூழ்கித் தமிழை மக்கள் கவனியாது விட்ட காலத்தில் — ஒருவரும் தமிழ்ப் பரீட்சையை விரும்பாத வேளையில் — மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட தனித் தமிழ்ப் பரீட்சையை இலங்கையிலிருந்தே எழுதி அதிற் சித்தியுமெய்தினர். இலங்கையிலிருந்து முதன் முதலாக மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிற் சித்தி பெற்றவர் சுவாமியவர்களே என்பதை நாம் மறந்துவிடுதலாகாது.

## சர்வானந்தர் காட்சி

இக்காலத்திலே, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்த ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தர் இலங்கைக்கு வந்திருந்தார். அப்பொழுது, பண்டித மயில்வாகனனுர் கொழும்பில் அவரை நேரிற் சந்தித்து உரையாட நேர்ந்தது. இருவரும் அளவளாவியதனல் அவர்

களிருவர்க்கு மிடையே ஒரு பெரிய பாசம் உண்டாவ தாயிற்று. உலக நிலையாமையை உணர்ந்து, தொண்டு செய்தற் கிடமளிக்கும் துறவறத்தை மேற்கொள்ள வெண்ணிப் பக்குவம் வாய்ந்த ஞான குருவைத் தேடிக் கொண்டிருந்த மயில்வாகனனுர்க்கு, ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தர் ஞானச் சுடரொளியாய்க் காட்சி யளித்தார். துறவுநெறி மேற்கொண்டு, உடல் பொருள் ஆவி மூன்றினையும் குருதேவர் திருவடிச் சேவைக்கே அர்ப்பணஞ் செய்து, அவர் காட்டியரு ளிய வழியில் நின்று, மக்களுக்குத் தொண்டு செய்யும் திறனுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் அளிக்கும் உதவியினைக் கண்டு அதிலே சேருவதற்கு மயில் வாகனனுர் மீளா ஆசை கொண்டார். இதுவே, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுடன் அவருக்கு முதன் முதலாக ஏற்பட்ட தொடர்பாகும். இதன்பின், அவ ருடைய வாழ்க்கையிலே பூரணமான தொரு மாறுதல் ஏற்படுவ தாயிற்று. சமயம், தத்துவம் முதலியவற்றில் அவருக்கு ஒரு தனி ஆராய்ச்சி விருப்பு ஏற்பட்டதும் இக்காலத்திலேதான்.

## பீ. எஸ்.-சி. பரீட்சையிற் சித்தி

1917-ஆம் ஆண்டின் முகனையிலே, அரசினர் பொறியியற் கல்லூரியில் இரசாயன உதவியாசிரிய ராக இருந்தவர், யாழ்ப்பாணத்து அர்ச். பத்திரிசியார் கல்லூரியில் இரசாயன சாத்திர விரிவுரையாளராகக் கடமையாற்றத் தொடங்கினர். அங்கே, ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் வரை தங்கியிருந்தவர், "நடக்கும் வாசிகசாலை" யெனப் புகழ் பெற்ற சுன்னுகம், திரு. அ. குமாரசாமிப் புலவருடனும் பிற தமிழறிஞர்

களுடனும் நெருங்கிய தொடர்பு பூண்டவரானர். அர்ச். பத்திரிசியார் கல்லூரியில் விரிவுரையாளராக விருக்கும்பொழுதுதான், அவர் லண்டன் பல்கலைக் கழகத்தாரால் நடாத்தப்பட்ட "பீ. எஸ்-சி." பரீட்சை யிற் சித்தியடைந்தார்.

## பிரதம ஆசிரியர் பதவி

அக்காலத்திலே, விஞ்ஞான சாத்திரத்தில் வன்மை நிரம்பப் பெற்றவர்கள் மிகக் குறைவு. அதிலும், விஞ்ஞான சாத்திரத்துடன் தமிழறிவும் மிகுந்தவராய் விளங்கியவர் சுவாமியவர்கள் ஒருவரே யாவர். மானிப்பாய் இந்துக் கல்லூரி நிருவாக சபையினர், மயில்வாகனனரின் திறமையைக் கண்டு, அவரைத் தமது கல்லூரியின் பிரதம ஆசிரியராக வரும்படி வேண்டி நின்றனர். மயில்வாகனனர், அவர்களுடைய வேண்டுகோளுக்கு இசைந்து, 1920-ஆம் ஆண்டிலே மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதம ஆசிரியராகக் கடமையேற்று, இரண்டு ஆண்டுகள்வரை கல்லூரியின் முன்னேற்றத்துக்கு வேண்டியவற்றைச் செய்துகொண்டிருந்தார். கல்லூரித் தலைமையைத் தாங்கும் பொறுப்புடன், விஞ்ஞான சாத்திரம் கற்பிக்கும் பொறுப்பையும் மயில்வாகனனரே ஏற்று, விஞ்ஞான சாத்திர ஆய்கூட மொன்றனையும் அங்கே ஏற்படுத்தினர்.

இவைமாத்திரமன்றி, லத்தீன் படிப்பிக்கும் ஆசிரியர்கள் வராத வேளைகளிலே, அதைப் படிப்பிக்க அவர்கள் தாமே முற்பட்டுச் சென்று, லத்தீன், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளினதும்

தாரதம்மியங்களை எடுத்துக் காட்டுவார்கள். அக் காலத்தில் ஒருமுறை, வேர்ஜில் என்பார் இயற்றிய "எயினேயிட்" என்ற நூலின் ஒரு பகுதி சீனியர் வகுப்புலத்தின் பாடத்துக்கென விதிக்கப்பட்டிருந்தது. அதற்கு அவர் தாம் மொழிபெயர்த் தியற்றிய "எயினேய காவியம்" என்ற நூலிலிருந்து தமிழ் மொழி மீது அபிமானம் பொங்கியெழும்படி, தீஞ்சுவை சொட்டச் சொட்ட, பகுதிகளை எடுத்துக் காட்டுவார்; ஆங்கிலத்திலே சேக்ஷ்பியர், பேக்கன் ஆதியானவர்களுடைய நூல்களைக் கற்பிக்க நேர்ந்தால், அவர்களுடைய பெயர்களுக்கே செகசிற்பியார், பேக்கனூர் எனத் தமிழ் மணம் ஊட்டி, ஈடாகச் சங்க நூல்களிலிருந்து பொற்குவையல்கள் எனும்படி மேற்கோள்களை எடுத்தெடுத்துக் குவிப்பார்.

பிரதம ஆசிரியராயிருந்த காலத்திலே, மயில்வாகனனார், மாணவர்களை நோக்கி, "சிவபெருமான் காட்சி தந்து உங்களுக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டால், நீங்கள் என்ன கேட்பீர்கள்?" என்று வினவியபொழுது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பதிலளித்தார்கள். சுவாமிகளோ, "நானென்றால் முத்தி தரும்படி கேட்க மாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க, எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதானால் அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது. ஆனபடியால் சேவை செய்ய வரம் தா—என்றிப்படியாகக் கேட்பேன்." என்றார்கள். துறவியானபின்பு, சுவாமிகள் தாம்-இயல்பாக-நெடுநாளாகவே விரும்பிய பெருஞ் சேவையிலேதான் ஈடுபட்டுக்கொண் டிருந்தார்கள்.

## பரீட்சக ராதல்

அக்காலத்தில் யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் சீரான நிலையில் இருக்கவில்லை. அதனைக் கவனித்துக்கொண்டிருந்த பண்டித மயில்வாகனனர், தமிழறிஞர் பலருடன் கூடி ஆலோசித்து, சங்கத்தைப் புதுக்கி யமைப்பித்தார். நாளடைவில், சங்கத்தின் பண்டித பரீட்சைகளுக்குப் பரீட்சகராகவும், கௌரவ அங்கத்தவராகவும் மயில்வாகனனர் தெரிவு செய்யப்பட்டார்.

## வாழ்க்கையில் மாறுதல்

மயில்வாகனனரின் வாழ்க்கையில் மாறுதல் ஏற்படத் தொடங்கியது, 1914-ஆம் ஆண்டிலேயெனினும், 1922-ஆம் ஆண்டுவரை உலகிற்கு அது தெளிவாகவில்லை. மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமைக்காரரும் சிறந்த தமிழன்பருமாகத் திகழ்ந்து தம்முடைய பேரன்பினல் எல்லோரையும் பிணித்து வைத்திருந்த திரு. மு. திருவிளங்கம் அவர்கள் சிவபதமடைந்ததும், மயில்வாகனனரின் மனமும் மாறுவதாயிற்று. 1922-ஆம் ஆண்டில், "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்று கருதிப் போலும், மயில்வாகனனர் சென்னையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்துகொண்டார்.

## அத்தியாயம் 2

## சென்னை வாழ்க்கை

### துறவு நிலை

மயிலாப்பூரி இுள்ள மடாலயத்திலே அவர் துறவியாதற் குரிய நியம நிஷ்டைகளை அனுசரித்துக் கொண்டிருந்தார். அவர் துறவு பூண்டு தமது உடல், பொருள், ஆவி அனைத்தினையும் தமிழுக்கும் தமிழர்க் கும் தமிழ்க் கடவுளுக்குமே அன்புடன் தந்துதவி னர். துறவு நிலையில் ஊன்றி நின்றதே, அவரு டைய பெருமை. அங்கிருந்த நாட்களிலே பெரும் பாலானவை, மக்களைக் கவரும் சொற்பொழிவுகள் நிரம்பியவையே யாம். "அறிவு நிரம்பிய பேச்சுக்கள், புத்தம் புதிய ஒளிகள், மேனாட்டுக் கலையும் கீழ் நாட்டுக் கலையும் ஒத்து இயைந்த இயைபின் இசை" என இவற்றினை எல்லோரும் கேட்டும், எண்ணியும் மகிழ்ந் தார்கள்.

### பிரபோத சைதன்யர்

அக்காலத்திலே, விஞ்ஞான சாத்திர விஷயங் களை யெல்லாம் எளிய தமிழ் நடையில் எடுத்துக் காட்டியும் எழுதியும் பரவச் செய்தல் வேண்டுமென் னும் நோக்கத்துடன், சென்னையில் "தமிழர் கல்விச் சங்கம்" என ஒரு ஸ்தாபனம் நிறுவப்பட்டிருந்தது. அதிலே முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்கள், நீதிபதி சேர். டி. சதாசிவ ஐயர், அ. ரங்கசாமி ஐயர், ச. பவானந்தம் பிள்ளை, பேராசிரியர், கே. பி. ராம நாத ஐயர், டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார், டி. வி.

கோபாலசாமி முதலியார், பேராசிரியர், டி. எஸ். சுப்பிரமணிய ஐயர், எஸ். முத்தையா முதலியார், அ. மாதவய்யர், பெ. நா. அப்புஸ்வாமி ஆதியானோராவர். அச்சங்கத்திலே அடிக்கடி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. அவ் விரிவுரைகளுக் கெல்லாம் சுவாமிகளுடைய அறிவும் அனுபவமும் பெரிதும் பயன்பட்டன. அப்போது, சுவாமிகள், விஞ்ஞான சாத்திர விஷயங்களைக் குறித்தும், கலைச் சொற்களைக் குறித்தும் தமது அபிப்பிராயங்களைப் பல பத்திரிகைகளிலும் வெளியிட்டு வந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தினரால் அவருக்கு அளிக்கப்பட்ட தீட்சா நாமம் "பிரபோத சைதன்யர்" என்பதாகும். தீட்சா நாமத்தைப் பிரமசரிய ஆசிரமப் பெயர் என்றுங் குறிப்பதுண்டு.

## சுவாமிகளும் சுத்தானந்தரும்

சுவாமிகள் அங்கிருந்த பொழுது, "இராமகிருஷ்ண விஜயம்" என்னும் தமிழ்த் திங்கள் வெளியீட்டுக்கும், "வேதாந்த கேசரி" என்னும் ஆங்கிலத் திங்கள் வெளியீட்டுக்கும் ஆசிரியரானார். அக் காலத்திலேதான் மகாமகோபாத்தியாய தக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர். உ. வே. சாமிநாதையருடன் தொடர்பு ஏற்படுவ தாயிற்று. சென்னையிலும் பிறவிடங்களிலுமுள்ள தமிழறிஞர்களுடன் அளவளாவிக் கொண்டதும் இக்காலத்திலேயே யாகும். தமிழ்க் கவிஞரும் யோகியுமான சுத்தானந்த பாரதியாரவர்கள் சுவாமிகளுடன் அளவளாவத் தொடங்கியதும் இக்காலத்திலேதான்.

அப்பொழுது, சுவாமிகள் அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு எண்ணங் கொண்டிருந்தார்கள். அடிக்கடி சுவாமிகளை மடாலயத்திலே சந்தித்து உரையாடிக்கொண்டு வந்த யோகிகள், "விவேகானந்தர் உபநிஷத்தைக் கொண்டு உலகெல்லாம் வேதாந்த முழக்கஞ்செய்தது போலவே, தாங்கள் திருவாசகத்தைக்கொண்டு மேற்கும் கிழக்கும் சித்தாந்தச் சங்கு முழக்குங்கள்" என்று ஒருநாள் சுவாமிகளுக்குக் கூறினார்கள். அதற்குப் பதிலாக, சுவாமிகள், "பலருக்கு அழைப்புண்டு, சிலரே தேரப்படுவர். (Many are called; few are chosen) சிலரே எண்ணிய தியற்றும் திண்மையுடையார்" என்று விடையிறுத்தார்கள்.

சுவாமிகளிடம், தமது கவிகளை யோகிகள் காட்டுவதுண்டு. சுவாமிகள், கவியிலக்கணத்தை அவருக்குச் சொல்லி, அவருடைய வாக்கு எப்படி நயம் பெற்றது எனவும், என்ன வகையில் இன்னும் நயம்பெற வேண்டும் எனவும் விளக்கமாக எடுத்துக்கூறுவார்கள். யோகிகளது விருத்தப் பாடல்களையே சுவாமிகள் பெரிதும் மெச்சுவதுண்டு. சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக் காதையில் யோகிகளுக்கிருந்த சில ஐயங்களை அவர் சுவாமிகளிடமிருந்து கேட்டுத் தெளிந்ததுண்டு.

யோகி சுத்தானந்தர், சென்னையிலே தமக்கு அமைதி வேண்டும் போதெல்லாம் இராமகிருஷ்ண மடாலயத்துக்குச் செல்வதுண்டு. ஒரு நாள், அப்படிச் சென்ற யோகிகள், சுவாமி யதீஸ்வரானந்தரைப் பார்த்தபின், "இங்கே விபுலானந்த நாவலர் இருக்கிறாரோ?" என வினவினர். கேட்டது கேட்குமுன், "இருக்கிறார், வருக" என்று சொல்லிக் கொண்டு

சுவாமிகளே நேரில் வந்துவிட்டார்கள்; வந்து, "வருக" என அழைத்துச் சென்று, "கொஞ்சம் தேயிலைப் பானம் அருந்துங்கள்" என்று வேண்டினார்கள். அப்பொழுது, யோகிகள், "நான் பருகும் பானம் நீர், இளநீர், பால் இம்மூன்றே." என்று கூறி மறுத்ததைக் கண்டு வியந்து, எதிரேயிருந்த வங்காளிக்கு, "தேயிலை வேண்டாத துறவி" என்று சுட்டிக்காட்டினார்கள். உடனே, யோகிகள்,

> * "**தேயிலை வேண்டேன் சிறந்த தமிழமுத**
> **வாயினி லூறும் மணி மொழியா!—தாயிலை**
> **மேனிலையி லேற்ற வெறியூறும் ஆனந்தப்**
> **பானமே தாராய் பணிந்து.**" என்றார்கள்.

சுவாமிகள், அதைக்கேட்டுப் புன்னகை பூத்தவராய், தேநீர் பருகிக்கொண்டே,

"தேயிலை தேயிலை தேயிலை வேட்கை" என்றார்கள்.

## மதுரைத் தமிழ்ச் சங்க அங்கத்தினராதல்

சுவாமிகள், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய சபையில் அங்கத்துவம் வகித்துக்கொண்டு அச்சங்கத்தாரால் நடாத்தப்படும் பண்டித பரீட்சைக்குப் பரீட்சகராகத் திகழத் தொடங்கியதும் இக்காலத்திலேயே யாகும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார், சங்க ஆதரவில் நடத்திக் கொண்டிருந்த "செந்தமிழ்" என்னும் திங்கள் வெளியீட்டிலே சுவாமிகள் எழுதிய

*தேயிலை = தேய் + இலை = உடல் நலத்தைத் தேய்க்கும் இலை; தாயிலை = தாய் + இல்லை = தாய் நாட்டை.

இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மிளிர்ந்தன. சுவாமிகளது கட்டுரை மாண்பினையும் ஆராய்ச்சித் திறனையுங் கண்டு, தமிழுலகம் அவரைப் போற்றத் தொடங்கியது.

## ஈழத்தார் அழைப்பு

அந்தக் காலத்திலேதான் கொழும்பு மாநகரத்தில் ஒரு சர்வகலாசாலை புதுவதாக நிறுவப் பட்டது. சுவாமிகளின் திறனையும், அவர்களுக்குக் கிடைத்த பலவாய சிறப்புகளையும், ஒரே நோக்காக நோக்கிக் கொண்டிருந்த ஈழத் தமிழர்கள், சேர். பொன்னம்பலம் அருணசலம் அவர்களைத் தலைவராகக் கொண்டு கொழும்பி லிருந்த சைவ பரிபாலன சபை, விவேகானந்த சபை முதலிய பல சங்கங்களின் சார்பாக, தாங்கள் புதுவதாக நிறுவிய சர்வகலாசாலைக்குத் தமிழ்ப் பேராசிரியராக வரும் வண்ணம் சுவாமிகளை வேண்டி நின்றூர்கள். அக்காலத்தே சர்வகலாசாலையின் பிரதம ஆசிரியராயிருந்த பேராசிரியர், ஆர். மார்ஸ் அவர்களும், சுவாமிகளைச் சர்வகலாசாலையிற் பணிபுரியும் வண்ணம் பெறுவதற்கு மிகவும் முயன்று கொண்டிருந்தார்கள். ஆயினும், இராமகிருஷ்ண மடாலய நியம விதிகளின் படி, சுவாமிகள் அப்பதவியை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. சேர். பொன்னம்பலம் அருணசலம் அவர்கள் சுவாமி சர்வானந்தருக்கு எழுதியபொழுது, சர்வானந்தர் மடாலய நியம விதிகளின்படி சுவாமிகளை ஆசிரியராக அனுப்ப வியலாம லிருப்பதற்குத் தாம் வருத்த மடைவதாகப் பதி லெழுதியிருந்தார்.

## தீட்சை பேறல்

"பண்டிதர், மயில்வாகனனார்" எனவும் "பிரபோத ஷசைதன்யர்" எனவும் அழைக்கப்பட்டவர், "சுவாமி விபுலானந்தர்" என அழைக்கப்படத் தொடங்கியது, 1924-ஆம் ஆண்டு சித்திரைமாதப் பௌர்ணமை முதலாகும். அன்றே சுவாமிகள் துறவுத் திருநாமத்தைப் பெற்றார். விபுலாநந்த அடிகளது துறவற நிலைக்குக் காரணமாய்த் திகழ்ந்தவர் சுவாமி சர்வானந்தரே யாயினும், துறவுக்குரிய தீட்சை செய்தவர், சுவாமி சிவானந்தரே யாவர்.

## குரு வணக்கம்

சுவாமி விபுலானந்தர், தமது குருவாகிய சுவாமி சிவானந்தரையே என்றும் போற்றிக் குருவணக்கஞ் செய்வதுண்டு; தாம் நிகழ்த்தும் விரிவுரைகளிலும், எழுதும் கட்டுரைகளிலும், இடம் வாய்க்கப்பெறும் பொழுதெல்லாம், தம் குருநாதரை வணக்கஞ் செய்வார். சுவாமிகள் இயற்றிய மகாலட்சுமி தோத்திரத்தில்,

"...................................

இகபரத்து வருபொருளைத்
தினைபொறுத்த துணைமதியாச்
சிவானந்த வருட்குரவன்

புனிதவடித் தொண்டேனு மெய்ப்
பொருள் படைத்த பெருமையினேன்"

எனத் தமது குருநாதரைப் போற்றுதலை யாம் காண்கின்றோம். சுவாமிகளின் மங்காத குருபக்தியானது

"குருசரண ஸ்தோத்திரம்" என்னும் வணக்கத்தின் வாயிலாக வெளிவருகின்றது.

"ஈசனருள் மெய்ஞ்ஞான வொளிவிளக்கந் திருத்தி
இழிந்துழன்ற வாருயிரை யிருக்கையினி லிருத்தி
ஆசையெனுங் கனலவித்திவ் வேழையையன் றுண்ட
அணிமலர்ச்சேஞ் சேவடியை யனைத்தினையும் விளக்
தேசுசெறி பிரதியென்கோ சஞ்சீவி யென்கோ [கும்
திருவருளின் மழைபொழியும் செழியமுகி லென்கோ
பாசமொன்று நீர்மைதரப் பரிந்துவந்தேன் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே."

"காரிரும்பு நிகர்மனத்தைப் பொன்னாக்கி யுளத்திற்
கருதியவெல் லாமளித்துக் கரைகாணுப் பிறவி
ஆரிரும்பௌ வங்கடக்க வருள்செய்தெனை யாண்ட
அணிமலர்ச்சேஞ் சேவடியை யனைத்தையும் பொன்
சீரிலகு மணியென்கோ பதுமநிதி யென்கோ [னுக்கும்
தெய்வமுத்திக் கரைசேர்க்குஞ் சிந்ததெப்ப மென்கோ
பாரிலொன்று நீர்மையவாய்ப் பரிந்துவந்தேன் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே."

"நோவொழிய வினைப்பகற்றி நுவலநின்ற முதுமை
கோய்மரண முறுதலிலாத் தேவர்நிலை பெறுதற்
காவனசெய் தானந்த நிறைவினையன் றளித்த
அணிமலர்ச்சேஞ் சேவடியை யடைந்தவரைப் புரக்
தேவதரு நிழலென்கோ தெள்ளமுத மென்கோ [கும்
சிவானந்த நிதிபொதிந்த செழும்பேழை யென்கோ
பாவமொன்று நீரமைந்து பரிந்துவந்தேன் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே."

என்பனவற்றிலே சுவாமிகள் குரு வணக்கஞ் செய்யுந் திறம் புலனாகின்றது.

### குருப் பட்டமும், ஞானியார்மடம் தமிழ் மாநாட்டுத் தலைமையும்

சுவாமிகளுக்குக் குருப் பட்டஞ் சூட்டிப் புது நாமகரணமுஞ் செய்யப்பட்ட பின், அவருடைய புகழ் யாண்டும் விரைவாகப் பரவத் தொடங்கியது. சுவாமிகளுடைய தமிழறிவினையும் சமய சாத்திர ஆராய்ச்சியையும் அறிஞர்கள் கண்டு, திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்தில் நடைபெற்ற வருடாந்தத் தமிழ் மகாநாட்டினைத் தலைமைதாங்கி நடத்தும்படி வேண்ட, அவர்களும் அதற் கியைந்து மகாநாட்டினைச் சிறப்புற நடத்தி முடித்தார்கள்.

## அத்தியாயம் 3

## இலங்கை மீட்சி

### இலங்கை செல்லுதல்

சில காலம் வரை இந்தியாவிலேயே தங்கியிருந்த சுவாமிகளை இலங்கை மக்கள் அழைத்தார்கள். எனவே, 1925-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சுவாமிகள் இலங்கைக்கு வந்து, காலி, நாவலப்பிட்டி, கண்டி, மாத்தளை, தொப்பித்தோட்டம், வதுளை முதலிய ஊர்களிலெல்லாம் சொற்பொழிவாற்றினார்கள்; அதன்பின், தமது பிறந்த ஊருக்குச் சென்று சில நாட்கள் வரை தங்கியிருந்தார்கள்.

### மட்டக் களப்பில் ஆங்கிலக் கலாசாலை

அவ் வேளையிலே, மட்டக்களப்பிலே ஒரு ஆங்கிலக் கலாசாலையினை அமைத்துக்கொள்ள வேண்டும்

என அவர்கள் ஆவல் கொண்டார்கள். தமது ஆவலை நாட்டவர் எல்லோருக்கும் எடுத்துக்கூறி ஆலோசிப்பதற்காக அவர்கள் விரைவில் ஒரு மகா சபை கூட்டினார்கள். அம் மகா சபையில், அங்ஙனமாக ஒரு ஆங்கிலக் கல்லூரி அவசியம் அமைக்கப்படுதல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணம் செல்லுதல்

இந்தியாவிலிருந்து திரும்பிய பின் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லையென நினைந்து, யாழ்ப்பாண மக்கள் சுவாமிகளை யாழ்ப்பாணம் வரும் வண்ணம் அழைத்தார்கள். சுவாமிகள், அவர்களுடைய அழைப்புக்கு இணங்கி யாழ்ப்பாணத்துக்குச் சென்று, யாழ்ப்பாண மாணவர் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியதுமன்றி, சைவ மாணவர் சங்கத்திலும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

அக்காலத்திலே காரை தீவு, ஆனைப்பத்தி, மண்டூர், ஆரப்பற்றை என்னும் ஊர்களில் மட்டக்களப்பு விவேகானந்த சபையின் ஆதரவிற் பாடசாலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப் பாடசாலைகளெல்லாவற்றையும் பராமரிக்கும்பொறுப்பு,1925-ஆம் ஆண்டு யூன் மாதம், சுவாமிகளைச் சேர்வதாயிற்று. சுவாமிகள் தமது பராமரிப்பிலிருந்த பாடசாலைகளை ஆறு ஆண்டுகள் வரை மிக முயன்று திருத்தி யமைத்தார்கள். சுவாமிகள், அப் பாடசாலைகளின் பராமரிப்பினை ஏற்று மானேசராக இருந்த காலத்தில், தாராள மனப்பான்மையோடும் விரிந்த நோக்கத்தோடும் - தம்முடைய சொந்த நன்மைகளைக் கருதாமல் - பாடசாலை

களின் நன்மையை மாத்திரமே கருதி நடந்து வந்தார்கள்.

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஈழநாட்டுப் பிரதிநிதி

1925-ஆம் ஆண்டு யூன் மாதத்தில், மகா மகோபாத்தியாய சாமிநாதையருக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் பொற்கிழி அளிப்பதற்காக ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அவ் விழாவுக்கு ஈழ நாட்டு வித்துவான்கள் பிரதிநிதியாகச் சுவாமியவர்களே சென்றூர்கள். விழா முடிந்த பின், அடுத்த நாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சுவாமிகள் ஒரு விரிவுரை நிகழ்த்திவிட்டு இலங்கைக்குத் திரும்பி வந்தார்கள்.

## பிரசாரமும் பாடசாலைகளும்

திரும்பி வந்து, இரண்டு மாதங்கள் வரை, சுவாமிகள் பல இடங்களுக்குஞ் சென்று சமயப் பிரசாரம் செய்துகொண்டிருந்தார்கள். அவற்றுள்ளே, கொழும்பு, நாவலப்பிட்டி, கண்டி, அநுராதபுரம் ஆதியான இடங்களிற் சுவாமிகள் செய்த விரிவுரைகளும் பிரசாரமும் குறிப்பிடப்பட வேண்டியவை.

சுவாமிகளின் பிரசாரத்தில் ஈடுபட்டுப் பெரிய தொண்டுகளை இயற்றுவதற்கு முன் வந்தோர் பலர். சுவாமிகளின் மாமனுராகிய இராமநாத பிள்ளை என்பவர், தமது காணிகளை யெல்லாம் பொதுநலத்துக்காக அளித்தது மல்லாமல், காரை தீவிலே பெண்கள் கல்வி கற்பதற்கெனச் சாரதா வித்தியாலயத்தையும் ஏற்படுத்தினுர். அவ் வித்தியாலயத்துக்குச் சுவாமிகளே, 1925-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28-ஆம் திகதியன்று, அத்திவாரக் கல் நாட்டினுர்கள்.

## அத்திவாரக் கற்கள் நாட்டல்

மட்டக் களப்பிலே ஒரு ஆங்கிலக் கலாசாலையை நிறுவ வேண்டுமென்று பல நாட்களாகச் சுவாமிகள் முயன்று கொண்டிருந்தார்கள். சாரதா வித்தியாலயம் அமைக்கப் பட்டதைக் கண்டதும், கல்லடியுப் போடையிலே பிரபல தனவந்தர்களாகத் திகழ்ந்து கொண்டிருந்த கதிர்காமத் தம்பி உடையார், சபாபதிப் பிள்ளை உடையார் என்பவர்களின் சந்ததியினர், பெருநிதி அளித்தனர். எனவே, 1925-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ஆம் திகதியன்று, சுவாமிகளே, கல்லடியுப் போடையிலமைந்த சிவானந்த வித்தியாலயத்துக்கும் அத்திவாரக் கல் நாட்டினார்கள். வெறும் மணல் வெளியாகவும் சுடலை மைதான மாகவுமிருந்த இடத்திலேதான், அத்திவாரக் கல் நாட்டப் பட்டது. படர்ந்த காயான் பற்றைகளும், அடர்ந்த இரண்டொரு முந்திரிகைச் செடிகளும் கொடுத்த நிழலே அந் நிலத்துக்குக் குளிர்ச்சி அளித்தது. அப்போது, அந்த நிலைமையிலிருந்த 'பாலைவனம்' இப்போதைய 'சோலை வனம்' ஆகுமென்று எவரும் எதிர்பார்த் திருக்கவில்லை.

சிவானந்த வித்தியாலயத்துக்கு அத்திவாரக் கல் நாட்டி ஒரு மாத காலம் கழியுமுன், திருக்கோணமலை ஆங்கிலக் கலாசாலைப் புதுக் கட்டிடத்திற்கும் சுவாமிகளே அத்திவாரக் கல் நாட்டினார்கள்.

## கல்விப் பகுதி அங்கத்தினர் ஆதல்

யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணை வைத்தீசுவர வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம் என்

னும் பாடசாலைகளை நடத்துகின்ற பொறுப்பும், 1926-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் திகதி தொடக்கம் சுவாமிகளையே சார்வ தாயிற்று. மார்ச்சு மாதத்தில், விவேகானந்த சபையினரின் வேண்டு கோளுக் கிணங்கி, சுவாமிகள் கொழும்பு நகரில் விவேகானந்த வித்தியாலயத்தைத் தொடங்கி வைத் தார்கள்.

அம் மாதத்தில், திருக்கோணமலை மட்டக்களப்புப் பகுதிகளில் கல்வி விஷயங்களை ஆராய்கின்ற சபை யின் அங்கத்தினராக, இலங்கை அரசாங்கத்தின் கல்விப் பகுதியினர், சுவாமிகளை நியமித்தார்கள். அச் சபையிலே சுவாமிகள் அங்கத்தவராக இருந்த பொழுது, அவர்கள் செய்த பெரும் பணிகள் பல.

### மாணவர் இல்லம்

கல்கத்தாவிலுள்ள வேலூரில் அமைந்திருந்த இராமகிருஷ்ணத் தலைமை மடத்திலே, 1926-ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதத்தில் நடைபெற்ற மகாநாட் டுக்குச் சுவாமிகளே இலங்கைப் பிரதிநிதியாகச் சென்றார்கள்; திரும்பிவந்து சில நாட்கள் கழியுமுன், வைத்தீசுவர வித்தியாலயத்தின் சார்பாக, அனாதைச் சிறுவர்களுக்கென ஒரு மாணவர் இல்லம் ஏற்படுத்தி னார்கள்.

### அண்ணாமலைப் பல்கலைக் கழக முயற்சி

தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவ 1927-ஆம் ஆண் டில் சென்னை மாகாணத்தில் ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட்டது. இராமநாதபுரம் அரசர் அதற்குத்

தலைமை வகித்தார். அப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் வேண்டுகோளுக் கிணங்கி மதுரைக்குச் சென்று முதலாவதாகச் சுவாமிகளே சாட்சிய மளித்தார்கள். அதன் பயனாகவே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப்படுவ தாயிற்று.

## காந்தியடிகளை வரவேற்றல்

மதுரையினின்றுந் திரும்பி வந்து, சுவாமிகள், தாம் தொடங்கிய கல்லடியுப்போடையிற் கட்டப்பட்டுக் கொண்டிருந்த சிவானந்த வித்தியாலய விஷயங்களைக் கவனித்ததுமன்றி, பற்பல விடங்களுக்குஞ் சென்று விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். 1927-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ஆம் திகதி கண்டிச் சைவ மகா சபை ஆண்டு விழாவுக்கு அவர்கள் தலைமை வகித்தார்கள். நவம்பர் மாதம் 26-ஆம் திகதியன்று நடைபெற்ற யாழ்ப்பாண மாணவர் மகாநாட்டுக்கும் சுவாமிகளே தலைமை வகித்தார்கள். அடுத்த நாள், இலங்கைக்கு விஜயம் செய்த காந்தி அடிகளாரைச் சுவாமியவர்களே 'மாணவர் மகாநாட்டுத் தலைவர்' என்னும் முறையில் வரவேற்றார் என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

## திருக்கோண மலை செல்லல்

ஐந்தாறு ஆண்டுகளாகத் தாம் பொறுப்பேற்று நடத்திய பாடசாலைகளின் பொறுப்பினைப் பிறரிடம் ஒப்படைத்து விட்டு, சுவாமிகள், திருக்கோணமலை ஆங்கிலக் கலாசாலையை வளர்த்துச் சிறப்பளிக்கும் நோக்கத்துடன், அப் பாடசாலையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள்.




சிவானந்த வித்யாலயம் [25ம் பக்கம்

## சிவானந்த வித்தியாலயத் திறப்பு

சுவாமிகள் வெகுவாக முயன்று அமைப்பித்த சிவானந்த வித்தியாலயத் திறப்பு விழா, 1929-ஆம் ஆண்டு மே மாதம், நடைபெறுவதாயிற்று. இலங்கை இராமகிருஷ்ண மிஷனுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட சிவானந்த வித்தியாலயத்தையும் அதனைச் சேர்ந்த நிலத்தையும், இராமகிருஷ்ண மிஷனுக்காகச் சுவாமிகளே கையேற்றார்கள்.

சிவானந்த வித்தியாலயத்தினைப் பற்றி, அவ் வித்தியாலயத்தின் பண்டிதரொருவர் எழுதியவற்றை நோக்குங்கால், "சிவானந்த வித்தியாலயம்" என்னும் கலைக் கோயிலைப் பற்றிய பல விஷயங்கள் தெளிவாகும்:

"அன்றைய சுடலை, இன்று, ஒரு 'சாந்தி நிகேதனம்' ஆக விளங்குகின்றது. 18 மாணவர்களுடன் தொடங்கப் பெற்ற நிலையம், இன்று 500-க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டதாய், இப் பகுதியிலேயே மிகச் சிறந்த ஸ்தாபனமாக வளர்ந்துள்ளது.

## இலவச விடுதி

"ஆங்கில நாகரிகப் புயலானது கிழக்கு நோக்கி வீசி அனைத்தையும் தன்னகம் வாரிக்கொண்டதனால், 'அன்ன நடை நடந்து தன்னடையும் கெட்ட காக்கைகளாக' மக்கள் வாழ நேரிட்டபொழுது, சுவாமிகள், மட்டக் களப்பு முழுவதும் நல்வழி பற்றி நடக்க, இவ்வாங்கிலக் கலாசாலையை நிறுவினார். தேசீய மனத்தோடு ஆங்கில அறிவை ஊட்டி நாட்டை

நலம்படுத்த அவர் கொண்ட மனக்கோள் எதிர்பாராத விதத்தில், பலன் தரும் வழியில் நிறைவேறிற்று. கிழக்கே அலைகடற் புருவமும், மேற்கே மட்டக் களப்பு வாவியின் கரை சார்ந்த தென்னந் தோப்பு கள் நிறைந்த கிராம ஒழுங்கும் கொண்டு நடுவண் அமைக்கப் பெற்ற வித்தியாலயத்துக்கு, சுவாமிகள் தமது குருவும் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரது பேரருட் சீடரு மான ஸ்ரீ சிவானந்த சுவாமிகளது திருநாமத் தைச் சூட்டி மகிழ்ந்தனர். ஏழை மாணவரும் உயர்ந்த கல்வி கற்று முன்னேற உதவி புரிவதற்காக இலவச விடுதி ஒன்றையும் அடிகள் ஏற்படுத்தியமை பெரும் பயனளிப்ப தாயிற்று.

"பாஷை காட்டி ஆசை யூட்டி மதமாற்றஞ் செய் யும் கொடிய அரக்கன் ஓட்டம் பிடித்தான். மக்கள், சொந்த மதத்தையும், சொந்தக் கலையையும், சொந்தப் பண்பாட்டையும், சொந்த நாகரிகத்தையும் வளர்க்க வழி கண்டனர். சுவாமிகளுடைய உள்ளம் பூரித்தது. அவர் தமது வாழ்க்கையின் முக்கிய பாகத்தை இப் பணியிற் செலவழித்தார்; வாழ்வை யும் பலகாலம் இங்கேயே கழித்தார். இராமகிருஷ்ண மடத்துப் பெரியோரும் இச் சேவையைப் பாராட்டி ஆதரவு தந்தனர்.

### கலாநிலையச் சிறப்பு

"கலை வளர்ந்தது. மக்கள் நிலை உயர்ந்தது. பழு நிலை நாடிவரும் பறவைகள் போல இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர் இக் கலா நிலயத்தை நோக்கி விரைந்தனர். பக்கத்துக் காட்டு எல்லை



குரு தேவராலயம்



சிவபுரியில் அடிகள் தங்கியிருந்த அறை

[27ம் பக்கம்

ஒடுங்கியது. பாடசாலை எல்லை அகன்றது. உள்ளூரவரும், மற்றைய பாகங்களிலிருந்த பல பெரியோரும் புது வேலைகளுக்காகப் பணம் கொடுத்தனர். வித்தியாலய ஆசிரியர்களே தமது சம்பளப் பணத்தையும் விடுத்தனர். புதுப் புதுக் கட்டிடங்கள் தோன்றி நின்றன. விடுதிச் சாலைகள் விரித் தமைக்கப்பட்டன. 'சித்திர கூடம்' 'கமலாலய'த்தையும் கூடக் கொண்டது. 'சிவபுரி' சுவாமிகளின் ஆசிரமமாகத் தோன்றிற்று. கழுநீர்த் தொட்டிகளும், மல்லிகைத் தோட்டங்களும், ரோஜாப் பந்தர்களும் ஆங்காங்கே எழில் பெற முளைத்தன. சில காலத்துள் 'ஆசாரிய மந்திர'மும் (Principal's Quarters), 'சாரதை பவன'மும் 'இரத்திலைய'மும் எழுந்து நின்றன. விஞ்ஞான சாலைகளும், இலக்கிய மன்றங்களும் விரிந் தமைந்தன. சிறந்த நூல் நிலையமொன்று திறக்கப் பெற்றது. தண்ணீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டன. மா மரங்களும், வேம்பு மரங்களும் பாலை நிலத்தைப் பசுந் தரை யாக்கின. மின்சார விளக்குகள் பூட்டப்பெற்றன. குரு குலத்திலிருந்து குற்ற இருள் ஓட்டப்பட்டது. சங்கீத வகுப்புகளும், சமய வகுப்புகளும், யோகாசனப் பயிற்சிகளும் செவ்வனம் நடந்தன. இதனால், உள விருத்தியும் உடல் விருத்தியும் சிறப்புற நல்ல சமூக வாழ்க்கைக் கேற்ற முறையில் மாணவர்கள் பயிற்றப் பட்டார்கள். இவ்விடத்தின் மத்தியில், ஆதியில் சமையற் கூடமாய் அமைந்து, சுவாமிகள் கண்ட கனவுப்படி, பின்னர்க் குருதேவ ராலயமாக மாற்றப் பெற்ற சிறு கோயிலில் உறையும் பரமஹம்ச தேவர், சகல இன்னல்களையும் துடைத்து, அனைவரையும் அவ்வப்போது ஆசீர்வதித்து வந்தார்.

"சிலகாலம் விபுலானந்த அடிகளாரே, வித்தியாலயத்தின் அதிபர் (Principal) ஆக இருந்து, சகல துறைகளையும் நேரிற் கவனித்து நல்ல முன்னேற்ற மடையச் செய்தனர்.

## மாணவர் தமிழ்ப்பற்று

"மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் தமிழ்ப் பண்டிதரும், லண்டன் நகரப் பல்கலைக் கழகத்துப் பௌதிக சாஸ்திரப் பட்டதாரியும் (B. Sc) பயிற்றப் பட்ட ஆங்கில ஆசிரியருமாயிருந்ததோடு கணித சாத்திரத்திலும், ஆங்கில இலக்கியங்களிலும், மானத சாத்திரத்திலும், அடிகளார், துறைபோகக் கற்ற வித்தகக் கலைஞர். ஆசிரியராய் மாணவர்களது தனிப் பண்புகளை அறிந்து சுவைபடக் கற்பிப்பதில் சுவாமிகள் சிறந்த வல்லுநர். ஆங்கிலங் கற்கும் மாணவர்களுக்குத் தமிழில் உண்டாகும் அக்கால வெறுப்பு, இவருடைய மாணவர்களிடம் இல்லாத தாயிற்று. தமிழின் நறுந்தீஞ் சுவையை இவர்களிடம் அனுபவித்த மாணவர்கள், சிவானந்த வித்தியாலயத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், கொழும்புச் சர்வகலாசாலையிலும், யாழ்ப்பாணம், மதுரை, சென்னை முதலிய இடங்களிலும் மிகப் பலருளராவர்.

## புலவர் வகுப்பு

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்ற இலக்குக் கேற்ப விஞ்ஞான சாத்திரத்தைத் தமிழொடு கலந்து சுவாமிகள் தாமே இங்குக் கற்பித்தார்கள்;

உயர்ந்த தமிழிலக்கிய இலக்கணங்களை அறிந்து ரசிக்கச் செய்வதற்காக, வளர்ந்தோர் சிலருக்கு என்று பிரத்தியேகமாக 'புலவர் வகுப்பு' ஒன்றை நிறுவினர்கள். தமிழினை முற்ற ஒருவன் அறிய வேண்டில், சமஸ்கிருதமும் நன்கு கற்க வேண்டுமென்பது சுவாமிகளது முடிபு; எனவே, ஒரு சமஸ்கிருத வகுப்பும் உடன் நிறுவப்பட்டது. புலவர் வகுப்பினர், சமஸ்கிருதமும் கற்றனர். புலவர் வகுப்பு நடக்கும்போது, மாணவர் யாவரும், புலவர்களென்றே அழைக்கப்பட்டார்கள். சுறுசுறுப்பாகவும் உணர்ச்சியுடனும் இது நடக்கச் சுவாமிகளே தலைமைப் புலவராகவும், புலவர்களின் ஆசிரியராகவுமிருந்தார்கள்.

## புலவர் மன்றம்

" வகுப்பின் முதல் நாள், இறை வணக்கத்தின் பின், சுவாமிகளே தமது கம்பீரமும், சாதுர்யமும், கவித்துவமும், கவர்ச்சியும் நிறைந்த குரலில்,

**" பூவார் சோலை மயிலாடப்**
**புரிந்து குயில்க ளிசைபாட**
**காமர் மாலை அருகசைய**
**நடந்தாய் வாழி காவேரி "**

எனும் சிலப்பதிகார அடிகளைப் படித்து, அவற்றை மாணவரை எழுதிக் கொள்ளச் சொன்னர்கள். பின்னர் கையினல் தாளம் போட்டுக் கொண்டே சீரறுத்து, அடிகள் இரண்டு முறை அவற்றைப் பாடினர். மூன்ரும் முறை "தான தான

தனதான" என்று இசை ஏற்பத் தொடர்ந்து எல்லோரையும் பாடச் செய்தனர். அவர் பாடிய 'தரு' விலிருந்து சீர் வகுத்து அப்படியே சீரும் அசையும், சொற்ப நேரத்துள் மிக இலகுவாகக் கற்பிக்கப் பெற்றன. உடனே பாட்டுக்கள் புனையும்படி எல்லோருக்கும் கட்டளை பிறந்தது. காரிகை கற்காதே கவிபாட 'இசை' புரியும் உதவியை அடிகள் நன்கு காட்டினார்கள். இதனால் உடனே கவி பாடக் கற்றுக்கொண்ட மாணவர் அனைவரையும் "நமது புலவர் மன்றம்" என்று அன்பொழுக அடிகளார் குறிப்பிடும்பொழுது, யாவரும் களிமகிழ் வெய்துவர். இவ்வாறு தமிழ் மணம் கொழிக்கும் ஒரு ஆங்கில மலராக அவர்கள் இவ் வித்தியாலயத்தை ஆக்கினார்கள். ஆங்கிலம், கணிதம், தமிழ், விஞ்ஞான சாத்திரம் முதற் சகல பாடங்களிலும் மாணவர்கள் திறமையான சித்தி பெற்று வந்தனர்.

## சமயபோதனை

"ஆங்கிலப் பாடசாலைகளின் கூட்டங்களிலும், மற்றும் ஆங்கில மயமான மகாநாடுகளிலும் இவ் வித்தியாலயத்தின் சமுகம் தனித்துத் தோன்றியது. தேசீய உடையும் தேசீய நடையும் இவ்வாறு ஆங்கிலத்தின் மத்தியில் அன்றும் இன்றும் எடுத்துக்காட்டாக நின்றுவர அடிகளார் கற்பித்தேகினார். பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலாய மதங்களின் அடிக் கொள்கைகளை யெல்லாம் எடுத்துக் காட்டும் இராமகிருஷ்ண உபதேசங்கள், மாணவர்கட்குச் சமய சமரசத்தைக் கற்பிப்பன. விவேகானந்த

ருடைய வீர கர்ச்சனைகள், மாணவரை அஞ்சாத சிங்கங்களாக்குவன. காந்தீயம், தூய சத்திய மார்க்கத்தைப் போதிப்ப தொன்று. இவற்றினை அடிப்படையாகக் கொண்ட சிறந்த சமயமும், ஒழுக்கமும் பழக்கங்களும் இவ் வித்தியாலயத்திலே முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றன. மாணவரின் கல்வி முதற் சகல பகுதிகளையும் கவனித்து அவர்கட்குள்ள தடைகளை நீக்கி உதவிபுரிய, வித்தியாலய ஆசிரியர்களிற் பலரும், இராமகிருஷ்ண சங்கத்துத் துறவிகள் இரண்டொருவரும் உடன் வதிகிறுர்கள். பாடசாலைக் கட்டிடங்களின் அமைப்பும், அமைதியான சூழலும், சதா வீசுகின்ற இனிய கடற் கொண்டற் காற்றும், இங்கு வரும் எவருக்கும் கல்வியின் மணத்தை உணரச் செய்யாம லிரா."

## சிவானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர்

1930-ஆம் ஆண்டு யூலாய் மாதத்திலே தான், திருக்கோணமலை ஆங்கிலக் கலாசாலைத் தலைமையாசிரியர் பொறுப்பினை இன்னெருவரிடம் கொடுத்துவிட்டு, அடிகள், சிவானந்த வித்தியாலயத் தலைமையாசிரியப் பதவியை ஏற்ருர்கள். அப்பொழுது சங்கத்துப் பாடசாலைகளையெல்லாம் பரிபாலிக்கும் பொறுப்பும் அவர்களையே சார்வதாயிற்று.

## அத்தியாயம் 4

# அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

### தமிழ்ப் பேராசிரியர்

செட்டிநாட்டரசர். ராஜா, சேர். அண்ணுமலைச் செட்டியார் விரும்பியபடி, சுவாமிகள், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக 1931-ஆம் ஆண்டு யூலாய் மாதத்திற் பதவி யேற்ருர்கள். தமிழ் நாட்டிலே தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியினை முதன்முதலாகப் பெற்ற பெருமை சுவாமியவர்களுக்கே உரியதாகும்.

### தீண்டப்படாதார் முன்னேற்றம்

பேராசிரியரா யிருந்த காலத்திலே, சுவாமியவர்கள், ' மாணவர்கள், நாட்டிற்கும் மொழிக்கும் சமூகத்திற்கும் எம் முறையிலே தொண்டு செய்தல் வேண்டும்' என்பதைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறுவதோடு அமையாமல் தாமும் சிறந்த தொண்டுகளைச் செய்து காட்டினர்கள். ' தீண்டாமை என்னும் பேயினை நம் நாட்டினின்றும் துரத்தல் வேண்டும்' என்று பல காலும் சுவாமிகள் கூறுவ துண்டு.

சுவாமிகளின் துணையைக் கொண்டு அண்ணுமலை நகருக்கு வடகிழக்குப் புறத்தி லமைந்திருந்த திருவேட்களச் சேரியில் இராப் பாடசாலை யொன்று ஏற்படுத்தப்பட்டது. அதிலே படித்துப் பயன்பெற்ற தீண்டப்படாதார் பலர்.

அப் பாடசாலையிலே படிப்பவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் ஆதியானவற்றைச் சுவாமிகளே வாங்கிக் கொடுத்தார்கள். சுவாமிகளின் விருப்பப்படி, அச் சேரியிலே, 1933-ஆம் ஆண்டில், சுவாமி விவேகானந்தரின் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் படம் மலர் மாலைகளாற் சிறப்புற அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக வந்தபோது, அச் சேரியி லுள்ள ஒவ்வோர் குடிசையிலும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. குடிசையி லுள்ள மக்கள் அப் படத்திற்குத் தீபாராதனை செய்தனர். இங்ஙனமாகத் தீண்டப்படாத மக்களுக்குச் சுவாமிகள் செய்த தொண்டு அளப்பரி தாகும்.

## காங்கிரஸ் கொடி

1933-ஆம் ஆண்டிலே அண்ணுமலை நகரில், பட்டமளிப்பு (Convocation) விழா மிகச் சிறந்ததொரு முறையில் நடைபெற்றது. அதற்காகப் பட்டமளிப்பு விழா மண்டபம், பல கொடிகளால் வெகு அழகாக அலங்கரிக்கப்பட் டிருந்தது. பேராசிரியர் ஒவ்வொருவரின் வீட்டின்மேலும் 'யூனியன் ஜாக்' கொடி கட்டப்பட்டது. ஆயின், விபுலானந்த அடிகளது வீட்டின் மேல் மட்டும் 'காங்கிரஸ்' கொடி கட்டப்பட்டிருந்தது. மாட்சிமை மிக்க கவர்னர், சேர். ஜோர்ஜ் பிரடெரிக் ஸ்ரான்லி பட்டமளிப்பு விழா மண்டபத்திற்கு வருவதற்கு முன்னர், போலீஸ் உத்தியோகத்தர் சிலர், சுவாமிகளுடைய வீட்டினைச் சோதனை செய்தனர். அதற்கெல்லாம் சுவாமிகள் அஞ்சவில்லை.

கொடியும் தங்கு தடையின்றி வீட்டின்மேற் பறந்து கொண்டிருந்தது. இதைக் கண்டோரெல்லாம் அடிகளாரின் நாட்டுப் பற்றினைப் போற்றினர்கள்.

## யோகசூத்திரங்களின் மொழிபெயர்ப்பு

அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலிருந்த பொழுதே, இராமகிருஷ்ண மிஷன் பதிப்பிப்பதற்காகச் சுவாமி விவேகானந்தரின் "விவேகானந்த ஞான தீபம்" "கர்ம யோகம்" "இராச யோகம்" "பதஞ்சலி யோக சூத்திரம்" முதலான நூல்கள் பலவற்றைச் சுவாமிகள் தூய தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார்கள்.

## இசை யாராய்ச்சி

திருஞான சம்பந்தர் பாடிய திருப்பதிகங்களை அவரோடு உடனிருந்த திருநீலகண்ட யாழ்ப் பாணர் யாழிலிட்டு இசைத்தார் என்பதைக் கேட்டிருக்கின்றோம். "அந்த யாழ் 'சகோட யாழ்' என்றும், அதன் பழந் தமிழ்ப்பெயர் 'செம்முறைக்கேள்வி' யென்றும், அந்த யாழின் இயல்பைக் கண்டறிந்து, இக்காலத்தில் அதை உருவாக்கி யிசைத்து இசைத் தமிழை வளர்க்க வேண்டுமென்றும்" சுவாமிகள் எண்ணங் கொண்டதும் இக்காலத்திலேதான்.

## விசாரணைச் சபை அங்கத்தினர்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறை சம்பந்தமாக 1935-ஆம் ஆண்டில் நியமிக்கப் பட்ட விசாரணைச் சபையில், அடிகள், மகாமகோ பாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர், மதுரைத்

தமிழ்ச்சங்க உபதலைவர், திரு. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலியவர்களுடன் கூடியிருந்து விசாரித்து, அறிக்கை யெழுதுவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்கள்; பின், உப அத்தியட்சகர் கேள்விப்படி பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி சம்பந்தமாக விரிவானதொரு திட்டத்தையும் தயாரித்துக் கொடுத்தார்கள்.

## இசையும் இசைக் கருவிகளும்

"பழந் தமிழர் இசையும், பிற நுண் கலைகளும்" என்னும் பொருள் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்திலே இவர் சொற்பொழிவுகள் பல ஆற்றினர். பழந்தமிழ் இசை, இசைக் கருவிகள் இவை பற்றிய விளக்கத்தை உலகறியச் செய்த சிறப்பு அடிகட்கே உரியதாகும். சொற்பொழிவுகளின் போது இவர் இசைக் கருவிகளைப் படம் வரைந்தும் காட்டினர். சொற்பொழிவுகளைக் கேட்டுக்கொண்டிருந்த டாக்டர். உ. வே. சாமிநாதையரும் பிறரும் சுவாமிகளைப் பாராட்டிப் பேசினர்கள். இச் சொற்பொழிவுகள், "ஹிந்து" முதலான ஆங்கிலப் பத்திரிகைகளிலும், பிற தமிழ்த் தினத்தாள்களிலும் வெளிவந்தன. அக் காலத்திலே, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும் அடிகள் "இசை" "அலங்கார சாத்திரம்" முதலிய பொருள்கள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். திருச்சி வானொலியிலும் சுவாமிகளின் பேச்சுக்கள் ஒலிபரப்பப்பட்ட துண்டு. திருச்சி நிலையத்திலிருந்து, "பண்டைத் தமிழரின் இசைக் கருவிகள்" என்னும் பொருள் பற்றிச் சுவாமிகள் பேசிய பேச்சானது மிக முக்கியம் வாய்ந்த தாகும்.

## திரு கந்தசாமியவர்கள்

சுவாமிகள், அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலே பேராசிரிய ராக விருந்தபொழுது, கல்வித் திறமை யினலும் ஒழுக்கத்தாலும், சுவாமிகளைக் கவர்ந்தவர் திரு. கந்தசாமி என்னும் பெயர் பூண்ட விரிவுரையாள ரொருவர். அவருடைய போக்கே ஒரு தனிப் போக்கு. அவர் ஏனைய ஆசிரியர்கள் இருக்கும் அறைக்குப் போவது கிடையாது. யாருடனும் நெருங்கிப் பழகு வதோ அளவளாவுவதோ கிடையாது. தாமுண்டு தம் பாடுண்டு. குறிப்பிட்ட நேரத்துக்கு அவர் நேரே தமது வகுப்புக்கே வந்து விடுவார்; வகுப்புத் தொடங்கச் சிறிது நேரமிருப்பின் எங்கேயாவது ஒரு மூலையில் உட்கார்ந்து கொள்வார்; தமது பாடம் முடிந்ததும் நேரே வீடு சென்று விடுவார்.

திரு கந்தசாமியார் அவர்களின் திறமையைப் பலர் அறியவில்லை யென்றும், உரியமதிப்பு அவருக்கு வழங்கப்படவில்லை யென்றும் சுவாமிகள் வருந்திய துண்டு. அடிகள் தாம் பேராசிரியராக இருந்த காலத் தில், திரு. கந்தசாமி அவர்களை மேல் வகுப்புப் பாடங் களைக் கற்பிக்கும்படி நேரசூசி யமைத்து அவர்களைப் பெருமைப் படுத்தினர்கள். பின்னர், திரு. கந்தசாமி யவர்கள் இவ்வுலக வாழ்வினை யொருவியதை அறிந்த சுவாமிகள் மேற்கண்ட ஈடுபாட்டின் காரணமாகவே, "கங்கையில் எழுதியிட்ட ஓலை" என்ற தலையங்கத் துடன் - கங்கையை அவரிடம் தூது அனுப்புவதாகப் பாடி வெளியிட்டார்கள். (அப்பாடல் இந்நூலில் பின் னல் சேர்க்கப்பட்டுளது)

### பதவியினின்று விலகியது

பல நிகழ்ச்சிகளைக் காரணமாகக் கொண்டு, 1933-ஆம் ஆண்டிலே, சுவாமிகள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியப் பதவியினை விட்டு நீங்கினர்கள். அதன்பின், சுவாமிகளுடைய வாழ்க்கையிற் பெரும் பகுதி இசை யாராய்ச்சியிலேயே செலவிடப்பட்டது.

## அத்தியாயம் 5

## சொற்பணி புரிதல்

### கரந்தைத் தமிழ்ச் சங்கத் தொடர்பு

1933-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 22-ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்குச் சங்கத்தாரின் வேண்டுகோளின்படி சுவாமிகள் தலைமை வகித்தார்கள். அதன்பின், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாருடன் என்றும் மாருத தொடர்பு உண்டாவதாயிற்று. அவர்கள் சுவாமிகளால் அடிக்கடி எழுதி யுதவப்பட்ட கட்டுரைகளைத் "தமிழ்ப்பொழில்" என்ற தமது தமிழ்த் திங்க ளிதழில் வெளியிட்டும், சுவாமிக ளியற்றிய "யாழ் நூல்" என்னும் அரிய ஆராய்ச்சி நூலினை அச்சிட்டும் பெருமை பெறுவதற்கு இத் தொடர்பே பின்னுளிற் காரணமா யமைவ தாயிற்று.

### திருவண்ணுமலை சைவசித்தாந்த சமாஜத் தலைமை

தென்னிந்தியாவிலே சைவத்துக்கும் தமிழுக்கும் அருந் தொண்டாற்றி வரும் "சைவ சித்தாந்த மகா சமாஜம்" 1935-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்

தில், திருவண்ணுமலையில் வருடாந்தர விழாவினை நடத்தியபோது, சுவாமிகளே தலைமை தாங்கினர்கள். தலைமை வகிப்பதற்காக வந்த சுவாமிகளை வர வேற்று ஊர்வலமாக அழைத்து வருவதற்கு வேண்டிய ஒழுங்குகளை அவ்வூரவர்களும் சமாஜ உத்தியோகத்தர்களுமாகச் செய்திருந்தார்கள். ஊர்வலத்துக்குத் திருவண்ணுமலை முழுவதுமே திரண்டு வந்தது. இலங்கையிலிருந்தும், தமிழ் நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் ஏராளமான அறிஞர்கள் வந்து கூடியிருந்தார்கள்; சுவாமிகள் வந்தவுடன், அவருக்குப் பூ மாலை சூட்டி ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். அம் மகாநாட்டிலே, சுவாமிகள் ஆற்றிய தலைமைப் பேருரை தனிச் சிறப்புடன் விளங்கியது. சொற்பொழிவாளர் ஒவ்வொருவரும் பேசி முடிந்ததும், அவர்கள் எவ்வெத்துறையிலே திறமை நிரம்பப் பெற்றவர் என்பதைச் சுவாமிகள், குறிப்புரை கூறி, மகாநாட்டினைச் சிறப்புற நிறைவேற்றி வைத்தார்கள்.

## தமிழாராய்ச்சிக் குழு அங்கத்தினர்

அந்த நாட்களிலே தான், சுவாமியவர்களும் தமிழ் ஆராய்ச்சிக் குழுவில் இடம் பெறுதல் வேண்டுமென்று கருதிய சென்னைப் பல்கலைக் கழகத்தினர், சுவாமிகளைத் தங்கள் தமிழ் ஆராய்ச்சிக் குழுவில் ஒருவராக நியமித்துக் கொண்டார்கள்.

## தமிழிசை

சென்னைப் பல்கலைக் கழகத்தில், 1936-ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்திலே, சுவாமிகள் சில நாட்களாகச் சொற்பொழிவுகள் செய்து கொண்டிருந்தார்




[பக்கம் 38

கள். அச் சொற்பொழிவுகளுள், "யாழ்ப் பாணன்" "தமிழிசை" "சிலப்பதிகார அரங்கேற்று காதை" "ஏழாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இருந்த தமிழிசை" "பழந் தமிழகத்தின் சிற்பாசாரிகள்" "பரிசன வேதி" என்னும் பொருள்கள் பற்றி ஆற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் குறிப்பிடப் பட வேண்டியவை.

## சொல்லாக்கக் கழகம்

சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாட்டிலே, (1934-ஆம் ஆண்டு யூன் மாதம்) கலைச் சொற்களை ஆக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பயனாக, அவ் வேலையைச் செய்வதற்கெனச் "சொல்லாக்கக் கழகம்" ஒன்று உருவாயிற்று.

புலமை வாய்ந்த அறிஞர்கள் பலர், மிக முயற்சி செய்து கலைச் சொற்கள் பலவற்றைச் சேர்த்துத் தொகுத்தார்கள். அச் சொற்களை ஆராய்ந்து முடிவு செய்வதற்காக 1936-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20-ம் திகதி, "தமிழ்க் கலைச் சொல்லாக்க மாநாடு" சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திற் கூடுவதாயிற்று. அம் மாநாடு, திருவாங்கூர், சேர். ஸி. பி. இராமசாமி ஐயராற் றிறந்து வைக்கப் பட்டது. அம் மாநாட்டுக்குப் பொதுத் தலைவராகத் தலைமை தாங்கிய பெருமை சுவாமிகளுக்கே உரியதாயிற்று. இம் மாநாட்டின் பயனா யெழுந்ததே, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட "கலைச் சொற்கள்" என்னும் நூலாகும்.

## கைலாய தரிசனம்

1937-ஆம் ஆண்டில், சுவாமிகள், இமய மலையைத் தாண்டித் திபெத்துக்குச் சென்று, திருக் கயிலையைத் தரிசித்துக் கொண்டு திரும்பினர்கள். திருக் கயிலை யாத்திரை செய்ததோடமையாமல் அந்நாட்டிற் பல விடங்களிலு முள்ள மகாயன பௌத்தப் பள்ளி களுக்கும் அவர்கள் சென்றிருந்தார்கள்.

## சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பரீட்சகர்

திருக் கயிலாச யாத்திரை செய்து கொண்டு திரும்பி வந்ததும், சுவாமிகளைச் சென்னைப் பல்கலைக் கழகத்தினர், தமது பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பரீட்சகர்களுள் ஒருவராக நியமனஞ் செய்து கொண்டார்கள்.

# அத்தியாயம் 6

# 'பிரபுத்த பாரத' ஆசிரியர்

## பிரிவுபசாரம்

இங்ஙனமிருக்கையில், 1939-ஆம் ஆண்டில் வடநாட்டார் நடத்திவரும் "பிரபுத்த பாரதம்" எனப் பட்ட கலையாக்கங் கருதிய ஆங்கில வெளியீட்டின் ஆசிரியராக நியமிக்கப்பட்டதனல், சுவாமிகள், இமய மலைச் சாரலிலுள்ள மாயாவதி ஆச்சிரமத்துக்குப் புறப்படவிருந்தார்கள். அப்பொழுது, யாழ்ப்பாணத்து வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு மாபெருங் கூட்டம் அடிகளுக்குப் பிரியாவிடை அளிப் பதற்காகக் கூடிற்று. பிரமாதி வருஷம் ஆடி மாதம்

17-ஆம் திகதி (2—8—39) புதன்கிழமை மாலையிலே, மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்து மேடையில் சுவாமிகளும், அக் காலத்து அரசாங்க சபை அங்கத்தவரான திரு. S. நடேச பிள்ளையவர்களும், திரு. V. நாகலிங்கமவர்களும் அமர்ந்திருந்தனர். கூட்டத்திற்கு டாக்டர். S. சுப்பிரமணியமவர்கள் தலைமை வகித்தார்கள். பெருந் திரளான ஆடவரும் மகளிருங் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர்.

**பிரியாவிடைக் கூட்ட நிகழ்ச்சிகள்**

தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயதும், தலைவர், தமது முன்னுரையில், கல்வித் துறையிலும் தமிழ் இலக்கியத் துறையிலும் சுவாமிகள் செய்த அரிய வேலைகளைப் பாராட்டிப் பேசினர். சுவாமிகள், இவ்வாறு இத்தொண்டுகளைச் செய்வதால், மக்கள், இவர் துறவி என்பதை மறந்துவிடுகின்றனர் என்றும், இவர் தெளிவான ஞானமுடையவராய்த் திகழ்கின்ருர் என்றும், இவர் தமது புதிய முறையிற் சித்தி பெறுதல்வேண்டு மென்றும் குறிப்பிட்டார். பிரமஸ்ரீ. சிதம்பர சாஸ்திரிகள் சமஸ்கிருத வாழ்த்துச் சுலோக மொன்றைப் பாடினர். திரு.க. கி. நடராஜன் அவர்கள் பிரியாவிடை வாழ்த்துச் செய்யுள்களைப் பாடிச் சுவாமிகளுக்கு அளித்தார். செந்தமிழ் வித்துவான், பிரமஸ்ரீ. கணேசையரவர்களும், இலங்கை அரசாங்கத்துக் கல்வித் துறையின் தலைமை மொழி பெயர்ப்பாளர் பிரமஸ்ரீ. K. S. இராமசாமி ஐயரவர்களும் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை திரு. S. அம்பிகைபாகன் வாசித்தார்.

## வித்துவான் கணேசையர் வாழ்த்துக் கடிதம்

வித்துவான், பிரமஸ்ரீ கணேசையரவர்கள், "ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடைய பிரியாவிடைக் கொண்டாட்டத்திற்கு வருதற்கு எனக்கு உடனலம் இல்லாமையைக் குறித்து மிக வருந்துகின்றேன். அவர்கள், முன்னைக் காலத்தில் எம் நாட்டிலிருந்து எமக்குப் பெரு நன்மைகளைச் செய்த இருபாலைச் சேனாதிராய முதலியார், நல்லூர் சரவண முத்துப் புலவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதலிய பெரும் புலவர்களைப் போலத் தாமும் எமக்கெல்லாம் பெரு நன்மைகளைச் செய்து பெரும் புலவராய் விளங்குகின்றார்கள் என்பது எவரு மறிந்ததே.

அவர்கள், ஓரறிவுயிரினும் ஈரறிவுயிரும் மூவறிவுயிரும் விசேடம் பெற்றவாறு போல, ஒரு மொழி இரு மொழிப் புலவர்களினும் விசேடமாகப் பல மொழிப் புலவராயும் விளங்குகின்றார்கள். அதனாலும் அவரறிவின் பெருமை அளவிடற்கரிய தென்பதை நாமறிந்து கொள்ளலாம். இத்தகைய பெரும் புலவரைப் பிரிந்திருப்ப தெமக்கு அரிதாயினும், அவர்கள் இமாசலத்தில் ஒரு ஞான சூரியனாக விளங்கி, எமக்கே பிரகாசந் தரச் செல்வதால் அதுவும் மகிழத் தக்கதொன்றே என்பதைத் தங்களுக்கு அறிவிக்கின்றேன்.

தென்னாட்டிலன்றி வட நாட்டிலும் அவர்கள் சென்று எம தீழநாட்டின் பெருமையை விளக்குவது எமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியைத் தரத் தக்க தொன்றேயாம்." எனக் குறிப்பிட்டிருந்தார்கள்.

## நடேச பிள்ளையின் பாராட்டு

திரு S. நடேசபிள்ளை அவர்கள், "சுவாமிகள் இலங்கையில் மாத்திரமல்ல, தென்னிந்தியாவிலும் வியந்து பாராட்டப்படும் ஒருவராவர். அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள் எவராலும் மறக்கற்பாலனவல்ல. அவர்கள் இப்போது வட இந்தியாவுக்குப் போகின்றார்கள். அங்குள்ளவர்கள் இன்னும் தமிழ்க்கலையை நன்கறியாமலிருக்கின்றார்கள். ஆகவே, வட இந்தியாவில் தமிழ்க் கலைஞானத்தைச் சுவாமிகள் பரப்புவார்களென்று நம்புகின்றோம். இதனைச் செய்யக்கூடிய வசதியைச் சுவாமிகள் பெறுவதால், அவர்கள் தம் பணியை இனிது நிறைவேற்றி வெற்றியே அடைவார்கள். அதற்கு நாமெல்லோரும் அவர்களுக்கு மனமார்ந்த பிரியாவிடையை அளிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்" என்று சுவாமிகள் மேலுள்ள தமது ஆர்வம் புலப்பட உருக்கமாகப் பாராட்டிப் பேசினார்கள்.

## நாகலிங்கமவர்கள் பேச்சு

அடுத்தபடியாக, திரு. V. நாகலிங்கமவர்கள், "சுவாமிகள் துறவுமார்க்கத்தைக் கைக்கொண்டமையால், மிகப் பெரும் பணியை மேற்கொள்வாராயினர். சுவாமிகள் கல்வி சம்பந்தமாகச் செய்துவந்த தொண்டுகளை எவரும் அறிவர். அவர்கள் தமிழ் இலக்கியங்களை ஆராயும்போது தமது விஞ்ஞான அறிவை நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் சேவைகள் எம்மால் என்றும் மறக்கற்பாலனவல்ல" என்று கூறி நீண்டநேரம் பேசினார்கள்.

### அம்பிகை பாகனது புகழுரை

முடிவில், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு S. அம்பிகைபாகன் அவர்கள், சுவாமியவர்களின் நலங்களைப் புகழ்ந்து பேசிய போது, "சுவாமிகளுடன் யான், சென்ற பத்து ஆண்டுகளாக நெருங்கிப் பழகியவன். போதிய நேர மில்லாததினால், சுவாமிகள் தமது ஆராய்ச்சிகளிற் பலவற்றை வெளியிடவில்லை. சுவாமிகள் செய்த பெரிய ஆக்க வேலைகளை எவரேனும் அறிய விரும்பி னால், அவர்கள் கிழக்கு மாகாணத்திற்குப் போக வேண்டும். அங்கே சுவாமிகள் போயிராவிட்டால், இந்து சமயமே இல்லாமற் போய்விடும்போலிருந்தது. அங்கு, சுவாமிகள் ஓர் அநாதசாலையையும் ஸ்தாபித் திருக்கிறார்கள். சுவாமிகள் பள்ளிக்கூடங்களுக்கு மானேஜராக இருந்தபோது, தாராள மனப்பான்மை யோடும் விரிந்த நோக்கத்தோடும் - தம்முடைய சொந்த நன்மைகளைக் கருதாமல்-பள்ளிக்கூடத்தின் நன்மையையே கருதி நடந்துவந்திருக்கிறார்கள். சுவாமிகளது பிரிவு எங்களுக்கு வருத்தத்தைத் தந்தா லும், அவர்கள் ஒப்பற்ற ஒரு சேவை புரியச் செல்வ தால், நாங்கள் மகிழ்கின்றோம். சுவாமிகள் மீண்டும் எங்களிடம் திரும்பி வந்து யாழ்ப்பாணத்திற் சில வரு டங்களைக் கழிக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கின்றேன்" எனக் குறிப்பிட்டார்கள்.

### அடிகளாரது முடிவுரை

அதன் பின், சுவாமிகள் எழுந்து அங்குக் கூடி யிருந்தவர்களுக் கெல்லாம் நன்றி தெரிவிக்கும் போது, மாயாவதி ஆச்சிரமத்தைப் பற்றி விவரித்

தார்கள். ' இனிது இனிது ஏகாந்த மினிது ' என்றுங்கு, அவ்விடம் சாந்தம் நிலவுவதற்கு ஏற்ற இடம் என்றும், மக்கள் அங்கு இலர் என்றும், வாழ்க்கையில் எல்லாவற்றையும் நடத்தும் சத்தி, அவ்வப்போது என்னென்ன பணிகளைச் செய்யுமாறு பணிக்கின்ருளோ அதனைத் தலைக்கொண்டொழுகுவதே தம் கடன் என்றும், அந்த உள்ள உணர்ச்சியுடன்தான் தாம் கருமமாற்றி வருவதாகவும், தாம் இலங்கையிற் பெரும்பாலும் கல்வி சம்பந்தமான வேலைகளைச் செய்து கொண்டு பதினென்கு வருடங்களைச் செலவிட்டிருப்பதாகவும், அக் காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தம்மாலானவற்றைச் செய்திருப்பதாகவும், இனிச் சில ஆண்டுகளுக்கேனும் தாம் இலங்கையை விட்டு வேறெங்கேனும் போயிருக்க வேண்டியது தக்கதுதான் என்றும், அங்குக் குழுமியிருந்த அன்பர்களெல்லோரும் தங்கள் மனமார்ந்த பிரியாவிடையை அளிப்பார்களென்று தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறி முடித்தார்கள்.

## பண்டிதர்களுடன் ஹாஸ்யம்

மட்டக் களப்பிலும், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாக அளிக்கப்பட்ட பலவாய பிரியாவிடைகளை முடித்துக்கொண்டு திரும்பி வந்து, அடிகள் தம் பிரயாணத்துக்கு ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வேளையில், "கோவை வாணன்" எனப் புனை பெயர் கொண்ட திரு அ. வி. மயில்வாகனன் அவர்கள் சுவாமிகளுக்குச் சில உதவிகள் செய்துகொண்டிருக்கும்போது, தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைகளைப் பற்றி ஹாஸ்யமாகப் பேசிக்கொண்டு,

"Every Pandit composed a song on me according to the Pandit's fashion!"

என்று சிரித்தார்கள். சுவாமிகளுக்கு உதவி செய்துகொண்டிருந்த அன்பர் வேறொருவர், "அகஸ்திய முனிவர் தெற்கே வந்தார், நாயன்மார்கள் தெற்கே வந்தார்கள்; இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியன்மார் பலர் வடக்கிருந்து தெற்கே வந்தவர்கள். சுவாமிகள் மாத்திரந்தான் பத்திரிகாசிரியராகத் தெற்கிருந்து வடக்கே செல்லுபவர்கள்" என்று கூறியபோது, சுவாமிகள் சிரித்துக்கொண்டு, "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்று கூறிவிட்டு,

"This is an Island. Here we develop insular qualities only. We must go to the wide world to study men and things" என்று முடித்தார்கள்.

3-8-39-இல், சுவாமிகள் புகைவண்டி மார்க்கமாக இந்தியாவுக்குப் பிரயாணமானார்கள்.

### பத்திரிகைப் பணி

சுவாமிகள் "பிரபுத்தபாரத" ஆசிரியராயிருந்த காலத்தில், மேலை நாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் பலருடனும் அவர் பழக வேண்டி நேர்ந்தது. சேர். எஸ். ராதாகிருஷ்ணன் முதலிய அறிஞர்கள் பலர், சுவாமிகளுடன் உறவாடினர். அடிகள், அப்போது தமிழ் நூல்களிற் காணப்படும் அரிய உண்மைகளை அப் பத்திரிகை மூலமாக ஆங்கிலத்திலே தெளிவாக வெளியிட்டார்கள்.

## அத்தியாயம் 7

# தென்னாடு திரும்புதல்

### தமிழ் நாட்டிற் பிரயாணம்

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் வரை அங்கிருந்து பணியாற்றிக் கொண்டிருந்த சுவாமிகளை, தமிழ் நாட்டில் அவருக்கிருந்த தணியாக் காதல் விரைவில் ஈர்த்துக் கொண்டோடி வந்தது. சுவாமிகள் திரும்பி வந்ததும், சமய ஆக்கங் கருதிய சபைகளும் இலக்கியக் கழகங்களும் தமிழ் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து அவரை அழைத்தன. உடம்பு இளைத்துள்ள நிலையில் உடல்நலங் குறைந்திருந்த சுவாமிகள், தம் உடல் பொருள் ஆவி யனைத்தையும் தொண்டி வீடுபடுத்தி, எட்டு மாதங்களாகத் தமிழ் நாடெங்கணும் சுற்றுப் பிரயாணஞ் செய்தார்கள்; அக்காலங்களில் பிறரெவரும் காணுதற்கரிய ஆராய்ச்சி யுண்மைகளைக் கண்டு கொண்டார்கள்.

### இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராக வந்து பதவி யேற்கும்படியும், தமிழ் மொழியின் ஆக்கத்துக்கு வேண்டிய பெரும் பணிகளைத் தொடங்கிப் புரியும்படியும் பலர் சுவாமிகளை வேண்டினர். இலங்கையின் தனித் தலைவர்களும், சமயச் சபைகளும், இலக்கியக் கழகங்களும் ஒன்று சேர்ந்து இராமகிருஷ்ண மிஷனில் முறையிட்டனர். அதன் விளைவாக 1943-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகச் சுவாமிகள் பதவி ஏற்றார்கள்.

### பாராட்டுக் கூட்டம்

சுவாமிகள் பேராசிரியப் பதவியை ஏற்றுக் கொண்டமையைக் கொண்டாடுவதற்கும், அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்து கொண்டுவரும் பலவாய தொண்டுகளைப் பாராட்டுவதற்குமாக ஓர் மாபெருங் கூட்டம் நடாத்துதல் வேண்டுமென்று கொழும்பி இள்ள தமிழ்ப் பிரமுகர்கள் தீர்மானஞ் செய்தார் கள். அக் கூட்டம் சிறப்பாக நடைபெறும்படி முயன் றுழைத்தவர்கள், காலஞ் சென்ற நீதியரசர் திரு ந. நடராசா K. C. அவர்களும், இலங்கை அரசாங் கத்துக் கணக்குப் பரிசோதனைப் பகுதியின் பதிற் றலைவராய் அக் காலத்திருந்த திரு க. கனகரத் தினம் அவர்களுமாவர். அக் கூட்டத்தினை நடாத்து வதற்கென நியமிக்கப்பட்ட சபைக்கு, அக் காலத் திலே கொழும்புத் தமிழ்க் கழகத்தின் தலைவராக விளங்கிக் கொண்டிருந்த திரு. அ. சபாரத்தினமவர் கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்கள். அச் சபையின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டு இடைய ருப் பணிபுரிந்து கொண்டிருந்தவர் திரு அருள் தியாகராசா அவர்களாவர்.

சபையினரின் பெரு முயற்சியினாலும், சுவாமி கள்பாற் றமிழ்மக்கள் கொண்டிருந்த பேரன்பினா லும், கொழும்பு நகர சபை மண்டபத்திலே, பிர மாண்டமானதொரு கூட்டம் கூடுவதாயிற்று. அக் கூட்டத்துக்கு மந்திரிமாரும், அரசாங்க அங்கத்தவர் களும், அரசாங்க இலாக்காக்களின் தலைவர்களும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், தமிழ்ப் புலவர்

களும், பிரபல வர்த்தகர்களும், வெவ்வேறு துறைகளிலே தொண்டாற்றுபவர்களுமாக எல்லோரும் தவருமல் வந்து கூடினர்கள். இந்தியாவிலும் இலங்கையில் வெவ்வேறு பாகங்களிலுமிருந்து அன்பர்களும் அனுதாபிகளும் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் பல அன்று வந்து குவிந்தன. இலங்கைப் பல்கலைக் கழகத்து உப அத்தியட்சர் டாக்டர். ஐவஅர். ஜென்னிங்ஸ், அக் காலத்திலே கல்வி மந்திரியாக விளங்கிய டாக்டர். C. W. W. கன்னங்கரா, அரசாங்க சபை அங்கத்தவராயிருந்த திரு S. நடேச பிள்ளை, ஜனப். D. B. ஜயா, வண. பீற்றர்ப் பிள்ளை முதலாய அறிஞர்கள், சுவாமிகளின் பெருமையையும் அவர் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் செய்துள்ள தொண்டுகளையும் விதந்து விதந்து பேசினர்கள்.

சுவாமிகள் பேராசிரியராகப் பதவியேற்றபின், கல்விப் பகுதியின் பாட நூற்சபை, பரீட்சைச் சபை, கல்வி ஆராய்ச்சிக் குழு முதலியவற்றிலெல்லாம் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்கள். இலங்கையிலே, பாடசாலைகளுக்கான பாடத் திட்டத்தில் “இசை” இடம் பெற்றது, சுவாமிகளது தளராத ஊக்கத்தினலேயே யாம். “இசை”க்கான பாடத் திட்டத்தினை அமைத்துக் கொடுத்தவர்களும் சுவாமியவர்களே யாவர். பரீட்சைகளுக்குச் ‘சமயம்’ ஒரு பாடமாக விதிக்கப்பட்டபொழுது, வேதாந்தத்துக்கு ஒரு பாடத் திட்டம் அமைத்துக் கொடுத்தவர்களும் சுவாமியவர்களேயாவர். இலங்கைக் கல்விப் பகுதியினரால் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக் கெல்லாம் சுவாமிகளும் ஒரு பரீட்சகராக நியமிக்கப்பட் டிருந்தார்கள்.

4

## அத்தியாயம் 8

# யாழ்நூல் அரங்கேற்றம்

### கோள்ளம்பூதூர் ஆளுடைய பிள்ளையார் கோவில்

சுவாமிகள் பதினான்கு ஆண்டுகளாக இடைவிடாது நிகழ்த்திய ஆராய்ச்சியின் பயனாகி இயற்றிய இசைத் தமிழ் நூலாகிய "யாழ்நூல்" அரங்கேற்றம், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், (5—6—47, 6—6—47 ஆகிய திகதிகளில்) திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் ஆளுடைய பிள்ளையார் தெய்வத் திரு முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெறுவதாயிற்று.

தமிழ் நாட்டிற்பல்வேறிடங்களினின்றும் இயற்றமிழ்ப் புலவர்களும், இசைப் புலவர்களும், அன்பர்களும் இவ்வரங்கேற்று விழாவில் ஒருங்கு குழுமி இருந்தார்கள்.

அவர்களுள் இசைப் பேராசிரியராகிய திருப்பாம்பரம் ரி. என். சாமிநாதபிள்ளை அவர்கள், கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை அவர்கள், அக்காலத்தே சென்னை மாகாணத்துக் கல்வி மந்திரியாயிருந்த டீ. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள், நாவலர் எஸ். சோமசுந்தர பாரதி அவர்கள், திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன அதிபர் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் முதலாயினோர் குறிப்பிடத் தக்கவராவர்.



அடிகளார் புனைந்த ஆதியாழ் [50ம் பக்கம்

104941



## நாச்சியார் நான்மணிமாலை யரங்கேற்றம்

5—6—47 — வியாழக்கிழமை காலையிலே, திருக்கோயில் வரிசையுடன் இயற்றமிழ்ப் புலவர்களும், இசைப் புலவர்களும், ஏனைய பேரறிஞர்களும், தமிழ்ச் செல்வர்களும் புடை சூழ்ந்து வர, அருட்டிரு விபுலானந்த அடிகளார் தெற்குக் கோபுர வாயில் வழியாகத் திருக்கோயிலுக்கு அழைத்துவரப் பெற்றார்கள். அதுபோது, அடிகளாரது யாழ்நூலிற் குறித்த கணக்கின்படி அமைந்த முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்தண்டி வீணை என்னும் இசைக் கருவிகள் தாங்கிச் செல்லப்பட்டன. அழகிய நாச்சியார் திருமுன்னர் அடிகளார் இயற்றிய 'அழகிய நாச்சியார் நான்மணிமாலை' வித்துவான் ஔவை. துரைசாமிப் பிள்ளை அவர்களாற் படிக்கப் பெற்று அரங்கேறியது.

## யாழ் நூல் அரங்கேற்று விழா

பின்னர், திருஞான சம்பந்தப்பிள்ளையாரை வழிபட்டு, ஆளுடைய பிள்ளையாருடன் அடிகளார் அரங்கேற்றுவிழா நிகழும் மண்டபத்தினை அடைந்தார்கள். தேவார இன்னிசையுடன் அரங்கேற்றுவிழா இனிது தொடங்கியது. கோனூர் சமீந்தாரும் திருக்கொள்ளம் பூதூர்த் திருப்பணிச் செல்வரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் புரவலரும் ஆகிய திருவாளர் நச்சாந்துப்பட்டி பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் விழாவிற்கு வந்திருந்த எல்லோரையும் பேரன்புடன் வரவேற்று, வரவேற்பு நல்லுரையைப் பின்வருமாறு நிகழ்த்தினர்கள்.

## சிதம்பரம் செட்டியாரது வரவேற்புரை

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தப் பிள்ளையார் திருநாளாகிய இந்த நல்ல நாளிலே, திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலாகிய இவ் வருள் நிலையத்திலே, தமிழன்னையின் திருப்பணியிற் பெருவிருப்புடைய இயற்றமிழ்ப் புலவர்களும், இசைப் புலவர்களும் தமிழன்பு கெழுமிய ஏனைய தமிழ்ப் பெருமக்களும் ஒருங்கு குழுமியிருக்கும் இவ் வழகிய தோற்றம், தமிழன்னையின் திருவோலக்கச் சிறப்பினை இனிது புலப்படுத்தி, என் உள்ளத்திற்குப் பெருமகிழ்ச்சி தருகின்றது. ஞானத்தின் திருவுருவாகிய ஞானசம்பந்தப் பிள்ளையார், திருக்கொள்ளம்பூதூர்ப் பெருமானைப் பாடிப் போற்றும் பெருவிருப்பினல் இங்கு எழுந்தருளி வந்த காலத்து, ஆற்றிலே பெருவெள்ளம் ஏற்பட்டு, ஓடத்தினைச் செலுத்துவோர் இல்லாத நிலையிலே, கரையில் நின்ற ஓடத்தினைக் கட்டவிழ்த்து,

> "கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்
> நட்ட மாடிய நம்பனை யுள்கச்
> செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
> நல்கு மாறருள் நம்பனே" என்னும்

இன்னிசைத் திருப்பதிகத்தினைப் பாடி, தம் நாவலமே கோலாகச் செலுத்தி ஆற்று வெள்ளத்தைக் கடந்து, இத் திருக்கோயிற் பெருமானைக் கண்டு மகிழ்ந்தது போல, நம் அருட்டிரு விபுலானந்த சுவாமிகளும், பிள்ளையார் அருளிய இன்னிசைச் செழும் பாடல்களை இசைத்து, நல்லிசை வளர்த்த திருநீலகண்ட

யாழ்ப் பாணரது இசைக்கருவியாகிய செம்முறைக் கேள்வி யென்னும் சகோட யாழின் இயல்பினைக் காணவிரும்பி, காலமென்னும் பேராற்று வெள்ளத்தினைத் தம் கணித நூற் புலமையாகிய கோலினலே கடந்து, பண்டைத் தமிழர் இசைக்கருவி யாகிய யாழின் இயல்பினையும், அக் கருவியில் இசைக்கப் பெற்ற இசைத் தமிழ்த் திறங்களையும் கண்டு மகிழ்ந்து, அம் மகிழ்ச்சியால் விளைந்த பயனைத் தமிழகம் பெற்றுய்தல் வேண்டுமென்னும் பெருங் கருணையினலே, இசைத் தமிழ்நூலாகிய யாழ்நூலை இயற்றியுள்ளார்கள்.

முடியுடை மூவேந்தர்களாலும், குறுநில மன்னர்களாலும், வள்ளல்களாலும் போற்றி வளர்க்கப் பெற்ற தமிழ்மொழியானது புலவர், பாணர், கூத்தர் என்போரால் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று துறைகளிலும் வளர்ச்சிபெற்றுத் திகழ்ந்தது. பண்டைத் தமிழர்களுடைய மன மொழி மெய்களின் ஆற்றலை மிகுவித்து விளங்கிய இம் முத்தமிழ்த் துறையினைப் பிற்காலத்தே உரிமை யிழந்த மக்கள் பேணு தொழிந்தனர். அவர்களாற் பேணப்படாது மறைந்துபோன முத்தமிழில் இசைத்தமிழ் என்னும் அருங்கலை நிதியத்தைத் தேடித் தொகுத்து உருப்படுத்தி வழங்கிய பெருமை யாழ்நூலாசிரியராகிய நம் சுவாமிகளொருவர்க்கே உரியதாகும்.

தமிழன்னையின் கலைத் திறங்களாகிய பழம்பணி புதுக்கியும், புதுப்பணி குயிற்றியும் தமிழகம் தன்னரசு பெற்று உழைத்தற்கேற்ற ஊக்கத்தினை, அடிகளார் அருளிய யாழ் நூல், தமிழ் மக்களுக்கு வழங்குவதாகும் என்னும் துணிபுடையேன்.

தமிழ் மக்கள் தன்னரசுபெற்று உரிமையொடும் வாழ்ந்த முன்னாளில், முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வித்தகப் புலவர்கள் இயற்றிய தமிழ் நூல்கள், அரசர் பேரவைகளிற் சிறப்புடன் அரங்கேறின என அறிகின்றோம். ஆசிரியர் தொல்காப்பியனாரால் இயற்றப்பெற்ற முழுமுதல் நூலாகிய தொல்காப்பியம், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் அதங்கோட்டாசான் என்னும் பேராசிரியர் முன்னிலையிலே, அரங்கேறியதென அறிகின்றோம். தமிழரது அரசியல் உருப்பெற்று வரும் இக்காலத்தே, நம் சுவாமிகள் இயற்றிய இசைத் தமிழ்நூலாகிய யாழ் நூலானது, முழுமுதற் கடவுளின் பேரவையாகிய இத் திருக்கொள்ளம் பூதூர்த் திருக் கோயிலிலே, இயலிசைத் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் திருமுன்னிலையிலே அரங்கேறப் பெறுகின்றது. ஆயிரம் யாண்டுகளாக நம் முன்னோர் பெறாத பெருமகிழ்ச்சியினை, யாழ் நூல் அரங்கேற்று விழாவாகிய இந் நாளிலே நாம் பெற்று மகிழ்கின்றோம். இம் மகிழ்ச்சியினை நம் தமிழகத்தார்க்கு வழங்கியருளிய இறைவன் திருவருளை இறைஞ்சி நின்று, இவ்வரங்கேற்று விழாவினைச் சிறப்பிக்க வேண்டும் என்னுந் தமிழார்வத்தால், தமிழகத்துப் பல வேறு இடங்களினின்றும் வந்து குழுமிய தமிழ்ப் பேரறிஞர்களாகிய உங்கள் அனைவரையும் என் உளங்கனிந்த அன்புடன் வரவேற்கின்றேன்.

யாழ் நூலாசிரியராகிய சுவாமிகள், 'தாம் பதினன்கு ஆண்டுகளாக ஆராய்ந்து கண்ட இசை முடிபுகளை நம்மனோர்க்கு எடுத்துரைக்கும் பெரு

விருப்புடன் இன்று இங்கு எழுந்தருளப் பெற்றது, தமிழ் மக்களின் தவப்பேறே யாகும். நமது நிகழ் காலச் செயலாகிய இப்பேற்றினல், நம் தமிழகத்தின் சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி யெதிர் காலத்தின் சிறப்பும் நமக்கு இனிது புலனுகின்றன. சுவாமிகள் கண்டுணர்த்திய கணக்கின்படி புதுவதாக அமைக்கப் பெற்ற முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்தண்டி வீணை என்னும் இசைக் கருவிகள் இங்கு உள்ளன. அரங்கேற்று விழா நிகழும் இவ் விரண்டு நாட்களிலும், யாழ் நூலாசிரியராகிய நம் சுவாமிகள், பண்டைத் தமிழர் கண்டுணர்ந்த இசை நுட்பங்களை எடுத்து விளக்குவார்கள்.

அதன் பின்னர், அண்ணல் அடிகளார் தமது நுண்ணிய பேரறிவாகிய மத்தால் இசைக்கடல் கடைந்து, நம்மனோர்க்கு எடுத்தளித்த இன்னமிர்தமாகிய பழந்தமிழிசையுருவங்கள் சிலவற்றைச் சங்கீதக் கலாநிதி திரு பொன்னையா பிள்ளையவர்களின் புதல்வராகிய சங்கீத பூஷணம் திரு க. பொ. சிவானந்தம் பிள்ளையவர்கள், அடிகளார் கருத்தின்படி புதிய இசைக் கருவிகளில் இசைத்துக் காட்டுவார்கள்.

தமிழகத்தாரால் நன்கு மதிக்கப் பெற்ற பெரும் புலவர்களும் இசைவாணர்களும், எமது வேண்டுகோட் கிணங்கி, இவ் வரங்கேற்று விழாவினைச் சிறப்பிக்க முன் வந்துள்ளனர்.

நல்லிசை ஞான சம்பந்தர் அருளிய தேவாரத் தமிழில் ஈடுபட்டு, இத் திருக் கொள்ளம் பூதூர்த் திருப்பணியினை ஆர்வத்துடன் நிறைவேற்றிய எனது

தந்தையாரவர்களின் பேரன்புக் குரிய நிலையமாகிய இத் திருக்கோயிலிலே, இசைத் தமிழ் நூலாகிய யாழ் நூலினை அரங்கேற்ற இசைந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்க்கு என் உளமார்ந்த நன்றி உரியதாகுக.

எமது வேண்டுகோட் கிணங்கித் தமக்குரிய பல் வகை அலுவல்களையும் பொருட்படுத்தாது, செந் தமிழ்த் தாயின் திருவடித் தொண்டினையே பெரி தெனக் கருதி, இவ் விழாவிற்கு வந்துள்ள பெருமக்க ளனைவர்க்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக் கின்றேன்.

யாழ் நூல் அரங்கேற்று விழாவினைச் சிறப்பிக்க வந்த பெரியோர்களுக்கு வேண்டும் இட வசதிகளை இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப, எங்களால் இயன்ற அளவு செய்துள்ளோம். உபசரித்துப் போற்றும் வகையில் எங்களை யறியாது குறைபாடுகள் இருத்தல் கூடும். அவற்றை உளங் கொள்ளாது இவ் விழாவினை நன்கு சிறப்பித் தருளும்படி தமிழ்ப் பெரு மக்களை வேண்டிக் கொள்கின்றேன்.

**'ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந் தேன்**
**ஆலவாயி லுறையுமெம் ஆதியே......'**

## அடிகளார் இசைவிளக்கம்

பின்பு, யாழ்நூ லாசிரியராகிய அடிகளாரவர்கள் யாழ் நூலை அரங்கேற்று முகமாகத் தாம் பதி னன்கு ஆண்டுகளாக உழைத்து ஆராய்ந்து அறிந்த இசைநு லுண்மைகளை எடுத்துக்காட்டி விரிவாக விளக்கினார்கள்.

## கந்தசாமிப் பிள்ளையின் பாராட்டுரை

அதன்பின், கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சர் திரு நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், பண்டை இசைத் தமிழ் மீளவும் வளம் பெற்றுப் பரவும் வண்ணம் பல் லாண்டுகளாக மறைந்து கிடந்த பழந் தமிழிசையினை யும் அவ் விசையினை இசைத்தற்குரிய பழந் தமிழ்க் கருவியாகிய யாழினையும் உருவாக்கித் தந்த யாழ் நூலாசிரியர் அருட்டிரு விபுலானந்த அடிகளாரது பேரருட் டிறத்தினை வியந்து பாராட்டினார்கள்.

## ஏனோர் பாராட்டுரைகள்

சென்னைமாநிலக் கல்வி அமைச்சர் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் திரு ஆர். பி. சேதுப்பிள்ளை அவர் களும் அடிகளாரது தமிழ்த் தொண்டினையும் புலமை மாண்பினையும் எடுத்துரைத்துப் பாராட்டினார்கள்.

## சிவானந்தம் பிள்ளை பொற்பூப் பெறுதல்

பிற்பகல் நான்கு மணிக்கு, சங்கீத பூஷணம் க. பொ. சிவானந்தம் பிள்ளை அவர்கள், யாழ் நூலா சிரியர் கண்டமைத்த பாரிசாத வீணையிலும் சதுர் தண்டி வீணையிலும் முறையே சங்கராபரணம், அரிகாம்போதி, பந்துவராளி என்னும் நிறங்களையும், மாயா மாளவ கௌளை, கானமூர்த்தி, காயகப்பிரியா, தவளாம்பரி என்னும் நிறங்களையும் இசைத்துக்காட்டி எல்லோரையும் மகிழ்வித்தார்கள். கல்வி யமைச்ச ரவர்கள், அடிகளார் கருத்தின்படி "வீணை வித்தகன்"

என்ற பட்டத்தினைத் திரு சிவானந்தம் பிள்ளை அவர்களுக்குப் பொற் பூவுடன் சூட்டினார்கள்.

## வெள்ளி நிகழ்ச்சி

6—6—47 - வெள்ளிக்கிழமை காலை, இயலிசைப் புலவர் பேரவையில் யாழ் நூலாசிரியர் அடிகளார் வந்து அமர்ந்தார்கள். பேராசிரியர், நாவலர் ச. சோமசுந்தர பாரதியவர்கள் அடிகளாரது புலமைத் தொண்டினால் நாட்டிற்கு உள தாம் பயனை உருக்கமாக எடுத்துரைத்துப் பாராட்டினார்கள். பின்னர், அவர்கள் யாழ் நூலாசிரியரைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் படிக்கப் பெற்றன. தமிழ் வளர்ச்சியிற் பேரார்வமுடைய "குமரன்" ஆசிரியர் மகளிரில்லம் சொ. முருகப்பா அவர்களும், தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், வித்துவான் ஔவை. துரைசாமிப் பிள்ளை அவர்களும் அடிகளாரது முத்தமிழ்ப் புலமையினையும் அதனால் தமிழ்நாடு உய்ந்த திறத்தினையும் வியந்து பாராட்டினார்கள்.

## பிற்பகல் நிகழ்ச்சி

பிற்பகல் நான்கு மணிக்கு சென்னைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர் P. சாம்பமூர்த்தி ஐயரவர்கள், அடிகளார் யாழ்நூலிற் காட்டியுள்ள அரிய இசைக் கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக் காட்டி விளக்கினார்கள். அவர்கள் குறிப்பிட்ட சில பொருள்களை யாழ்நூலாசிரியர் அடிகளார் இனிது விளக்கிய பின்னர், வீணை வித்தகர், சங்கீத பூஷணம் க. பொ. சிவானந்தம் பிள்ளையவர்கள் யாழ்நூலிற் கண்ட கணக்கின்படி யமைந்த சுருதி வீணையில் பண்டைத்

தமிழர் இசையுருவாகிய ஏழ் பெரும் பாலைகளைக் கிரக சுவரம் மாற்றி யிசைக்கும் முறையில் இனிமையாக வாசித்து, எல்லோரையும் மகிழ்வித்தார்கள். யாழ் நூலாசிரியரின் மாணவராகிய வித்துவான் க. வெள்ளை வாரணனாரவர்கள், அடிகளார் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்குஞ் செய்த பேருதவியினை எடுத்துரைத்து வணங்கினார்கள்.

## விழா நிறைவேற்றம்

பின்னர், கரந்தைத் தமிழ்ச்சங்க அமைச்சர், திரு நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், இவ்விழாவினைச் சிறப்புடன் நிகழ்த்தி யாழ்நூலை வெளியிட்ட உயர் திருவாளர் கோனூர் சமீந்தார், பெ. ராம. ராம. சித. சிதம்பரஞ் செட்டியார் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார் திரு இலட்சுமணன் செட்டியார், மாணிக்கஞ் செட்டியார் ஆகியவர்கட்கும் இவ்விழா விற் கலந்துகொண்ட கல்வியமைச்சர் திரு அவிநாசி லிங்கம் செட்டியார் முதலிய பெருமக்களுக்கும் புலவர் பெருமக்களுக்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக நன்றி கூறினார்கள். திருமுறை யிசையுடன் அரங்கேற்றுவிழா இனிது நிறைவெய்தியது.

அன்றிரவு, மலர்புனை யோடத்தில் ஆளுடைய பிள்ளையாரை எழுந்தருளச் செய்து திருமுறை யிசையுடனும் நாதசுர இயக்கங்களுடனும் திருவீதியுலா இனிது நிறைவெய்தியது.

## அத்தியாயம் 9

## அடிகளார் பெரும் பிரிவு

### சுவாமிகள் அயர்ச்சியுறல்

யாழ் நூலை அரங்கேற்றி முடித்த பின்னர், சுவாமிகள், 30—6—47-ல் கொழும்புக்குத் திரும்பி வந்தார்கள். யாழ் நூல் அரங்கேற்றத்துடன் தொடர்பு பட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமையாலும், தென்னிந்தியாவிலிருந்து கொழும்புக்கு வந்ததனுல் ஏற்பட்ட களைப்பினுலும் சுவாமிகளுடைய உடல் சிறிது தளர்ந்திருந்தது. உடல் வாடியிருந்த போதும், அவர்களுடைய உள்ளம் சிறிதேனும் சோர்வடையவில்லை.

### அடிகளார் ஆர்வமும் நோய்வாய்ப்படலும்

தமிழிசை நுட்பங்களை யெல்லாம் தெளிவாகக் காட்டி யாழ் நூலை ஆங்கிலத்தில் இயற்றவேண்டுமென்றும், சைவ சித்தாந்த நூல்களை யெல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்றும், திருக்குறளுக்குச் செம்மை சான்ற மொழிபெயர்ப்பும் விளக்கமும் எழுதிப் பதிப்பிக்க வேண்டுமென்றும் சுவாமிகள் கூறிக்கொண் டிருந்தார்கள். தமது உடல் நலத்தைச் சிறிதும் அவர்கள் பொருட்படுத்தினரல்லர்: எனவே, சுவாமிகள் நோய்வாய்ப்பட்டார்கள்.

### இறைவனடி சேர்தல்

நோய் தணியாமையினுல், அவர்கள் சகல வசதிகளுங் கொண்ட கொழும்பு வைத்தியசாலை யொன்றிற் சிகிச்சை பெறச் சென்றிருந்தார்கள். நிலைமை

மிகவும் கவலைக் கிடமாகிக்கொண்டு வந்ததைக் கண்டு, இராமகிருஷ்ண மடாலயத்தினரும் அன்பர்கள் பிறருமாக, சுவாமிகளுக்கு அமைதியான தோர் சூழ்நிலையை ஆக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனல், சுவாமிகள் (19—7—49) சனிக்கிழமை இரவு ஒன்றரை மணியளவில் — தமது ஐம்பத்தைந்தாவது வயதில் — பரமபத மடைந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில், சுவாமிகளுடைய பூத உடல் வெள்ளவத்தையிலுள்ள இராமகிருஷ்ண மடாலயத்துக்கு எடுத்து வரப்பட்டது. சுவாமிகளின் திருவுடலைத் தரிசிப்பதற்காகக் கொழும்பிலும் பிறவிடங்களிலுமிருந்து ஏராளமான மக்கள் அங்கே வந்து குழுமியிருந்தார்கள். பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் வந்திருந்தார்கள். மட்டக்களப்பிலிருந்து சுவாமிகளுடைய உறவினரும் பலர் வந்திருந்தார்கள். அப்போது இலங்க்கக்கு விஜயஞ் செய்திருந்த நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்களும் அன்று அங்கே பிரசன்னமாயிருந்து, சுவாமிகளுக்குத் தமது காணிக்கையைச் செலுத்தினர்கள்.

மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட மடாலய மண்டபம், அன்று பொலிவுற்றதாய்க் காட்சியளித்தது. மண்டபத்தின் நடுவண், வெண்ணிறமான பேழை யொன்றில், சுவாமிகளுடைய பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. வந்தோ ரனைவரும் மலர் தூவி வணக்கஞ் செலுத்தினர்கள்; தூபமு மிட்டார்கள். தேவார திருவாசகங்கள் அன்பர்கள் பலராற் பாடப்பட்டன.

### பிரிவு நிலைப் பேச்சுக்கள்

சுவாமிகளின் தனிப் பெருமையினைக் கூறுவதற்காக எழுந்த பிரதி வித்தியாதிபதி திரு. கே. எஸ். அருள்நந்தியவர்கள், கவலை நெஞ்சை அள்ள - ஒவ்வொரு சொல்லாக - விம்மலுடன் சுவாமிகளின் பிரிவைப்பற்றி எடுத்துரைத்து, ஈழ நாட்டின் தனிப் பெரும் புலவராகத் திகழ்ந்த அடிகளாரின் பிரிவு ஈழ நாட்டுக்கு மட்டு மன்றி, இந்தியாவுக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமென்று குறிப்பிட்டார்கள்.

அடுத்தபடியாக, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்கள், "ஈழ நாட்டின் - தமிழ் நாட்டின் - சுடர் இன்று அணைந்து விட்டது. இது ஈழ நாட்டுக்கு மட்டுமன்றித் தமிழ் நாடு முழுவதற்குமே தீராத நஷ்டந்தான். அவர் மறைவுக்கு உண்மையில் துக்கப்படவேண்டியவன் நான். ஏனெனில், சுவாமிகள் என்னைத் திருச்சி ரேடியோவில் கவியரங்கு நடைபெற்றபோது சந்தித்து ஈழ நாட்டுக்கு வர வேண்டுமென்று தெரிவித்தார்கள்; வந்தேன். ஆனால், நான் வந்தபோது, 'அவருக்கு மிகவும் கடுமையான சுகவீன'மென நண்பரொருவர் கூறினர். இன்று சுவாமிகள் சுவர்க்க வாசம் செய்யப் புறப்பட்டு விட்டார்கள். அவரின் ஞாபகார்த்தமாக அவர் விட்டுச் செல்லும் சேவைகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று கூறி, சுவாமிகள் துறவொழுக்கத்தை மேற்கொண்டிருந்தும் தமிழ் மொழிக்கும் அருங்கலைக்கும் ஆற்றிய தொண்டுகளை எடுத்துக் காட்டினார்கள். அதன் பின், தென்காசி அருணாசலம் பிள்ளையவர்கள் வெகு உருக்கத்துடன் பேசினார்கள்.

## அடிகளார் பூதவுடல் மட்டக்களப்புச் சேர்தல்

மாலை 6 மணியளவில், சுவாமிகளுடைய பூதவுடலினை, மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட இரதம், கோட்டைப் புகையிரத நிலையத்துக்குச் சுமந்து சென்றது. ஊர்வலத்தின்போது பண்ணுடன் சிவ புராணம் பாடப்படுவ தாயிற்று. புகையிரத நிலையத்தில், கொழும்பிலுள்ள பிரமுகர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், தமிழன்பு பூண்ட பொது மக்களுமாகச் சேர்ந்து நின்று தமது இறுதி மரியாதையைச் செலுத்தி, அடிகளாரின் பூதவுடலை அன்னாரின் ஜனன பூமியாகிய மட்டக் களப்புக்கு அனுப்பி வைத்தார்கள்.

திங்கட் கிழமை காலை 10-மணியளவில், சுவாமிகளின் திருவுடலைத் தாங்கிச் சென்ற புகையிரதம், மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை அடைந்தது. இராம கிருஷ்ண சங்கத்தின் இலங்கைக் கிளையின் தலைவர், சுவாமி சித்தாத்மானந்தரவர்களும், பல் கலைக் கழகத் தமிழ்ப் பகுதி விரிவுரையாளர் டாக்டர். க. கணபதிப் பிள்ளை அவர்களும், சுவாமி நடராஜானந்தர், திருக்கோணமலை திரு. இராஜ வரோதயர் முதலிய பிரமுகர்களும், அடிகளாரின் மாணவர் பலரும் அப் புகையிரதத்திலேயே சென்றிருந்தார்கள்.

என்றுமே கூடாத பெருங் கூட்டம் மட்டக் களப்புப் புகையிரத நிலையத்திற் கூடியிருந்தது. அதில் இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய எல்லோரும் வேறுபா

டின்றிக் கலந்து கொண்டார்கள். பட்டணத்திலுள்ள 14 பாடசாலை மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் அங்கே அணி வகுத்து நின்றார்கள். ஸ்தாபனங் களும் கடைகளும் மூடப்பெற்றிருந்தன. நீதி மன் றங்கள் அரசாங்க அலுவலகங்க ளெல்லாம் அன்று வழக்கத்துக்கு முன்னதாகவே மூடப்பட்டன.

## பூதவுடல் ஊர்வலம்

புகையிரத நிலையத்திலிருந்தே ஊர்வலம் ஆரம்ப மாயிற்று. வீதி வழியாக உடற்சேமப் பெட்டியின் முன்னும் பின்னுமாக - ஏறக்குறைய இரண்டு மைல் தூரம் வரை - அன்பரும், அரசினர் ஆசிரிய கலா சாலை மாணவ மாணவிகளும் ஈண்டித் தொடர்ந்து வந்தனர். தேவாரம், திருவாசகம், சிவபுராணமாதியன ஓதவும், இன்னிசை வாத்தியங்கள் ஒலிக்கவும், இடை யிடையே சங்கு சேகண்டிகளுடன் "ஜெய" கோஷம் முழங்கவும், ஊர்வலம் பட்டணத்தின் பிரதான வீதி வழியாகச் சென்று ஸ்ரீ விவேகானந்த வித்தியால யத்தை அடைந்தது. அங்கே விசேஷமாக அமைக் கப்பட்டிருந்த மேடையில் மாலை மூன்றரை மணி வரை அடிகளாரின் திருவுடல், பொதுமக்கள் தரிசிப் பதற்காக வைக்கப்பட்டிருந்தது. மட்டக் களப்பின் வெவ்வேறு பாகங்களிலிருந்தும், திருக்கோண மலை, யாழ்ப்பாணம் ஆதியான இடங்களிலிருந்தும் மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து சுவாமிகளின் திருவுடலைத் தரிசித்துவிட்டுச் சென்றார்கள்.

சுவாமிகளின் பிறந்த வூராகிய காரை தீவிலேயே சமாதியை அமைக்க வேண்டுமென்று அடிகளாரின்

இனத்தவர்கள் பலர் விருப்பங் கொண்டிருந்தார்கள். அடிகளார் உயிரோடிருந்த காலத்திலே தெரிவித்துக் கொண்ட விருப்பத்தின்படியும், முற்றுந் துறந்த அடிகளாரின் திருவுடலுக்கு, அவர் இனபந்துக்கள் மட்டுமல்ல, மட்டக்களப்பு மக்கள் யாவருமே உரிமையுடையவர்கள் என்ற காரணத்தினாலும், அடிகளாரது சேவையின் பயனாக மலர்ந்ததும், தாகூரின் 'சாந்தி நிகேதனம்' போன்றதும், கல்லடி உப்போடையிலமைந்ததுமான சிவானந்த வித்தியாலயத்திலேயே அவர்களது திருவுடலை அடக்கஞ் செய்யவேண்டுமென்று பெரியோர்களால் தீர்மானிக்கப்பட்டது.

பிற்பகல் மூன்று மணியளவில், விவேகானந்த வித்தியாலயத்திலிருந்து மீண்டும் ஊர்வலம் ஆரம்பமாயிற்று. முன்போலவே இவ் வூர்வலத்தின்போதும் சனக் கூட்டம் அதிகமா யிருந்தது. மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவர்கள் நூற்றுக் கதிகமானோர் காவிநிறக் கொடிகளுடன் இருவ ரிருவராக அணிவகுத்து முன்னே செல்லவும், ஆசிரிய மாணவிகள் இருநூற்றுக் கதிகமானோர் பிற பெண்பாலருடன் இருவ ரிருவராக அணிவகுத்து இனிய பிரார்த்தனைக் கீதங்கள் பாடிக்கொண்டு பின்னே செல்லவும், பிரமுகர்களும் அடிகளாரது நண்பர்களும் ஊதுபத்தி சாம்பிராணி புகைத்துச் செல்லவும், அழகிய பல்லக்கில் அடிகளாரது திருவுடல் வீதி வழியே சுமந்து செல்லப்பட்டது. வாயிலுக்கு வாயில் நிறை குடங்கள் வைத்து அதற்கு ஆராதனைகள் நடைபெற்றன.

ஊர்வலமானது நாவற்குடா, நொச்சிமுனை, மஞ்சந் தொடுவாய் ஆகிய கிராமங்க ளூடாகச்

சென்று, இரவு ஏழரை மணியளவிற் சிவானந்த வித்தியாலயத்தை அடைந்தது. அங்கும், "சிவபுரி" என்னுங் கட்டிடத்தில், மக்கள் தரிசனத்துக்காக ஒரு மணி நேரம் வரை சுவாமிகளின் திருவுடல் வைக்கப் பட்டிருந்தது.

## விசேட அபிடேகம்

வித்தியாலயத்திலே சுவாமிகள் தங்கியிருந்து, போதனை புரிந்துவந்த ஆலமரத்தின் கீழ், சுவாமி களின் சமாதி விசேடமாகத் தயார் செய்யப்பட்டிருந் தது. அதனருகே மின்சார விளக்குகளால் அலங்கரிக் கப்பட்டிருந்த பூம்பந்தரிலே உடற்சேமப் பெட்டியை வைத்து, சுவாமிகளின் ஆத்ம சாந்திக்காக விசேட அபிடேகமும் செய்யப்பட்டது.

## இரங்கலுரை

அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும், அவர்கள் செய்த பலவாய சேவைகளைப் பற்றியும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர் கள் ஆகிய அறிஞர்கள் பலர் பல மொழிகளிலும் பேசினர்கள். தேவாரங்களும், தனிப்பாடல்களும், நெஞ்சை யள்ளும் இரங்கற் பாக்களும் பாடப்பட்டன.

## பிரார்த்தனை

பின்னர், அடிகளாரின் திருவுடல் சமாதிக் கருகில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்குக் கொண்டு வரப்பட்டதும், அமைதியான பிரார்த்தனைகள் ஆரம்ப மாயின. பௌத்த ஆகமங்களிலிருந்து சிங்கள-பாளி

மொழிகளிற் பிரார்த்தனை செய்யப்பட்டது. பகவத் கீதையிலிருந்து சில சுலோகங்கள் வாசிக்கப்பட்டன. குர் ஆன் பிரார்த்தனைப் பாடல்கள் ஓதப்பட்டன. கிறிஸ்தவ வேதமான விவிலிய நூலிலிருந்தும் மிகவும் பொருத்தமான பகுதியொன்று வாசிக்கப்பட்டது. திருவாசகமும் திருப்பொற் சுண்ணமும் இசைக்கப் பட்டன. சுவாமி சித்தாத்மானந்தரவர்கள் சமஸ் கிருதத்திற் பிரார்த்தனை நிகழ்த்தினார்கள்.

**சமாதிப்பாடு**

அதன் பின், இரவு பத்து மணியளவில், சுவாமி களின் திருவுடலானது ஆலின்கீழமைக்கப்பட்டிருந்த கல்லறையில் - விபூதி, கர்ப்பூரம் ஆகியவற்றால் மறைக்கப்பட்டுச் - சமாதி வைக்கப்பட்டது.

**கீழக் கடலிற் கிளர்ந்த கதிரவன்மேல்**
**ஆழக் கடலில் அடைந்தாற்போல்—ஈழத்(து)**
**எழுந்திசையே கோள்விபுலா நந்த அடிகள்**
**தொழுந்தகைய ரானார் தொடர்ந்து**



அடிகளார் சமாதி

# அடிகளார் இயற்றிய கவிதைகளுட் சில

1. தேவபாணி .... 71
2. வீரரமகளிர் .... 74
3. உபகுப்தர் .... 82
4. 'கீதாஞ்சலி' .... 86
5. கங்கையில் விடுத்த ஓலை .... 87
6. தில்லித் திருமருமார்பன் திருக்கோயில் .... 93
7. இமயத்தைச் சேர்ந்த காக்கை .... 100
8. ஆறுமுக நாவலர் .... 111

அடிகளார் இயற்றிய கவிதைகளுட் சில

## 1. தேவ பாணி

[ஆலயத் திருப்பணியே ஆண்டவன் சேவை யெனக் கருதி, திருக்கொள்ளம் பூதூர் முதலிய கோயில்களை, இருபத்தைந்து நூறுயிரம் வெண் பொற் காசுக்கு மேலும் செலவிட்டுத் திருப்பணி செய்த திருவாளர் பெ. இராம. இராமன் செட்டியார் அவர்கள் முன்னோர்கள் தொடக்கமாக வழிபட்டு வருகின்ற கடவுள், பொய்யாத விநாயகர். இவர் எழுந்தருளியுள்ள கோயில், புதுக்கோட்டைக்கு மேற்கில் ஆறு கல் தொலையில் உள்ளது.

இக்கோயில் பேரையூர் அம்பாள் குளக்கரையில் உள்ளதாகும். இக்கோயிலை நோக்கிச் செல்லும் சாலை, இரு மருங்கும் தவித்தவர்க்குத் தலையாலே நீர்தரும் கற்பகக்கா நிறைந்தது. இச் சாலைவழியே சென்றால் மூத்த பிள்ளையார் உறைவிடம் காணப் பெறும். இவ்விடம் மிக்க அமைதியானது. ஆரவார மற்றது. கோயிலின் நான்கு பக்கங்களும், அரசு, ஆல் முதலான மரங்கள் அடர்ந்து குளிர்ந்த நிழலைத் தந்துகொண்டு இயற்கை யழகோடு விளங்குகின்றன. இதன்பாங்கர் நந் தவனந் தீர்க்கும் நந்தவனம், ஆண்டவனை வழிபாடு செய்தற் குரிய நறுமலர்களைத் தந்து நிற்கின்றது.

இத்தகைய அழகுடன் விளங்கும் இடத்தில் கோவில்கொண் டிருக்கும் ஆண்டவனைக் காண்ப தற்கு அறச் செல்வர் திரு இராம. சிதம்பரம் செட்டி யாரவர்களோடு சென்ற அருட்டிரு விபுலானந்த

ரவர்கள், மூத்தபிள்ளையாரின் முகமலர்ச்சியில் ஈடுபட்டு, அவ்விநாயகர் மீது தேவபாணி யென்ற இத் தோத்திரப் பாவை யியற்றி யருளினார்கள். இஃது அவ்வாண்டவன்முன் பாடப் பெற்றது. இத் தேவபாணி, பின் நிகழ்ந்த யாழ்நூல் அரங்கேற்று விழாவிற்கு விடை (அனுக்ஞை) பெற்ற முறையில் அமைந்துளது.]

### தரவு

மலையரசன் திருப்பாவை வாணுதலா ளுளமகிழுங்
கலையரசே! கற்றோர்கள் காதலிக்குங் கற்பகமே!
நல்லறத்தின் தனிமைந்தன் நானிலங்கா ரணமாக
வில்லறத்தின் வழிநின்ற விறற்சரிதங் கிரிப்புறத்தில்
எழுதுகரு ணீக! நின திணையடியே புணையாகப்
பழுதில்கலைக் கடலென்னும் பரவையினைக் கடப்பேமால்.

### தாழிசை

திருநாரை யூர்வாழுந் திருவாளா! அருளாளா!
பெருநாரை பெருங்குருகு பேரிசையே சிற்றிசையே
உருவாய தமிழகத்தி லுயர்மூவர் தெய்வஇசை
வருமாறு பணித்ததுவும் மன்னியநின் னருளன்றோ?

முத்தமிழும் பெருக்கியசீர் முதல்வனார் திருக்குமரா!
பத்தியுடன் பணிபவர்க்குப் பலகலையும் பாலிக்கும்
சித்திபுத்தி நாயகனே! திருமுறைகள் தமிழகத்தில்
நித்தநிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ?

திருக்கிளருஞ் சோழமன்னர் தேவாரத் திருமுறைகள்
இருக்குமிட மேதுவென்ன வியம்புதியென் றனைப்பணிந்து
வருக்கைநறுந் தேன்கதலி யெள்ளுண்டை யப்பமவல்
பெருக்கவவர் கருத்துமுற்றப் பெற்றதுநின் னருளன்றோ?

தனிச்சொல்

எனவாங்கு,

சுரிதகம்

திருந்திய தமிழாற் சேவடி பரவுதும்
தெய்வத் தமிழிசை வையத் துயர்வுற,

பத்தர் கோடே நரம்பே யாப்பென
வைத்த வுறுப்பு வளம்பெற மன்னி

செம்மை படுமலை செவ்வழி யருமை
கோடி விளரிமேற் செம்பா லையென
ஏழ்பெரும் பாலையு ளியன்ற நல்லிசை

சீரே பாணி தூக்கென நின்ற
முத்திறத் தானமு மெத்திறத் தோரும்
கேட்டு மகிழ்வெய்தப் பாட்டி னியலும்
பண்ணி னியலு மெண்ணியாங் குரைக்கும்
யாழ்நூல் பொலிவுற் றேழிசை பரப்புக.

மழைவளஞ் சுரந்து மன்னுயி ரோங்குக.
நின்னடி பணிந்த இராமன் சீர்மிக.
நல்லோர் அவைக்களம் நாளும் பொலிக.

பேரையூர் மன்னிய சீருடைச் செல்வ!
அம்பாள் குளத்தி லணிபெற அமர்ந்த
பொய்யா விநாயக! பூரண என்றே.

## 2. நீரர மகவிர் இன்னிசைப் பாடல்

ஈழமண்டலம் என வழங்கும் இலங்கைத் தீவானது, முன்னளிலே, இரத்தினத்தீவம், மணிபல்லவம் என இரு வேறு பிரிவாய் இலங்கியது. மணிபல்லவம் பின்னளிலே "மணற்றி" எனவும் ஆயிற்று.

"அந்தரம் ஆரு ஆறைந்து யோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த
மணிபல்லவம்" (மணிமேகலை-6)

என்றமையின், காவிரிப்பூம் பட்டினத்துக்கு முப்பது யோசனை தெற்கே மணிபல்லவம் அமைந்திருந்த தென்பதும்,

"ஈங்கிதன் அயலகத்து இரத்தினத் தீவத்து
ஓங்குயர் சமந்தத்து உச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடியிணை யாகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குளது" (மணிமேகலை-11)

என்றமையின், மணிபல்லவத்திற்கு அயலிடத்தது இரத்தினத் தீவம் என்பதும், இதனிடத்துள்ள சமந்தம், சமந்தகூடம் எனப்படும் மலையினது உச்சியிலே, புத்ததேவரது திருவடி பொருந்தியுளது என்பதும்,

"இலங்கா தீவத்துச் சமனொளி யென்னும்
சிலம்பிணை யெய்தி வலங் கொண்டு" (மணிமேகலை-28)

என்றமையின், இரத்தினத்தீவம், இலங்காதீவம் எனவும் வழங்கப்பட்ட தென்பதும், சமந்த கூடத்திற்குச் சமனொளி யென்னும் பெயர் உளதென்பதும் பெறப் பட்டன.

சமனொளி மலையிலிருந்து உற்பத்தியாகிக் குண கடலொடு கலக்கும் மாவலி கங்கை யென்னும் நதி ஒன்று உளது. திருக்கரைசைப் புராணம், திருக் கோணசல புராணம் முதலிய நூல்கள் இந் நதியினை மாவலிப் பெயரோடு சார்த்தி வழங்குவன. சிங்கள மொழியிலே இந்நதி — பெருமணல் ஆறு — “மஹா வெலி கங்க” எனப்படும்.

மாவலி கங்கைச் சங்கமத்திற்கு வடக்கே திருக் கோணமலையும், தெற்கே மட்டக்களப்பும் அமைந் துள்ளன. இவை யிரண்டினையும் ஒருங்கு சேர்த்துக் கிழக்கு மாகாணம் என வழங்குவர். மட்டக்களப் பிலே முப்பது மைல் நீண்ட வாவி ஒன்று உளது. இது, கடலொடு கலக்கும் வடகோடி அமிர்த கழி யென்னும் புண்ணியப் பழம்பதிக்கு அணிமையா னது. அழகிய தெற்குக் கோடிக்கு அணிமையாக மேற்குக் கரையிலே மண்டூர் என்னும் புண்ணியப் பழம்பதி யுளது.

வாவியின் மேற்குக்கரை முழுவதும் மருதத் தண் பணை யாகும். கிழக்குக் கரையிலுள்ள ஊர்கள், தெங்கு, மா, பலா முதலிய மரங்கள் செறிந்து கண் ணுக்கும் மனத்துக்கும் உவகை தருவன. புலியன் எனப் பெயரிய திமிலர் குலத் தலைவன் அரசு புரிந்த விடமாதலின், முன்னாளிலே ‘புலியன் தீவு’ என வழங் கப்பட்டதும், இந்நாளிலே மொழிச் சிதைவினாலே ‘புலியந்தீவு’ என வழங்கப்படுவதும், மூன்று மைல் சுற்றளவுடையதும் ஆகிய அழகிய நகரம் ஒன்று, காவிரி நடுவண் அமைந்த திருவரங்கம் போல, மட்டக் களப்பு வாவியின் நடுவண் அமைந்துள்ளது. இந் நகர்

மட்டக்களப்புப் பிரிவிற்குத் தலைநகராகும். ஒல்லாந்தர் (Hollanders: Dutch.) கட்டிய கோட்டை ஒன்று வாவிக் கரையில் உள்ளது.

கோட்டைக்கு எதிர்ப்புறமாக உள்ளது கல்லடியென்னும் ஊர். வாவியினுள்ளே நீர் மட்டத்தின் மேற் பத்தடி வரையி லுயர்ந்த பாறை யொன்று உளதாதலின், இவ்வூர் இப்பெயர் பெற்றது.

இளவேனிற் காலத்திலே, நிறைமதி நாளாகிய பூரணை நாளிலும், அதற்கு முன்னும் பின்னு முள்ள நாட்களிலும், வானம் களங்க மற்றிருக்கும் வேளையிலே, யாமப் பொழுதிலே, புலியந்தீவுக் கோட்டைக்கும் கல்லடிக்கு மிடையிலே, சிறு தோணியினைச் செலுத்திச் சென்று, வாவி நடுவிலே, ஆர்ப்பரவமின்றி அமைதி நிலையி லிருந்து உற்றுக் கேட்டால், நீரினுள்ளிருந் தெழுகின்ற அற்புத மாகிய இன்னிசையொலி, செவி வழிப் புகுந்து உள்ளத்தையுருக்கும். இத்தகைய அற்புத இசையொலியானது வட அமெரிக்க நாட்டின் மேற்றிசையி லுள்ள கலிபோர்னியா (California) நாட்டிலும், மட்டக்களப்பு நாட்டிலு மன்றிப் பிறி தெவ்விடத்திலும் கேட்கப் பட்டிலது என அறிஞர் கூறுவர்.

இலங்கைக்கு வரும் மேனாட்டுப் பிரயாணிகள் இவ் விசையைச் செவிமடுப்பதற்காக மட்டக்களப்பிற்கு வருவதுண்டு. இவ் விசை நீரிலிருந்து எழுவதாதலின், நீர் வாழ் செந்துவின் ஒலியாதல் வேண்டுமென எண்ணிப்போலும், அந்நிய நாட்டார் இதனைப் பாடும் மீன் (Singing fish) இசை யென்பர்.

மீன்கள் நீரினுட் பிறழ்ந்து ஆடுதலைக் கண்டோமே யன்றி, அவை மகிழ்ச்சியாற் பாடுதலை யாண்டுங் கேட்டில மாதலின், அந்நிய நாட்டாரது உரையினை யாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். கலை வல்லார் காணாத உண்மைகள் சில கவிஞரது உள்ளத்து உதிப்பவாதலின், இவ்வற்புதக் கீதவொலியைக் குறித்துத் தமிழ்ப் புலவர் ஒருவர் எழுதிய செய்யுள் ஒன்றினை ஈண்டுத் தருகின்றோம். அறிஞர் உவந்தேற்று அருள் புரிவாராக. கவிஞர்க்கு இயல்பாக அமைந்த புனைந்துரை எனக் கொள்ளினும் இழுக்காகாது.

" தண்ணளி செங்கோலாய்த் தனியறமே சக்கரமாய்
மண்முழுதும் ஆண்டபுகழ் வாம னடியிணையே
என்றும் அழியா திலங்குஞ் சமனொளியுங்

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவற்கு
மூவடிமண் ஈந்தளித்து மூவாப் புகழ்படைத்த
மாவலியின் பேரால் வயங்கு மணிநதியும்

காவும் பொழிலுங் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீவமேன
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே,

ஏரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
சீரால் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங் கன்னலோடு

தெங்கின் இளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
எங்குங் குறையா இயலுடைய நன்னாடு

மட்டக் களப்பென்னு மாநாடந் நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்ததோ ணுமுகமாய்

ஐங்கரன் கோயில் அமிர்த கழிக்கணித்தாய்ப்
பொங்கு கடலுட் புகும்நீர் நிலையொன்று,

நீர்நிலையி னுள்ளே நிகழ்ந்த அதிசயத்தைப்
பாரறியக் கூறும் பனுவல் இதுவாகும்.

மாசகன்ற மணிவிசும்பில் வயங்குநிறை மதியம்
மலர்க்கிரண ஒளிபரப்ப வளரும்இள வேனில்
வீசுதென்ற லோடுங்கூடி விளையாடல் கண்டு
விண்ணகத்தார் மண்ணகத்தில் விழைவுகொளும் யாமம்.

அஞ்சிறைய புள்ளொலியும் ஆன்கன்றின் கழுத்தில்
அணிமணியின் இன்னொலியும் அடங்கியபின் நகரார்
பஞ்சியைந்த அணைசேரும் இடையாமப் பொழுதிற்
பாணனொருந் தோணிமிசைப் படர்ந்தனனோர் புலவன்.

தேனிலவு மலர்ப்பொழிலிற் சிறைவண்டு துயிலச்
செழுந்தரங்கத் தீம்புனலுள் நத்தினங்கள் துயில
மீனலவன் சேலவின்றி வெண்ணிலவிற் றுயில
விளங்குமட்டு நீர்நிலையுள் எழுந்ததொரு நாதம்.

| | |
|---|---|
| நிநி – சாச – ரீ | நீல வானி லே |
| நிசரி - காக – மா | நிலவு வீச வே |
| மாம – பாப – தா | மாலை வேளை யே |
| மபத - நீநி – சா | மலைவு தீரு வோம் |
| சாச – ரீரி – கா | சால நாடி யே |
| சரிக - மாம - பா | சலதி நீரு ளே |
| பாப - தாத – நீ | பாலை பாடி யே |
| பதநி - சாச – ரீ | பலரோ டாடு வோம் |

நீல வானிலே நிலவு வீச வே
மாலே வேளே யே மலேவு தீரு வோம்.

சால நாடி யே சலதி நீரு ளே
பாலே பாடி யே பலரோ டாடு வோம்.

நிலவு வீச வே மலேவு தீரு வோம்
சலதி நீரு ளே பலரோ டாடு வோம்

நிசரி காக மா மபத நீநி சா
சரிக மாம பா பதநி சாச ரீ
ரிகம பாப தா தநிச ரீரி கா
கமப தாத நீ நிசரி காக மா

நிலவு வீச வே மலேவு தீரு வோம்
சலதி நீரு ளே பலரோ டாடு வோம்

என்ன எழுந்தஅந்த இன்னிசைத்தீம் பாடலினைக்
கன்னலெனக் கேட்டுக் களித்த புலவனுந்தன்

அன்பன் முகநோக்கி " ஆகாவிவ் வற்புதத்தை
என்னேன் றுரைப்பேன்! இசைநூற் பொருளுணர்ந்தேன்.

ஐந்தாம் நரம்பின் அமைதியினை யானறிந்தேன்.
காந்தாரத் தைந்தாய்க் கனிந்த நிஷாதமெழும்.

செய்ய நிஷாதச் செழுஞ்சுரத்தின் பஞ்சமமே
வையம் புகழுகின்ற மத்திமமாம் மத்திமத்திற்(கு)

அஞ்சாஞ் சுரமாம் அணிசட்ஜம் சட்ஜத்தின்
பஞ்சமமே பஞ்சமமாம் பன்னும் ரிஷபமதற்(கு)

அஞ்சாஞ் சுரமாய் அடையும் அணிரிஷபத்(து)
எஞ்சாத பஞ்சமமாய் எய்திநிற்குந் தைவதமே

தைவதத்திற் கைந்தாய்த் தனித்தகாங் தாரமேழும்.
இவ்வகையே ஏழாகி இன்னிசையாழ் தீங்குழலில்
நாதமாய்த் தோன்றி நவைதீர் அமிழ்தனைய
கீதமாய் மேவுங் கிளையாய்ப் பகைநட்பாய்
நின்ற முறைமை நினையின் இவைகிளையாம்''

என்ற பொழுதில் எழுவர் மடநல்லார்
நீரு ளிருந்தெழுந்து நின்று ரரமகளிர்
ஆதலினால் மூப்பறியார் அந்தீங் குழலொலியும்
ஓதிய யாழின் ஒலியு மெனமொழிவார்
பைம்புனலின் மேற்படர்ந்த பாசிநிகர் கூந்தலார்.
அம்பொன்னின் மேனி அரையின்கீழ் மீன்வடிவம்.
செங்கமலம் போற்கரங்கள் திங்கள் மதிமுகத்திற்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்

கவிமுகத்தை நோக்கிக் கனிந்துரைப்பார் "யான்கிளையே.
புவியிலேனைத் தாரமென்பார் புதல்வியிவள் பேர்உழையே.
உழையின் மகள்குரற்பே ருற்றாள் இளிதநயை.
பிழையி லிளிபாற் பிறந்தாள்பேர் துத்தமே.
துத்தம் பயந்த சுதைவிளரிப் பேர்பூண்டாள்.
உய்த்த விளரிக் குறுதநயை கைக்கிளையே.
பொன்னின் கபாட புரத்துறைவோம் மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்.
ஆடுவோம் பாடுவோம் ஆராத காதலினால்
வாடுவோம் பின்னர் மகிழ்வோம் நகைபுரிவோம்.
அச்ச முறுவோம் அடையாதார் தங்களையாம்
இச்சை யறவே இழித்துரைக்கும் சீர்மையேம்.
உருத்தெழுந்து கோபிப்போம் உண்மை யுரைப்போம்.
அருத்தியோடு வீரம் அறைவோம் வியப்புறுவோம்
திங்கள் நிறைநாளிற் சேர்வோம்இந் நீர்நிலையை.

கங்குல் கழியுமுன்னே கார்படிந்த மைக்கடலைச்
சென்றுயாஞ் சேர்வோமேஞ் செய்கை யிது" வென்றார்.
ஒன்றாக நீருள் ஒளித்தார். தமிழ்ப்புலவன்
சிந்தையை யன்னார்பாற் சேர்த்தி மணைபுகுந்தான்.
வந்த இசையின் வரன்முறையும் ஈங்கிதுவே.

குறிப்பு: கபாடபுரம், இடைச் சங்கத் திறுதியிலே கடலுள் அமிழ்ந்தது.

தாரம் - காந்தாரம், உழை - நிஷாதம், குரல் - மத்திமம், இளி - சட்ஜம், துத்தம் - பஞ்சமம், விளரி - ரிஷபம், கைக்கிளை - தைவதம் என அறிக.

நவரசமும் இசைக்குரிய என்னும் உண்மை 'ஆடுவோம் பாடுவோம்' என்பது முதல் 'வியப்புறுவோம்' என்பது வரையும் கூறப்பட்டது.

## 3. வங்கத்துதித்த செங்கதிர் வேந்தர்

[நாவலந்தீவின் நலத்தினை விளக்கும் பாவலர் பலருள் வங்க மொழிக் கவிவாண ராகிய ரவீந்திர நாதர் மங்காத கீர்த்தி படைத்தவர். "ரவி" என்னும் வடமொழி தமிழிற் "செங்கதிர்" என வழங்கும், விண்ணவர் தலைவனாகிய "இந்திர" னைத் தொல்லாசிரியர் "வேந்த" னென வழங்கினர். "ரவீந்திரர்" தமிழ் வழக்கிற் "செங்கதிர் வேந்தர்" ஆவார்.

இவர் உரைவனப்பினோடு உடல்வனப்பு முடையவர்; வேந்தர்க் கியைந்த கண்ணோட்ட முடையவர்; இசைக்கலையிலும் இனிது தேர்ச்சி பெற்றவர்; பாரக மடங்கலும் பரந்திசை யெய்தியவர். இவரது நூல்கள் பல மொழிகளிலும் வெளிவந் துள்ளன. தமிழில் வரின் அவை தமிழணங்கினுக்குப் புதியதோர் ஆக்கத்தைத் தரும் நீர்மைய. ........................]

## முதற் காட்சி

காலம்: கார்காலம் (இற்றைக்கு ஈராயிரமாண்டு
களுக்கு முன்.)

களம்: மதுரைமாநகரின் மதிற்புறம்.

*[அருள்வள்ள லாகிய புத்த தேவரின் மாணுக்கர் யாங்கணுஞ் சென்று, மக்களுக்கேற்பட்ட உடற்றுன்பாகிய நோயினையும், உளத்துன்பாகிய அறியாமையினையும், உயிர்த்துன்பாகிய பாவத்தினையும் போக்கடிப்பார்; அவருள் ஒருவர் உபகுப்தரென்பார்.]*

பத்ததேவர் மாணுக்கராம்—உபகுப்த
புண்ணிய ரேனும்பெயர் நண்ணியவர்
மாமதுரைப் பழம்பதியில்— ஓங்கி
வானிமிரு மாளிகைசூழ் மதிர்புறத்திற்
பூமகளே யணையாக—நல்ல
புழுதியிற் றுயின்றனர் தொழுதகையார்.
சுடரொளித் தீபமெல்லாம்—அணைந்தன
தொடர்புடைக் கதவங்க ளடைபடவே.
கார்ப்பருவ முகிற்குலத்தால்—வானத்துக்
கதிரொளித் தாரகைக் கணங்களெல்லாம்
ஆர்ப்பரவ மின்றிமறைய—பதவ்ணை
அணிமணிச் சிலம்பொலி யரற்றவந்தாள்
மாதொருத்தி துயில்கின்ற—உபகுப்தர்
மார்பினிற் கையைவைக்க அவர்விழித்தார்.
தீதில்விழி மீதினிலே— அவள்கைத்
தீபத்தின் கிரணங்கள் சேறிந்தனவே.

நாடகக் கணிகையவள்—உடுநிகர்
நவமணி யழுத்திய அணியுடையாள்.
நீலச்சிற் றுடையினுள்—இளமை
நிறைமது வெறிகொளு நீர்மையினுள்.

தீபத்தைக் கீழ்நோக்கித்—தவவொளி
திகழு மிளந்துறவி திருமுகத்தைத்
தாபத்தோ டெதிர்நோக்கி— "ஐய
தவறுள தேலென்றன் பிழைபொறுப்பாய்,

செம்புழுதிச் சயனமிது—நினக்குச்
சீரிதல்ல விளையோயென் றிருமனைக்கு
வந்தருள வேண்டு" மென்றுள்—இம்மொழி
மாதவ முனிசெவி வழிப்புகவே

"நங்கைநீ வந்தவழிபோ—தக்க
நாளினில் யான்வருவ" னெனநவின்றுன்.
கங்குலெனுங் கருந்தெய்வம்—பல்லொளி
காட்டுதல் போன்மின்னல் கான்றதுவே.

வானகத் தொருதிசையிற்—பிரசண்ட
மாருத முறுமிற்று. மனநடுங்கிக்
கானகத் திள மான்போல்—அந்தக்
காரிகை நெடுவழி கடுகினளே.

## இரண்டாங் காட்சி

காலம்: இளவேனிற்காலம்

களம்: மதுரைமாநகரின் மதிற்புறம்.

அழகாரு மலர்சுமந்து தெருவீதி மரக்கிளைகள்
அலமந் தேங்கக்
குழலாரு மிசைவிரவி நெடிதுயிர்க்கும் வேனில்வளிக்
குறிப்பு நோக்கி,
விழவாரு மிளையோர்கள் நகர்ப்புறத்தில் மதனவேள்
விழையு நீர்மைப்
பொழில்சேர, முழுமதிவா னடுநின்று மோனநகர்ப்
புதுமை நோக்க

மாங்குயில்கள் துயிலின்றி யூடலுரை நிகழ்த்துகின்ற
மலர்ப்பூஞ் சோலைப்
பாங்குசெலு மிளந்துறவி நகர்வாயில் கடந்துமதிற்
பக்கஞ் சென்றான்.
ஆங்கொருபெண் ணுடன்முழுதுந் தொழுநோயுற் றுருமாறி
யவலித் தாளைத்
தீங்கிதென நகரிலுளா ரகற்றுதலுந் தனிக்கிடந்தாள்
திறத்தைக் கண்டான்.

தீராநோ யுற்றாள்பாற் சென்றமுனி மடியிலவள்
சிரத்தைத் தாங்கி
நீரூட்டி நோய்தணிக்கு நேயமுறு நன்மருந்தை
நிறைக்க வன்னாள்,
"யாரோவிவ் வேழைபா லிரங்கினீ ரைய" வென
"யான்சொல் வார்த்தை
சோராதே யின்றுன்பால் வந்துளே" னெனமுனிவன்
சொல்லி னானே.

[ குறிப்பு: (9) கார்முகிலால் வானகத்து மறைந்த விண்மீன், (12) கணிகை யணியி னழுத்திய மணியாகத் தோன்றிற் றென்பதும், (20) உவகை வயப்பட்ட சோர்வுடைத்தாதலின் இளமையும் ஒருவகை மதுவே யாமென்பதும், (31-34) மின்னலுங் கடுங்காற்றுங் கங்குலாகிய கரிய தெய்வத்தின் நகையினையும் ஆர்ப்பினையும் ஒத்தன வென்பதும், (35-36) அவை முனிவனது தவத்தினைக் கெடுக்க முயன்றாட்கு அச்சத்தை விளைத்தன வென்பதும், ஆங்கவள் கடுக வகன்றது காரொலி கேட்டஞ்சி யகன்ற இளயானினது தோற்றத்தை நிகர்த்த தென்பதும், (40) வேனிற் காலத்து முழுமதி வானி னடுவி னின்று மோன நகரினை நோக்கிற் றென்பதும், (41) குயிலிசை ஊடலுரை யாயிற் றென்பதும், துயருற்ற காலத்து முனிவர் தெய்வம் போன்று உதவுவாரென்பதும் பிறவும் ஈண்டு நோக்கற்பாலன. ]

## ஈசனுவக்கும் இன்மலர்கள்

வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ,
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரேதுவோ ?
வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல,
உள்ளக் கமலமடி, உத்தமனார் வேண்டுவது !

காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரேதுவோ ?
காப்பவிழ்ந்த மலருமல்ல, கழுநீர்த் தொடையுமல்ல,
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது !

பாட்டளிசேர் பொற்கொன்றையோ, பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்ட முறுதவர்க்கு வாய்த்த மலரேதுவோ ?
பாட்டளிசேர் கொன்றையல்ல, பாரிலில்லாப் பூவுமல்ல,
காட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது !

## 4. கடவுள் வணக்கம்

("கீதாஞ்சலி"யிலுள்ள பாடலொன்றின் மொழிபெயர்ப்பு)

என்னுயிர்க் குயிரே! யேழையே னுடல
மெங்கணு நின்றிருப் பரிசம்
மன்னிய துணர்ந்தே யுடலினைத் தூய்தா
வைத்திருக் குஞ்செயன் மறவேன்.
துன்னுமென் னுளத்தி லறிவொளி பெருக்குஞ்
சுடர்நிக ருண்மைநீ யதனால்
இன்னல்செய் பொய்யி னெண்ணமே புகாம
லென்றுநான் முயன்றகற் றிடுவேன்.

கோயிலாய் நீயென் னிதயமே கொண்ட
குறிப்பினை யுணர்ந்துளே னதனால்
தீயன யாவு மகற்றியே யுளத்திற்
செவ்விதா மன்பல ரமைப்பேன்.
மேயநின் னருளே வலிமையை யளிக்கும்
விதத்தினை யுணர்ந்தபான் மையினல்
நேயமாய்ச் செய்யுங் கருமங்க ளனைத்தும்
நின்னியல் புணர்த்தி நின்றனவே.

---

# 5. கங்கையில் விடுத்த ஓலை

(கங்கைக் கரையில்
வேலூர்த் திருமடத்திலிருந்து எழுதியது)

எழுத்தறிந்து கலைபயின்றோன் இன்றமிழின் இயனூல்
எத்தனையோ அத்தனையும் எண்ணியுளங் கொண்டோன்.
பழுத்ததமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்
பணிந்தமொழிப் பெரும்புலவன் கனிந்தகுண நலத்தான்.

சொல்வகையும் சொற்றொகையும் சொன்னடையும் உணர்ந்
சொலல்வல்லான் சொற்சோராத் தூயநெறி யாளன். [தோன்.
பல்வகைய நூற்கடலுட் படிந்துண்மை மணிகள்
பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போல்வான்.

மொழித்திறத்தின் முட்டறுத்து முதனூலும் உணர்ந்தோன்
'மொழிவதற மொழி' யென்னும் மூதுரையைத் தெளிந்
அழுக்கறுத்த தூயசிந்தை அந்தண்மை அடக்கம் [தோன்.
அணியிவைதாம் எனக்கொண்டோன் அறநெறியில் நின்றோன்.

மெய்ப்பொருளே பொருளென்ன விளங்கவைத்த முன்னோர்
விரித்துரைத்த அகமேழும் புறமேழும் பயின்றோன்.
பொய்ப்பொருளை நச்சுபவர் புறங்கடைநோக் காதோன்.
போதுபுனை மாதர்நலம் தீதெனவிட் டகன்றோன்.

அவநெறியிற் செல்வோர்தாம் கரும்பிருக்க இரும்பை
அயிலுகின்ற மூடரென அறிந்துலகு துறந்து
தவநெறியிற் றலைப்பட்டோன அவவின்மை யென்னும்
தனிச்செல்வந் திரட்டிவைத்த தாவில்புக ழாளன்.

அன்பாண்ட புலமையினோர் எந்நாடும் நாடா
   அடைந்துவத்தல் முறையெனினும் அமலனர சாண்ட
தென்பாண்டி நன்னாட்டிற் சோழவந்தா னூரைச்
   சேர்ந்துதிகழ் சைவநெறித் திருமடத்தில் உறைந்தோன்.

கந்தசா மிப்பெயரோன் வேட்களத்தி லென்னைக்
   கண்டநாள் அன்பென்னுங் கயிறுகொண்டு பிணித்தான்.
அந்தநாள் முதலாக நட்புரிமை பூண்டோம்.
   அண்மையில்யான் வடநாடு நண்ணியதை யறிந்தே

'நம்மடிக ளுறைகின்ற தவப்பள்ளி யாது
   நற்றவத்தோர் முகவரியா' தெனவினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்திபோதி ஓலையொன்று விடுக்கச்
   சிந்தைவைத்தான் எனவெனக்கோர் அன்பனறி வித்தான்.

அகநேகுமன் பினிலூறும் உரைபகரும் பொருட்டோ,
   ஆய்ந்தசில கலைமுடிபு தேர்ந்துணரும் பொருட்டோ,
முகவரிபெற் றோலைவிட முயன்றனன்பே ரன்பன்
   முதறிஞ னெனவெண்ணி ஆதரமுற் றிருந்தேன்.

ஓரிருநாள் கழியுமுன்னர் மார்படைப்பு நோயால்
   ஊனுடலம் பாரில்விழ வானுலகு புகுந்தான்.
ஆருயிர்நேர் நண்பனெனும் அவலவுரை செவியில்
   அனற்பிழம்பாய்ப் புகுந்துளத்தை உருக்கியதப் பொழுதில்,

பொங்கியெழுந் துயர்க்கனலைப் போக்குதற்கும் மாயப்
   பொய்யுலகின் உண்மையினைப் புலங்கொளற்குங் கருதிக்
கங்கையெனுந் தெய்வநதிக் கரைப்புறத்தை யடைந்து
   'கல்'லென்று சொல்லிவிழும் நீர்த்தரங்கங் கண்டேன்.

மேற்றிசைவான் ஈமத்தீ போற்சிவக்கப் பகலோன்
　மெலிந்துமறைந் திடல்கண்டேன் நலிந்தவருள் ளம்போற்
காற்றுயிர்த்துப் பனித்திவலை தூற்றுதலைக் கண்டேன்
　காரிருளின் கணமிரிய வானவெளிப் பரப்பில்

ஐயிரண்டு நாள்வளர்ந்த வெண்மதியந் தோன்றி
　அன்புசொரிந் திடல்கண்டேன் மன்பதையோர் வாழ்க்கைச்
செய்தியினைத் தேவரறி வாரெனலால் இவர்பால்
　தேர்ந்திடுவேன் எனமனத்தில் ஓர்ந்தொருபால் இருந்தேன்.

அக்கரையிற் காசிப்பூர்ச் சுடுகாட்டு நரிகள்
　அழுகுரலி னொலிசெவியை யடைந்ததுநன் னீரின்
இக்கரையில் உதிர்சருகும் குச்சிகளும் அலையால்
　எற்றுண்டு செயலொழிந்து கிடந்தனவெம் மருங்கும்

நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சியொன்று கணமும்
　நில்லாது மேலெழுந்தும் கீழ்விழுந்தும் அலைந்து
சீர்க்கரையில் எற்றுண்டு கிடந்தசெயல் நோக்கிச்
　'சிந்திக்கின் மானிடர்தம் வாழ்க்கையிது' வென்றேன்.

இன்பவலை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்,
　எமக்குநிகர் ஆரென்பார், இருகணத்தில் உளத்தில்
துன்பமுற மண்ணில்விழுந் திருகண்ணீர் சொரியச்
　சோர்ந்தழுவார் மயக்கமெனும் சுழல்காற்றில் அலைவார்.

மரணமெனுந் தடங்கரையில் எற்றுண்டு கிடப்பார்,
　மறுபிறவித் திரைகவர வந்தியையுங் கருவி
கரணமுறும் உடலெடுத்து மண்ணுலகில் உழல்வார்,
　காதலிப்பார் எண்ணிறந்த வேதனையுட் புகுவார்.

என்றினைய சிந்தைசெய்து நீலவிதா னத்தில்
  எழில்முத்தின் சுடர்பரப்பி எழுமதியை நோக்கி,
"நன்றறிவார் கலைத்திறத்திற் கிலக்காய மதியே!
  நன்மதியே! நாதர்சடை முடியுறையும் நலத்தோய்!

தாழ்வதுவும் மடிவதுவும் தரணியில்வந் துதித்தோர்
  தாவில்புகழ் நலம்பெருக்கித் தண்ணளிசேர்ந் தனராய்
வாழ்வதுவும் எத்திறத்தால் வந்தனகாண்?" என்றேன்
  வான்மதியம் எனைநோக்கி "மானிடவ, கேட்டி

மாய்தலெனும் பேருண்மை பிறத்தலெனு முண்மை
  வந்துதித்தோர் தோல்லுலகில் வளர்தலெனு முண்மை
தேய்தலெனு முண்மையிவை யாருமுளங் கோள்ளச்
  சென்றுதேய்ந் திறந்துதித்து நின்றுவளர் கின்றேன்.

இன்றுயில்போற் சாக்காடும் இனிதுதயின் றதன்பின்
  எழுவதுபோற் பிறப்புமெனும் இயற்புலவ னுரையை
நன்றுணர்தி" யெனக்கூறும் தண்மதியை நோக்கி [ன்.
  "நரகமோடு சுவர்க்கமுந்தான் நண்ணுவதேன்?" என்றே

"நற்கனவு சுவர்க்கமுளம் நலியவருங் கனவு
  நரகமிவை நல்வினையின் தீவினையின் விளைவாய்
உற்றவேன அறிதி" யெனும் உரையையுளங் கோண்டேன்.
  உண்மை நண்பன் றனைநினைந்து பின்னுமுரை பகர்வேன்,

"வருந்தித்தாங் கற்றகல்வி மாய்ந்துமறைந் திடுமோ?
  மறுமையிலும் உதவுமோ? வான்மதியே!" யென்றேன்
திருந்துகல்வி 'எழுமையுமே மாப்புடைத்' தென் றுரைத்த
  செம்மோழியைத் தேர்தி" யேன வேண்மதியம் விடுக்க,

மாணியென வாழ்க்கைமுற்றும் இலக்கணநூல் பயின்றேன்
வானகத்தும் அதுபயில்வான் எனுமுண்மை தெளிந்தேன்.
பாணினிதொல் காப்பியன்சீர்ப் பதஞ்சலிவா முலகு [தேன்.
படர்ந்தனனென் நண்பனெனும் பான்மையினை உணர்ந்

தோற்றுவதும் மறைவதுவும் தொல்லியல்பென் றுணரத்
துயரகன்ற தெனினுமன்புத் தொடரகலா மையினால்
மாற்றமொன்று முரையாது வான்புகுந்தாற் கோலை
வரைவலென அன்புபோதி வாசகங்கள் எழுதி,

அறிவற்றங் காக்குமெனும் அறவுரையை யெழுதி,
அறநெறியால் இன்பமெய்தும் அமைதியையும் எழுதி,
உறுநட்பு நிலைபெறுமென் றுறுதிப்பா டெழுதி,
ஓதுவிபு லானந்தன் உரையிவையென் றெழுதி,

செல்வமலி விண்ணாட்டிற் செழுங்கலைத்தெய் வம்வாழ்
திருநகரிற் றமிழ்வழங்குந் தெருவிலொரு மனையில்
அல்லலின்றி வாழ்கின்ற கந்தசா மிப்பேர்
அறிஞனுக்கிவ் வோலையென அடையாளம் பொறித்தேன்.

வேலைநீர் வையகத்தோர் அன்னத்தைக் கிளியை
மென்முகிலைத் தூதாக விடுத்தனர்யான் எழுதும்
ஓலைகொண்டு விண்புகுந்து நண்பனிடஞ் சேர்க்கும்
உதவியினைப் புரியவல்லார் யாவரெனக் கலங்கி,

தேவர்புகழ் கங்கையெனுஞ் செல்வநதி நங்கை
செஞ்சடைவா னவனிடத்தாள் இங்குமுறை கின்றாள்.
மூவுலகுஞ் சேலவல்லாள் எவ்வுயிரும் புரக்கும்
முதல்வியிவள் துணைபெறுவன் எனவிதயந் துணிந்தே,

(வேறு)

செம்பவளக் கோம்பினிடைச் சேர்ந்தமுத்து மாலையைப்போல்
எம்பெருமான் செஞ்சடையை எய்திநின்ற வானதியே!
எம்பெருமான் செஞ்சடைவிட் டிங்குவந்து தண்ணளியால்
வெம்பரிதித் தீயகற்றும் மின்னே! நினைத்தொழுதேன்.

மாற்றுயர்ந்த பொன்மலைமேல் வைத்தவெள்ளிக் கோல்போல
ஏற்றியல்வோன் பொற்சடையை எய்திநின்ற வானதியே!
ஏற்றியல்வோன் பொற்சடைவிட் டிங்குவந்து மக்கள் பசி
ஆற்ற உணவளிக்கும் அன்னாய்! நினைத்தொழுதேன்.

சுடர்கதிரைச் சூழ்ந்தொளிரும் தூவெண் முகில்போல
இடர்களைவோன் நீள்சடையை எய்திநின்ற வானதியே
இடர்களைவோன் நீள்சடைவிட் டிங்குவந்து பூதலத்தோர்
தொடர்பிறவி வேர்களையுந் தூயோய்! நினைத்தொழுதேன்.

எனவாங்கு,

மும்முறை நினைந்து முறைமையின் வணங்க
அம்மென் சிலம்புநின் றரற்றுஞ் சீறடி
செம்மல ரென்னத் திகழ வம்மலர்ப்
பாசடை கடுக்கும் பட்டி னியன்ற
தூசு செறியிடை துவள மாசில்
வாண்மதி முகத்திற் புன்னகை தவழ
மகர மீன்மிசை யிவர்ந்து
காரிடைத் தோன்றிய மின்னுக் கொடிபோல்
நீரிடைத் தோன்றி மறைந்தனள். பாரிடைத்
தெண்டனிட் டவளடி வணங்கி, யண்டர்
நாட்டிடை வைகும் நண்பன் கையில்
ஈங்கிது சேர்கவென் றிரும்புனல் நீரில்
ஓலையை யிடலும் ஏந்திய வானதி
வேலையை நோக்கி விரைந்து சென்றதுவே.

## 6. தில்லிமாநகர்த் திருமரு மார்பன் திருக்கோயிற் காட்சி

திரு நிறை இராம கிருட்டிண தேவரது திருநாள் விழாவிற் கலந்து கொள்ளும் பொருட்டுப் பாரத நாட்டுக் கணியெனத் திகழும் தில்லிமா நகர்க்கு வருதல் வேண்டுமென, அந் நகர்த் தவப்பள்ளித் தலைவராகிய கைலாசாநந்தர் பணித்தருளினர். அவர் மொழியை மறுத்தற் கஞ்சிப் பொன்மா லிமயப் பொருப் பகத்துத் தவப்பள்ளியினின்றும் புறம் போந்து, பல காவதங் கடந்து, நேபாளத் தெல்லை யிற் கிடந்த காளி நதிக்கரையை யடைந்து, அந் நதிக் கரையிலே, ஆவண வீதிகள் பலவொடும் பொலிந்த தனகபுரத்தை யெய்தினேன்.

அந் நகரினீங்கி, இருப்புப்பாதை வழியாகப் பிலிபித்து, பரைலி, அலிகார் என்னும் நன்னகர் களைத் தாண்டித் தில்லிமாநகரை யடைந்தேன். தலை மை பெற்ற அந்நகர் பழைய தில்லி, புதிய தில்லி யென இருபெரும் பிரிவிற்று. திரு இராமகிருட்டிண தேவரது திருக் கோட்டமும் தவப்பள்ளியும் புதிய தில்லியிற் பொருந்தியிருப்பன. அவற்றுக் கணிமையாகப் பீர்லா வென்னும் பெருங்குடி வாணி கர் இயற்றுவித்த திருவமர் மார்பன் திருக்கோயில் உளது. எக்குடிப் பிறந்தோரும் எய்தி வழிபடுதற் குரிய இத் திரு நியமத்தினை உலகு புகழ்ந்தேத்துங் காந்தியடிகள் திறந்து வைத்தார்கள். நறுமலர் சொரிந்து அடிபணிந் தேத்தும் வானவர் மரபு வழி பாடே யன்றி, முழுக்காட்டி அமுதூட்டு முறையா

னியன்ற மக்கள் வழிபாடு இத் திருக்கோயிற் கிலதா கும். இத் திருக்கோயிலி னமைப்பும், இதன் கண்ண மைந்த ஓவியங்களின் வனப்பும் பழந் தமிழ்நாட்டினை ஒருவாறு நினைவுறுத்துகின்றன வாதலின், இவை தம்மைத் தமிழ்ச் செய்யுளாற் கூறப் புகுந்தேன். அறிஞர் பிழை பொறுத் தருள்க.

தண்ணிலவின் கதிர்க்கற்றை தனைத்திரட்டி உருவாக்கி
உண்ணிலவும் அமிழ்தத்தை உகுத்ததென மணிவண்ணன்
கண்ணிலவு துயில்புரியும் கருதரிய திருமனையாம்
பண்ணிலவு பாற்கடலே பாரின்மிசைப் படர்ந்ததென

வெண்மையும், பொலிவும், விழைதகு வனப்பும்
ஒண்மையும் மரீஇ, உரவோர் மனமெனக்
களங்கமற் றோங்கி விளங்குமிந் நியமம்
பொன்னின் ஆழி பொருந்திய குடுமி
வெள்ளிக் குன்றென வெண்ணிறச் சலவைக்
கல்லிற் சமைந்த கவினுடைத் தம்ம!
சீரியல் நாரணன் திருவொடும் பொலிந்த
பேரியற் கோயிலிஃது, ஈரியன் மருங்கும்
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலும்
கலைமதி புனைந்த கண்ணுதல் கோயிலும்
மூவிலைச் சூலம் மேவிய குடுமிக்
குன்றிரண் டிருபால் நின்ற தோற்றத்த.

திருவாயில் இருமருங்குஞ் செழுங்கரத்திற் றண்டேந்தி
ஒருவாத படிமங்கள் ஓரிரண்டு நின்றவிவை,
ஓரிரண்டும் எழின்முகத்தில் உவகையொடு நகையரும்பி,
வாருமிவண் வாருமென வலிந்தழைக்கும் மாண்பினவே.

மேருகிட்ட சலவைக்கல் வீதியினை வலம் வந்தே
உருகிட்ட மெழுகென்ன உளந்ததும்ப உட்புகுந்தேன்.
உளந்ததும்பப் புகுந்தாங்கே உலகுபுரந் திடுமொருவன்
வளந்ததும்புந் திருவோடு மன்னியதோற் றங்கண்டேன்.

ஆரணங்கு அணிந்தது, அரத்தப் பூந்துகில்.
நாரணன் உடுஇயது, பீதக ஆடை.
இருவர் மார்பினும் இலங்கிய தாமம்,
பன்னிற நன்மலர் பயின்று விளங்குவ.
இருவர் சிரத்தினும் அருமணி மகுடம்.
செம்மலர்ப் பதத்திற் சிலம்புங் கழலும்.
அம்மலர் நோக்கி அகங்குளிர்ந் தப்பால்,

வேங்கைவரிப் புறத்தியைந்து விறல்வாளும் படைக்கலமும்
தாங்கியநல் எழிலுருவைத் தாயுருவம் எனக்கண்டேன்.
தாயுருவாய் உலகளிக்கும் தயவுணர்ந்து மனமாசு
தேயஅவள் சீறடியைச் சிந்தையினில் இருத்தியப்பால்

கல்லாலின் புடையமர்ந்து, கருத்தோன்றி போகுசெய
வல்லான்நல் அருளாளன் மதிமிலைந்த முடிச்சென்னி
மதிமிலைந்த முடியானை மனநெகிழ்ந்து வழுத்தியபின்
விதிபுனைந்த மணிவாயில் விளங்கியவீர் உருக்கண்டேன்.

ஆரழல் மாமகம் அழிதர அடர்த்த
வீரனும் விண்ணவர் வெந்துயர் அகலச்
சூருரங் கிழித்த சுடரிலை நெடுவேல்
ஏரகத் தவனும் இருபால் இலங்கினர்.
கண்ணுதல் வாயிற் காவலர் இவர்க்கண்டு
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலில்

நடம்பயில் வைரவர் யோகினி எனுமிவர்
இடம்பெயர்ந் துறையும் இயல்பும் கண்டேன்.
நாரணன் கோயில் ஏர்புனை வாயிலில்,
நாரதமுனியும் பாரதிப் பெயர்கொள்
சொல்லின் மடந்தையும் நல்லியல் வீணை
ஏந்திய கரத்தினர், இலங்கக் கண்டேன்.
*அப்பால்,*
இருபெருஞ் சதுக்கம் இயைந்தன; அவற்றுள்
வேத வியாதனும், இடப தேவனும்,
சாங்கியக் கபிலனும், தன்வந் திரியும்,
மன்னிய சதுக்கம் வலப்பா லதுவே.

வையந்தான் உய்யும்வகை மாமறையை வகுத்துரைத்த
ஐயன்றன் திருக்கரத்தில் அருஞ்சுவடி பொலிந்ததுவே.

அருஞ்சுவடிப் பொருள்தேரின், ஆரணநூல் முடிந்தவிடம்[வே.
பொருந்துபொருள் ஒன்றென்னப் புலங்கொள்ள உரைப்பது

சீரிடப தேவனெனும் சினனுரைத்த வாசகந்தான்
ஓரிணைந்து பெருநோன்பின் உண்மையினை உரைப்பதுவே.

உண்மைநிலை கொலைகளவின் ஒழிந்தநிலை கொடுங்காமம்
எண்ணுபொருள் நசைநீக்கல் இவைசீலம் இயமமெனல்

அறுநான்கு தத்துவமும் ஆய்ந்துரைக்கும் கபிலமுனி.
மறுநீங்க உடலோம்பும் மரபினிற்றன் வந்திரியே.

மரபினில்ஐ யைந்தாண்டின் மணமகன்றன் எண்ணிரண்டே
விரவியவள் பாலின்பம் விழையுமெனும் உரைகூறும்.

இடப்பாற் சதுக்கத்து, மழுப்படை ராமனும்,
சீதை கேள்வனும் யாதவர் இறையும்
அருளறம் பகர்ந்த பெருவிறற் புத்தனும்
தத்தம் உயர்மொழி தந்துநின் றனரே.

ஆங்கு,

நெடுநிலை மாடத் தரமியம் ஏறிச்
சுவரில் எழுதிய சித்திரம் நோக்க
மாமனு வேந்தனும் ரகுவும் போசனும்
தாமவிக் கிரமனுந் தங்கினர் ஒருபால்.
மாபா ரதத்தும் இராமன் கதையுளும்
மேவிய தோன்மை விரிந்தன ஒருபால்.

திருத்தகு ராம கிருட்டிண தேவனும்,
சங்கரா சிரியனும் சார்ந்தனர் ஒருபால்.
சந்திர குப்தனும் அசோக மன்னனும்
சுந்தர உருவிற் றேன்றினர் ஒருபால்.
இங்கிப் பரிசின் இயைந்த ஓவிய
நலங்கண் டுவக்கும் நகர மாந்தர்
மாட்சியும் ஒருபெருங் காட்சி யதாகும்.


முளையெயிற்றுச் செய்யவாய் முதிராத பசுங்குதலை
இளமகார் தமையேந்தும் இளநல்லார் குழுவொருபால்,

தண்டூன்றி நடுக்குறூஉம் தளர்நடையும் நரைமுடியும்
கொண்டேன்ற முதுமகளிற் குழுவொருபாற் சூலவுமே.

மாதவரும் வேதியரும் மன்மரபில் உதித்தவரும்
ஓதுபிற குலத்தவரும் ஒருங்குமகிழ்ந் துலவுவரே.

அலர்கதிர் ஆழியும் அந்தண் மதியம்
நிகர்திருச் சங்கமும் நீள்கரத் தேந்தி
மலர்மகள் ஒருபால் மருவ மன்னிய
தாமரைக் கண்ணன் திருவடி
மேவிய தில்லி வியனகர் பேரிதே

திருக் கோயிற் படம்



## படவிளக்கக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| க. | ஜகத்தாத்ரி (உலகுதாங்கிய ஒருத்தி) | கச. | சிவபிரான் |
| உ. | நிருத்த பைரவர் | கரு. | வீரபத்திரர் |
| ௩. | யோகினி | கசு. | கார்த்திகேயர் |
| ச. | வேத வியாசர் | கஎ. | சரஸ்வதி |
| ரு. | ரிஷப தேவர் | கஅ. | நாரத முனி |
| சு. | கபில முனி | ககூ. | மனுவேந்தன் |
| எ. | தன்வந்திரி | உ0. | இரகு வேந்தன் |
| அ. | நாராயணன் | உக. | போஜராஜன் |
| கூ. | இலக்ஷ்மி | உஉ. | விக்கிரமாதித்தன் |
| க0. | பரசுராமன் | உ௩. | ஸ்ரீ ராமகிருஷ்ணர் |
| கக. | ஸ்ரீ ராமச்சந்திரன் | உச. | ஸ்ரீ சங்கராச்சாரியார் |
| கஉ. | ஸ்ரீ கிருஷ்ணன் | உரு. | மாருதி |
| க௩. | புத்த தேவர் | உசு, உஎ | துவார பாலகர் |

# 7. இமயத்தைச் சேர்ந்த காக்கை

"இமயத்தைச் சேர்ந்த காக்கை" என்று நான் மூன்று வார்த்தையிலே சொல்லிவிட்டேன். யாப்பருங்கலக் காரிகை நூலாசிரியர், அழகிய சொற்களை முன்னும் பின்னும் அடுக்கிப் 'பனி மாலிமயப் பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக் கருங் காக்கை' என்கிறார். கருங்காக்கை சரிதான்; 'பொல்லா' என்று ஏன் அடை கொடுக்க வேண்டும்? நூலாசிரியர் சிறுவராகவிருந்த காலத்திலே காக்கை வந்து அவர் கையிலிருந்த அப்பத்தைப் பறித்துக் கொண்டு போயிருக்கலாமோ? ஒரு வேளை இருக்கலாம். நான் சிறுவனயிருந்த பொழுது கூட, ஒரு நாள் ஒரு காக்கை, என் கையிலிருந்த அப்பத்தைப் பறித்துக் கொண்டு போய்விட்டது. அப்படிக் காக்கை செய்தது திருட்டுச் செயல் அல்ல. நட்புச் செயல் என்று எனக்குப் புலப்பட்டது. மற்றொரு நாள், பக்கத்து வீட்டுச் சிறுவன் என் கையிலிருந்த அப்பத்தைப் பறித்துக் கொண்டு ஓடினன்; பின்னே தொடர்ந்து சென்று, நான் பிடிக்கப் போகும் தருணத்திலே, அப்பத்தைப் புழுதியிலெறிந்து விட்டு, அவன் நகைத்தான். அவன் எனது நண்பன்; காக்கையும் அப்படியே.

சிறு குழந்தை, 'குறு குறு நடந்து, சிறு கை நீட்டிக்' காக்கையைப் பிடிக்கப் போகிறது. குழந்தையின் கை தனது முதுகிற் படும்வரையும் அசையாமலிருந்த காக்கை, மெல்லென எழுந்து, ஒரு பாகம் தள்ளி உட்காருகிறது. குழந்தை மீட்டுந்

தொடர்ந்து தொடப் போகுஞ் சமயத்திலே, இன்னு மொரு பாகந் தள்ளி உட்காருகிறது. குழந்தையும் காக்கையும் நண்பர்கள்; 'காக்கா! கண்ணுக்கு மை கொண்டுவா!' என்று குழந்தை பாடுகிறது.

இலகுவாக எழுந்து, பறந்து, மெல்லென அமரு வதனுலே, பஞ்ச தந்திர நூலாசிரியர், முன்னெரு காக்கைக்கு, 'லகுபதனன்' என்று பேரிட்டு வழங்கி ஞரோ? வேறேதாவது காரணம் இருக்குமோ? தெரியவில்லை. பஞ்ச தந்திரத்திலே நரித் தந்திரம் மிகப் பெரிய தந்திரம்; காக்கைத் தந்திரத்தை அதற்கு அடுத்தபடியாக வைக்கலாம்.

மூடர்கள் தந்திரியைப் பொல்லாதவ னென்று சொல்லுவது வழக்கம். ஆனல், அமிர்தசாகரர் மூட ரல்லவே; 'தந்திரக் காக்கை' யென்று சொல்லி யிருக்கலாம்; 'பொல்லாக் காக்கை' என்னும் பழிச் சொல் முறை யாகுமா? இக்காலத்திலுள்ள அமெ ரிக்க, ஐரோப்பியருள்ளே, அறிவு குறைந்த மக்களைக் கரு நிற மனிதர் அல்லது இழிந்தவர்கள் என்று நினைப்பது உண்டு. வெள்ளையருக்கு ஒரு சட்டம், கரியருக்கு ஒரு சட்டம் வகுப்பது, நாகரிகம் மலிந்த இக் காலத்திலேதான்; நீதிமானுன காரிகை நூலாசி ரியர், இரு வேறு சட்டம் வகுத்துக் கூறுவாரா? அப் படி யிருக்கமாட்டாது.

இந்த நிலையிலே, நூலாசிரியரது நீதியை அறி வதற்குப் பாட்டு முழுவதையும் ஆராய்ந்து பார்ப்பது முறையாகுமல்லவா? என்ன சொல்கிருர், பார்ப் போம்.

TAMILNADU ARCHIVES

"சுருக்கமில் கேள்வித் துகள்தீர்
புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொருள் தானும் விழுப்பொரு
ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபோல் லாக்கருங்
காக்கையும் பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன்
றேயிவ் விருநிலமே"

என்று, அவையிலிருந்த புலவர்களை முன்னிலைப் படுத்தி, ஆசிரியர் அவையடக்கங் கூறுகிறார்.

புலவர் கூட்டத்தைப் 'பொன்மா லிமயப் பொருப்பு' என்கிறார். மிகப் பொருத்தமான உருவகம்.

"அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வன்மையு மலைக்கே"

என்று ஆசிரியர் பவணந்தியாரும்,

'நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது' என்று ஆசிரியர் திருவள்ளுவனாரும் கூறுகின்றார்கள்.

என் கண் முன்னே தோன்றுகிற 'நீலநிற விசும்பணவும் நெடுங்குடுமி மலைத் தொடர்கள்' நெடுமால் போலவும், புலவர் போலவும் காட்சி தருகின்றன. அஃதன்றியும், இம்மலை, கங்கைப் பேரியாறு தோன்று மிடமல்லவா? ஆதலினாலே, கவிப் பெருக்கினுக்கு ஊற்றிட மாகிய புலவர்கள் இமயத்திற்கு

ஒப்பாதல் பொருத்தமாவதல்லவா? அப்புலவர் முன்னிலையிலே அடங்கி நின்று, தமது நீர்மையினைப் பணிவினொடும் கூறுகின்ற ஆசிரியர், தம்மைப் 'பொல்லாக் கருங் காக்கை' என்கின்றார். ஆசிரியர், என்னைப்போலக் கரிய திருமேனியராக விருந்தாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. எனது தாயார் நல்ல பொன்னிறமாக இருந்தார்கள். அவர்கள்தாம் என்னைப் பெற்றார்களோ, பிறரிடம் வாங்கி வளர்த்தார்களோ என்று இளமையிலே நான் நினைப்பதுண்டு. தந்தையாரது நிறம் எனது நிறம். 'ஆசிரியர் அமிர்த சாகரர் காக்கை பாடினியாரது வழிவந்தவ' ரென்பது ஓர் பழங் கொள்கை. அது பற்றி, அவர் காக்கை வண்ணத்தராக இருந்தாரெனத் திட்டமாகச் சொல்லலாமா? அதுவும் பொருந்தாது.

இவை ஒரு பாலாக, காக்கைக் குலத்துக்கே ஒரு பெரும் பழிச் சொல் ஏற்பட்டிருக்கிறது. இந்திர குமாரன், காக்கை வடிவாக வந்து, சீதாபிராட்டியாரது திருமேனியைத் தீண்ட முயன்றானம். இராமபிரான், 'வல்லவன் கையிற் புல்லும் ஆயுதம்' என்றபடி, ஓர் அறுகம் புல்லினைக் கிள்ளி, அவ் வஞ்சகக் காக்கைமீது எறிந்தாராம். இராமபாணம் தப்புவதே கிடையாது. காக்கை, மேலேழுலகம் கீழேழுலகம் எங்கும் பறந்து, பல தேவர்களிடமும் முறையிட்டதாம். ஒன்றும் முடியாமல், கடைசியிலே இராகவனையே அது சரண் புகுந்ததாம். அடைக்கலம் புகுந்தோரைக் காப்பாற்றும் அவ் வண்ணல், அவ் வஞ்சகக் காக்கையினது ஒரு கண்ணைக் கொண்டு

போம்படி இராம பாணத்துக்குக் கட்டளையிட்டாராம். அன்று முதலாகக் காக்கைக்குலம் அனைத்துக்குமே இரு கண்ணுள் ஒரு மணி யாயிற்றாம். சயந்தன் செய்த பிழைக்குக் காக்கைக்குலம் ஈடு. இது என்ன நீதி? நமது முதற் றாய்தந்தையரை வஞ்சித்த சாத்தான் ஏதேன் தோட்டத்திலே பாம்பு வடிவமாகப் புகுந்தானாம். சாத்தானுடைய பிழைக்காக, யெகோவா பாம்புக்குலம் முழுவதும் மண்ணிலே நகர்ந்து செல்லவேண்டு மென்று சாப மிட்டாராம். பாம்புக்குலம் மண்ணில் நகரும்நீதியும், காக்கைக்குலத்திற்கு ஒரு கண்மணி போன நீதியும் ஒரே நீதிதான்.

மேலும், அகத்திய முனிவரது கமண்டலத்திலிருந்த காவிரி நீரைச் சிவகுமாரன், காக்கையாகச் சென்று கவிழ்த்துவிட்டானாம். 'வான் காவேரி' சோழ நாட்டிற்கு வளந்தருங் காவிரி. அத்தகைய காவிரி பெருகுவதற்குக் காக்கை காரணமாக விருந்தென்றால், அது காக்கைக் குலத்துக்கே பெரும் பேராகுமல்லவா? 'கங்கை கொண்ட சோழன்' என்பதுபோலக் 'காவிரி தந்த காக்கையார் குலம்' என்று காக்கைகளுக்கு ஒரு விருது எழுதிவிடலாம்.

அது நிற்க, புலவர் தம்மைக் காக்கை யென்று சொல்லுவதற்கு வேறு காரணங்களும் உண்டா? ஆம் உண்டு. இக் காலத்துப் பெரும் புலவரொருவரும்,

> **'காக்கை குருவி யெங்கள் சாதி—நீள்**
> **கடலு மலையு மெங்கள் கூட்டம்**
> **நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை**
> **நோக்க நோக்கக் களி யாட்டம்'**

என்று வெற்றிமுரசு கொட்டுகிறார்.

ஓநாய்க் குலத்திலும் பார்க்கக் கொடியது மனிதக் குலம். ஒரு குலத்தினுள்ளே, ஒன்றினை யொன்று கொல்ல முயல்வதும், ஒன்று வாழ்வதைக் கண்டு மற்றையது மனம் எரிவதும், இந்த மனிதக் குலத்து உயிர்களுக்கும், மனிதக் குலத்தோடு பழகிய நாய்க் குலத்து உயிர்களுக்குமேயன்றி, மற்றெந்தக் குலத்து உயிர்களுக்கும் கிடையாது. 'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்' என்ற பெரியோர் வாக்கின்படி, உறவினரோடு கலந்துண்ணுவது காக்கைக்கு இயல்பு. புசுண்டர் என்னும் ஒரு முனிவரும் காக்கைக் குலத்தவரென்று பெரியோர் சொல்லக் கேள்வி.

கதையை நீட்டித்துவிட்டோம். காரிகை நூலாசிரியர், தம்மையே காக்கை யென்று கூறியதும், 'பொல்லாக் காக்கை' என்று அடையடுத்துக் கூறியதும் பொருத்த மென்று வைத்துக் கொள்ளலாம். 'இமயஞ் சேர்ந்த காக்கை பொன்னிறமாகு' மென்று சொன்னரே; இந்த உண்மையை இமயத்தில் ஆராய்ந் தறிந்துகொள்ள வேண்டுமென, இமயத்திற்கு வருமுன் என்னுள்ளத்திலே ஓர் ஆசை பிறந்தது. வந்து ஓராண்டாகிறதே, நான் கண்டறிந்தவற்றைச் சொல்லும் உரிமையுண்டு.

நான் இவ்விடம் வந்து சேர்ந்தது கார் காலமும் கூதிர்க் காலமும் ஒருங்கியைந்த இலையுதிர் காலத்தில். அக்காலத்திலே, ஆச்சிரமத்துப் பாதையின் இரு மருங்கிலும் ஓங்கி வளர்ந்து நிற்கும் தேவதாரு மரங்கள் நிரம்பப் பூத்திருந்தன. பூக்களிலிருந்து சிந்திய மகரந்தப் பொடியானது, பாதையினையும், பாதையோரத்தி லிருந்த கற் பாவிய குடிசையினையும்

பொன்னிறமாக்கிவிட்டது. சில பூக்களைப் பறித்துப் புறங் கையிலே பூசினேன்; கருமை பொன்மையாயிற்று. இக் காரணத்தினாலேதான் இம் மலைக்குப் பொன்மலை யென்று பெயர் எய்தியதாக விருக்கலாம் என்று நினைத்தேன்.

'தேவதரு மலர்விரிந்து சிந்தியபூந் துகள் செறிந்து
மேவியபோன் வண்ணத்த வீதியெலாம்.......' என்று

எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். வந்து இரண்டு திங்களுக் குள்ளே கூதிர்க் காலம் வந்தடுத்தது. தண்ணீ ருறைகின்ற கடுங் குளிர்; நாங்களெல்லோரும் விறகுகளை யடுக்கி, நெருப்பினை வளர்த்துக், கைகால்களைக் காய்ச்சிக் கொள்வோம். கம்பிளிக் கால்மேசு, கம்பிளிக் கைமேசு, கம்பிளிச் சட்டை, போர்வை இவையெல்லாம் அணிந்திருக்கும் போது கூடப் பல்லுக் கொடுக்கும். இப்படி யிருக்க, ஒரு நாள் வானம் இருண்டு ஆலங்கட்டி பெய்தது. மிளகுப் பரிமாணம் முதல் கொட்டைப் பாக்குப் பரிமாணம் வரையுமுள்ள பனிக்கட்டிகள் பேரிரைச்சலோடு பொழியும் போது, வானத்திலிருந்து விழும் செருமானியர் குண்டுக்கு அஞ்சி, ஒதுக்கிடந் தேடுகின்ற இலண்டன் மாநகர மக்களைப் போல, நாங்களும் வீட்டினுள்ளே நுழைந்து கொண்டோம். சிறிது நேரத்திலே, ஆலங்கட்டி மழையும் இரைச்சலும் நின்றுவிட், ஓர் அமைதி யேற்பட்டது. ஞாயிற்றினது மெல்லென்ற கதிர்கள் வீசின; பறவைகள் ஒதுக்கிடங்களிலிருந்து புறப்பட்டன. நாங்களும் வெளியே வந்தோம்; காலை ஒன்பது மணியிருக்கும்; காற்றுச் சிறிதேனுமில்லை. நந்தியாவர்த்த மலர்களை

யும், முல்லை முகைகளையும், மல்லிகை மெல்லரும்பு களையும், நறுக்கிய வெள்ளிச் சரிகையையும், பாலின் நுரையையும், அன்னத்தின் தூவியையும் வானவர் வாரி வாரி யிறைப்பது போல இம்மழை வீழ்ந்தது. செங்கதிர்ப் பரிதி, தண் கதிர் மதியம்போல விளங்கியது. நிலவுக் கதிர் விழுவது போல, மரங்களின் இலைகள் மீது பனி பொழிந்தது. நிலத்திலே நான்கு அங்குலக் கனத்திற்குப் பனி மூடியது. பாற்கடல் போலப் பார்த்த விடமெங்கும் தூய வெள்ளை நிறம்; மலைகளெல்லாம் வெள்ளிக் குன்றங்களாக மாறிவிட்டன. மணற் சீனிபோல நிலத்தின்மேற் கிடந்த பனியின் மேல் நாங்கள் வெறுங் காலோடு நடக்க, அதுவும் மணல்போலச் சொரு சொரு வென்று விட்டுக் கொடுத்தது. குளிரைத் தடுக்கும் பொருட்டுச் சப்பாத்து அணிந்து கொண்டு சிறு குழந்தைகளைப் போலப் பனியைக் கையி லெடுத்துத் திரட்டி, வீசி, ஆர்ப்பரித்து விளையாடினேம். இரண்டு நாள் கழித்து மீட்டும் இம் மழை. கூரையிலிருந்து வடிகின்ற பனி, பளிங்குப் பிளவுபோல அழகுகாலும். மொத்தம் முப்பது அங்குலத்துக்கு மேல் பனி மழை பெய்யக் கண்டேன். தேவதாரு மலர்களைக் குறித்து எடுத்த பாட்டு நிறைவெய்தியது.

“தேவதரு மலர்விரிந்து சிந்தியபூந் துகள்சேறிந்து
மேவியபோன் வண்ணத்த வீதியெலாம் அன்னத்தின்
தூவியெனப் பானுரையின் தோற்றமென இமம்வீழத்
தாவில்புகழ் வெள்ளிவெற்பின் தவளநிறம் பெறுவனவே.”

இப்படித் தோற்றிய வெள்ளி மலைகளைச் சூரிய தேவன், தனது இரசவாத வித்தையினலே, பொன்

ணுக்கும் விந்தையினைக் காண, அதிகாலையிலே விழித் தெழ வேண்டும். நான் வசிக்கும் அறையிலிருந்து பார்க்க நேரே தெரிவது திருக்கேதார மலை.

"தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமேன்பரால்
வண்டுபாட மயிலாட மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே"

என்று திருஞான சம்பந்த சுவாமிகள் பாடிய திருக் கேதாரம்; தினமும் விழி துயின் றெழுந்த வுடனே வடக்கு நோக்கித் தரிசிப்பது அத் திருமலையைத் தான். அதற் கணித்தாகத் திரிசூலி; அதற்கப்பால் நந்தாதேவி—இது இந்தியாவிலே உயர்ந்த கொடு முடி; இருபத்தாறுயிரம் அடிக்கு மேலானது. (எவ ரெஸ்டு, திபெத்து நாட்டிற்குரியது.)

ஞாயிறு தோற்றுதற்கு முன்னே, இருளிலே காரிரும்பு போலத் தோற்றிய மலைச் சிகரங்கள், இளங்கதிர் பட்ட வுடனேயே பொன்னுகின்ற காட்சி விந்தையா யிருக்கும். கால்மணி நேரத்துக்குள்ளே, பொன்னெல்லாம் வெள்ளியாய்ப் போய்விடும். மீட் டும் மாலையிலே செல்கதிர்க் கிரணம் செறியக் கால் மணி நேரத்திற்கு இமயம் பொற்கோட் டிமயமாகும்.

"நீலநிற விசும்பணவு நெடுங்குடுமி மலைத்தொடர்கள்
மேல்விழுந்த இமமழையால் வெள்ளியெனத் திகழ்வனவால்
காலையினு மாலையினுங் கதிரவனுர் வேதிக்க
மாலவனு ராடையென வயங்குவபோன் னிறம்படர்ந்தே"

செல்கதிர் பொன்னிறமானது; அது மரப் பாவையின்மேற் படின் மரப்பாவை பொற்பாவை

போலத் தோற்றும்; பொன்னின் பாவையிற் பட்டால் எப்படி யிருக்கும், அப்படி யிருந்தார்களாம், தமிழ் மதுரையிலிருந்த பெண்கள் என மாங்குடி மருதனர், மதுரைக் காஞ்சியிலே, கூறுகிறார்;

" செந்நீர்ப் பசும்போன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன செய்யர் "
(மதுரைக் காஞ்சி, 410-413.)

கருங்கல் மலை வெள்ளிமலையாவதும், பொன் மலை யாவதும் எப்படியென அறிந்து கொண்டோம். காக்கைக்கு என்ன நிகழ்ந்ததென வாசகர்கள் வினவலாம்.

கோழி கூவிக் காகங் கரைந்தாற்றான், பொழுது விடியும் என்று தெற்கேயுள்ள பலர் நினைப்பது போலவே, நானும் நினைத்திருந்தேன். இது சிவபூமி, சூரியதேவன் ஒரு பணிவிடைக்காரன்; ஆதலினலே, ஒரு வகை ஆரவாரமு மில்லாமல், உரிய காலத்திலே, பளிச்சென்று வந்து, கைகட்டி, வாய் புதைத்துக் கொண்டு நிற்பான். அவனது வருகையைக் குறித்துக் கோழியும், காகமும் கட்டியங் கூறுவதில்லை.

கூதிர்க் காலங் கழிந்தது. இளவேனிற் காலம் வந்தது. செடிகொடிகள் தளிரீன்று, முகையரும்பிப் பூவலர்ந்தன. உச்சிப் பொழுதிலே, ஒருநாள் எங்கேயோ விருந்து, ஒரு காக்கை வந்தது. மெலிந்த தோற்றம். நமது காக்கைகளைப்போல, உள்ளக் கிளர்ச்சியுடன் கரையாமல், 'இங்குவா' 'இங்குவா'. 'இங்குவா' என்று நலிந்த குரலிலே கரைந்தது,

பொன்றுமோ என்று பார்த்தேன்; இல்லை. உருக்கி னற் செய்த அரத்தினது தோற்றமாக விருந்தது. ஏது, புலவர் சொல் பொய்த்துவிட்டதோ என்று எண்ணினேன். புலவர் சொல் பொய்க்கவில்லை. காலை யெழுந்திருத்தலும், மாலை குளித்து மனைபுகுத லும் மேலான காக்கைகட் குரிய குணம். இந்த மூடக் காக்கை, காலை யிளங்கதிரிலோ, மாலைச் செல் கதிரிலோ தனது குலவொழுக்கம் குன்றாது வந்தி ருக்குமாயின், செங்கதிர்ச் செல்வன் இரசவாதஞ் செய்து, இதனை ஒரு நாழிகைப் பொழுது பொற் காக்கையாக்கியிருப்பான். உச்சிக் காலத்திலே, இது வந்ததுதான் தவறு என்று நினைத்தேன். காக்கை யும் பறந்துபோய்விட்டது; திருத்தக்க தேவரது பாட் டொன்று நினைவிற்கு வந்தது.

“ விழுக்கோடு வெண்ணஞ் சல்லா உகிர்மயிர்
 உமிழ்கட் பீளைப்
புழுப்பயில் குரம்பை போல்லாத் தடிதடிக்
 கீந்த போழ்தில்
விழித்தியார் நோக்குநிற்பார் பிள்ளையார்
 கண்ணுட் காக்கை
கோழிப்பரும் போன்னிற் றேன்றவங் கோள்கைத்தாற்
 கோடியே யேன்றான். ”

பிள்ளை, கரிக்குருவி; ‘கரிக்குருவியார் கண்ணுக் குக் காக்கையார் பொன்னொத்துத் தோன்றினர்’ என்னும் பழமொழி இப்பாட்டினுட் பொதியப்பட் டிருக்கிறது. அங்ஙனம் உருச்சிறந்து தோற்றுவ தற்குக் காரணம், விளைகின்ற காமம். அன்புநோக்கு இரும்பையும் பொன்னாக்கிவிடும் என்பது ஒருதலை.

அதுபோலப், புலவர்களது அன்பு நோக்கு உளப்படுமாயின், என் புன்மொழியும் பொன்மொழியாம் என்னும் கருத்து, அமிர்த சாகரரது பாட்டினுள்ளே தொனிக்கின்றது. இமயம் தேவரும் முனிவரும் வாழுமிடம். சார்ந்ததன் வண்ணமாவது உயிர்க்கு இயல்பு. இங்கு வாழ்தலினலே, உள்ளத்திலே படிந்துகிடந்த அறுவகைக் குற்றத்தின் கருமை நீங்க, உள்ளமானது தெளி வெய்துகின்றது. காலையிலும் மாலையிலும் திருவருளானது பேரருளினலே, தியான வேளையிலே, உள்ளம் அவனது பொன் வண்ணத்திற் படிந்து நிற்கிறது. இதனை அனுபவத்திற்கண்டு, இமயத்தைச் சார்ந்த காரணத்தினலே, உள்ளமாகிய கருங்காக்கையும் பொன்னயிற்று எனத் துணிவெய்தினேன்.

## 8. ஆறுமுக நாவலனர்

### தமிழ் மொழி வாழ்த்து

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது
தன்னே ரிலாத தமிழ்"

"பைங்க ணிளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோல்
திங்கள் நெடுங்குடையின் கீழானை—அங்கிரந்து
நாம் வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம் வேண்டுங் கூடற் றமிழ்"

"சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்"

எனுஅ, நாவலந் தீவின் ஆர்வல ரேத்திய
தண்டமிழ்ப் பாவையை அண்டரும் விழையும்
அமிழ்தரு தீஞ்சொல் அணங்கினை இமிழ்திரை
ஆர்கலி சூழ்ந்த மாயிரு ஞாலத்து
மனவிரு ளிரிய வாழ்த்துதும் பணிந்தே.

## நூல்

தொல்லியல் வழுவாச் சைவநூற் புலவர்
        தூநெறித் தமிழுரை யாளர்
நல்லியற் புலவர் இசைதரும் புலவர்
        நாடக நவிற்றிய புலவர்
சொல்லியற் றுரைகைநூல் வானநூல் தருக்கம்
        தோமறு கணிதநூல் முதலாம்
பல்கலைப் புலவர்க் குறைவிட மாகிப்
        பரந்திசை யெய்தும்யாழ்ப் பாணம்.

ஆரியர் ஆழி வேந்தரேன் றவனி
        புகழ்ந்துரை அளிக்கநல் லூரிற்
சீரிய செங்கோல் செலுத்திய வேந்தர்
        சென்றபின் சைவநிந் தனைசெய்
பூரியர் ஆட்சி புக்கது கண்டு
        பொருதபுண் ணியத்திசை கடந்த
நேரியல் ஞான விளக்கெனு முனிவன்
        நிறைபுகழ் மரபுமேம் படவே

தில்லைவாழ் கூத்தன் திருவரு ளுருவாம்
சீர்ச்சிவ காமசுந் தரியார்
எல்லையில் கருணைக் கோள்கல மாய
எழிற்சிவ காமியார் வயிற்றில்
நல்லைவாழ் கந்தன் அருளினுல் நல்லைக்
கந்தர்தம் தவப்பய ஞக
வில்லைநேர் நுதலார் கண்வலைப் படாத
மெய்த்தவன் மகவென உதித்தான்.

குலந்தரு செல்வன் அறுமுகப் பெயரும்
கோதில்சீர் ஒழுக்கமும் மருவி
நலந்தரு கல்வி கேள்வியால் நிறைந்து
நற்றமிழ் வடமொழி குடபால்
நிலந்தரு மன்னர் மொழியிவை யுணர்ந்து
நீடுசீர் முருகனே யென்ன
அலந்தவர்க் குதவி நினைந்தது முடிக்கும்
ஆற்றலும் பெற்றுயர் வடைந்தான்.

தன்னியல் புணரத் தலைவனை தியல்பு
சாற்றிய சைவநூல் பலவும்
மின்னியல் சடையார் அருளினுல் அச்சில்
மேவுதல் நலமெனத் துணிந்து
பன்னல மிகுந்த சென்னைமா நகர்க்குப்
படர்தர வெண்ணிநான் மறைகள்
துன்னிநின் றேத்துந் தோல்பதி தொழுது
தோலைவில்சீர் ஆவடு துறையில்

பாவலர் போற்றும் ஞானதே சிகரைப்
பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிவர்கூட் டுண்ணக்

காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
நாவல ரெனும்பேர் தகுமென அளித்தார்
ஞாலத்தார் தகுந்தகும் என்ன.

சொல்லுதல் வல்லான் சோர்விலன் அஞ்சான்
துணிவுகொள் சிந்தையான் அவனை
வெல்லுதல் யார்க்கும் அரிதென உரைத்த
மெய்ம்மறைப் பொருட்கிலக் காகி
நல்லையி லுதித்த நாவலர் பெருமான்
நலந்திகழ் சென்னைமா நகரின்
எல்லையை நண்ணி இயற்கலை பரப்பும்
இயந்திரம் வாங்கிய பின்னர்,

கருணையே யுருவாங் கண்ணுதற் பெருமான்
கழலிணை பதிந்தவுள் ளத்தர்
அருணைமால் வரையின் சாரலிற் சின்னாள்
அமர்ந்தனர் திருமடத் ததிபர்
பொருணிறை தமிழின் புலத்துறை முற்றும்
புண்ணியர் தகவினை யெண்ணித்
தெருணிறை யுரவோய் ஈண்டுநீ வைகச்
சிந்தைசெய் திடல்நலம் என்றார்.

தம்மையீன் றெடுத்த யாழியல் நாட்டிற்
சைவமாஞ் சமயமும் புலவர்
செம்மைசே ருளத்திற் பொலிந்தமுத் தமிழும்
சீருறப் பணிபல புரிதல்
இம்மையிப் பிறவிக் கியைந்தமா தவமென்
றெண்ணியே விடைபெற்று மீண்டார்
எம்மையும் படைந்த ஈழமா நாட்டின்
இணையிலாப் பெருநிதி யனையார்.

கடிகமழ் கோன்றைத் தாரினர் அழகிற்
காதலுற் றுருகுமெய் யன்பர்
வடியிலே வேற்க ணரம்பையர் வரினும்
மதித்திடா ராதலின் விதித்த
படியினிற் றூய நெறிபுக நினைந்து
படிகலிங் கத்தினிற் றலேவன்
துடிமழுக் கரஞ்சேர் சுந்தர வடிவைத்
தொழுதிட எண்ணிய தூயோர்.

நண்ணினர் வினைகள் நலிவுற அருளும்
நாவலந் தீவினை யடைந்து
புண்ணியந் திரண்ட உருவியல் ஞான
போதகா சிரியனைத் தொழுது
மண்ணினிற் பிறந்தோர் மனமய லகல
வளரொளிப் பிழம்பென நின்ற
விண்ணவர் முதலேப் பூசனை புரியும்
விதியினை மதியினிற் றெளிந்தார்.

மன்னுமீ ழத்தை யடைந்துதொண் டாற்றி
மாமறைக் காட்டினை மேவித்
தொன்னலத் துறைசைத் தருமையம் பதியிற்
றுறைகைவிரி யுரைபல நவிற்றி
முன்னமே ழிசையாற் செழுந்தமிழ் வளர்த்த
முதல்வரைப் பயந்தசீ காழி
என்னுமா நகரில் இறைவர்தாள் தொழுதார்
இன்றமிழ் வளர்த்தநா வலனர்.

உரையுணர் விறந்த தனிமுதல் கருணை
உருவுகொண் டுலகெலாம் பயந்த
வரைமகள் உவகை விழியினுற் பருக
மாதவர் வாழ்த்தொலி யெடுப்பப்

பரையுரு வாய மாமணி மன்றுட்
  பதஞ்சலி யாதுநின் றுடும்
விரைகமழ் கொன்றைத் தாரின ராடல்
  விரும்பிவந் தமரரும் பணிவார்.

அத்திற மாய தில்லையம் பதியில்
  ஆகம அளவையாற் சமைந்த
வித்தகக் கோயிற் கோபுரங் கண்டார்
  விழிகணீர் பெருகமெய்ம் மறந்தார்
பத்தர்சீர் பரவும் நல்லைநா வலனர்
  பாரினிற் பன்முறை விழுந்தார்
அத்தரே யென்றார் அம்மையே யென்றார்
  ஆடினர் பாடினர் அன்பால்.

மாமணி மன்றுட் டிருநடங் கண்டார்
  மனநெகிழ்ந் துடையவர் பாதம்
பாமணி மாலைப் பனுவலாற் பரவிப்
  பல்பகல் பிரிந்தகா தலனர்
தாமணி மையிலே வருதல்கண் டேவகை
  தழைத்தமேல் லியலெனத் தளர்ந்தார்
பூமணிச் சிலம்பி னொலிசெவிப் படவும்
  புதுமைசேர் மருட்கையுற் றெழுந்தார்.

## அடிகளார் மறைவுபற்றி அன்பர்கள் இயற்றிய இரங்கற்பாக்கள்

### (பண்டிதர் வி. சீ. கந்தையா)

வெண்பா

ஞானத் தவக்கொழுந்து நங்கள் கலைமுதல்வன்
மோனத் தமிழ்மூன் றும் முற்றுமுனி—தானமணி
சன்மணிஎம் சாமிவிபு லானந்த நன்மணிவிண்
மன்மணியாய் விட்டான் மகிழ்ந்து.

கட்டளைக் கலித்துறை

ஈழம் பயில்தவம் சேர ஒருங்கு திரண்டெழுந்தே
நாளும் மதிபோல் கலையில் வளர்ந்தொளிர் ஞானமிக்கு
பாழும் உலகம் வெறுத்துப் பரத்தினுக் கேகினையோ,
வாழும் கலையோய் மதிவிபு லானந்த மாமணியே!

எல்லாக் கலையும் நிறைந்தாய் இயலிசை நாடகமும்
சொல்லாப் பயின்றனை சோரா திளமை சுகித்தலின்றி
வல்லா னிராமகிருஷ்ணப் பரம னடியிணைசார்ந் [யோ?
தெல்லாரு மேத்த இருந்தாய்நீ இன்றெங்கண் ஏகினை

தாழிசைகள்

சரிகமவும் பதநிசவும்
  தனித்தனியே வடித்தெடுத்து
புரிவுறநல் லிசையமுதாய்ப்
  புவிக்களித்தாய் புலவோர்கள்
பரிவுறஇங் கழுதரற்றிப்
  படுதுயரந் தனிலாழப்
பிரிவுறவு செய்தனையே
  பெருமுனிவ வருவாயோ?

சத்தியமும் அன்பதுவும்
சகத்திலுயிர்க் கிரங்குவதும்
உத்தமமென் றுருநோக்கே
யுனதுமத மாயிருந்தாய்
நித்திரையாய் இன்றிருக்கும்
நினைவெதுவோ? நிருமலனே
வித்தக! விபுலானந்த
வீரமணி! மீளாயோ?

ஏழைகளும் ஒன்றுனக்கு
இருநிதியங் கிழவர்களும்
பாவலருக் குயிரான
பார்த்திபனே! காரைநகர்
மூளுதவம் சேரவொன்றாய்
முளைத்தெழுந்த செழும்பயிரே!
வாழும்வழி என்னேயோ?
வரல்நினைந்து சென்றாயோ?

கல்வியிலும் மிகுபுலவன்
கதித்ததவ நிலைமையிலும்
சொல்லினிலும் மிகுபுலவன்
சுவாமிவிபு லானந்தன்
நல்லிசையில் நாயகன்காண்
நமக்குயிரென் றிருந்தோமை
வல்லவநீ சொல்லாது
வானுலகம் மேவினையே!

வீதிதொறும் பள்ளிகளை
விதித்தனைநீ எம்நாட்டில்
சாதிமதம் பாராது
தானிருந்து காட்டினையே!

மாதவனே! உன்போல
வாய்த்திடுமோ இப்புவிக்கே?
நீதவனே! கண்துயின்ருய்
நித்திரையில் மீளாயோ?

உன்னைப் புறம்பேண்பார்
உயிர்த்துணைவர் பலர்நின்ருர்
பொன்னைக் கருதாதே
புரவலரும் சூழவந்தார்
கன்னித் தமிழ்க்கரசே!
கவிமணியே! கார்முகிலே!
கண்ணைத் திறந்தொருகாற்
காட்டாயோ அன்பருக்கே?

மாதர்களைப் போற்றிமிக
மதிமயங்கி வாழாது
மாதவனைப் போற்றியருள்
மதிநிறைந்து வாழ்ந்தாயே!
காதகனை அந்தகனும்
கண்ணிலியை ஏமாற்றப்
போதமிலா தேகினையோ?
புவிமீதார் சரணெமக்கே?

இளமையினைத் துறந்தாய்
எழில்துறந்தாய் ஏர்துறந்தாய்
வளமனைத்தும் நீதுறந்தாய்
வாழ்ந்தாயே மன்னுயிர்க்காய்
உளமுனக்கு எங்களையும்
ஒருங்கே துறப்பதெனத்

தவமுதல்வ! சற்றேனும்
எம்மனதில் ஓர்ந்திலமே!

விண்ணூடர் நேற்றிரவு
விட்டார் மழைத்துளியென்(று)
எண்ணு மகிழ்ந்திருந்தேம்
எண்ணினமோ நீ கொழும்பில்
பொன்னூடர் நீர்தெளிக்கப்
போகுமழை தானதுவென்(று)
அண்ணுவோ! இங்கெழும்பி
யன்பர்முகம் பாராயோ?

கண்ணினுக்கும் கண்மணியே!
கவிஞருக்குச் சொன்மணியே!
மன்னருக்கு மன்மணியே!
மதிப்புலவோர் மனமணியே!
சன்மணிக்குள் சாமிவிபு
லானந்த நன்மணியே!
பொன்மணியே! எங்குசென்றாய்?
புகலாயோ ஒருவார்த்தை!

[வித்துவான் சி. கணேசையர்]

கொழும்புநகர்ப் பல்கலைதேர் கழகமதிற்
றமிழ்த்தலைமைக் குரவ னுகிச்
செழும்புலங்கொண் டிடுமாறு மாணவர்க்குக்
கற்பித்த சீர்சால் சாமி
எழும்புலனை் தடக்கும்விபு லானந்த
வடிகளென வியம்பு ஞாலந்
தொழும்புலவன் றமிழின்பந் தந்துலகிற்
கழிவிலின்பந் துய்த்தா னன்றே.

எல்லோரு மெளிதுணரச் செறிவுபெறக்
கட்டுரைக ளெழுதுந் தீர!
வல்லாரு மாட்டாரும் வியப்படைய
வவையுரைக்கும் வன்மை யாள!
சொல்லானும் பொருளானுஞ் சுவைபயப்பக்
கவிபலவுந் தொடுப்போய்! கற்ற
நல்லோரைப் போற்றுமொரு குணக்குன்றே!
நின்பிரிவா னெயார் யாரே?

சிவனொளிர்பா தத்தினெழுஞ் செழுமணியே!
சுதிவ்வளரு மிசைநூல் செய்த
தவவடிவே! உயரண்ணு மலைநகரின்
மிளிர்விளக்கே! தவத்தோர் மேவு
முவமையிலா விமயமிசை நாட்டுபுகழ்க்
கலையரசே! உனதாம் யாழ்நூல்
புவனமெலாந் தொழுமரனைக் கேட்பிக்க
வெள்ளிமலை புக்காய் கொல்லோ?

## [நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர்]

என்றுமுள செந்தமிழ்த்தா யீன்றெடுத்த
தவப்புதல்வா! எவரும் போற்றும்
குன்றனைய நற்றவத்துக் கோமானே!
தமிழ்படர்கற் பகப்பூங் கொம்பே!.
வென்றபுல னுடைவீரா! விபுலானந்
தப்பெயர்கொள் மேலோய்! விண்ணிற்
சென்றனையே யாம்வருந்த வார்செய்த
தவக்குறைவோ? தெரிகி லோமே.

பொன்னரும் மணியிலங்கைப் பூம்பாவை
கலைக்கண்ணே! போத மிக்க

மன்னுவோ! மாசற்ற துறவுநெறி
கடைப்பிடித்த வரதா! இல்லா(து)
அந்நாளில் மறைந்தவிசை யாழ்நூலை
நுண்மதியா லடைவிற் கோத்தே
இந்நாளி லரங்கேற்றித் தமிழ்த்தாயை
மகிழ்வித்தே யேகினையே.

செந்தமிழ்த்தா யருளாலும் நுண்மதியா
லும்பழநூற் றேர்ச்சி யாலும்
சந்தயாழ் நூலியற்றித் தமிழுலகுக்
கருளவந்த தலைவா! இந்நாள்
அந்தயாழ் நூலறிவை விண்ணகத்துக்
கந்தருவர்க் கருள வோநீ
நந்தாத மணிவிளக்கே! இப்புடவி
நீத்தங்கே நடந்த வாறே.

தனியான செந்தமிழு மாங்கிலமும்
பலகலையும் சமய நூலும்
முனியாது துறைபோகக் கற்றறிந்து
தத்துவநூல் முழுதும் தேறித்
துனியாகும் பவத்தொடக்கைத் துடைத்துமுனி
யாகியொரு துணையாய் நின்றாய்
இனியாரே இனியாராய் மற்றெமக்குத்
துணையாவார்? இயம்பு வாயே.

சொன்னோக்கும் பொருணோக்கும் தொடைநோக்கும்
நடைநோக்கும் துறுமப் பன்னூல்
நன்னோக்கொ டருள்செய்த நற்றமிழ்ப்பா
வல்லோனே! ஞான மூர்த்தி!
மன்னோக்குஞ் சிறப்புடையாய்! கவலையிலா
வாழ்வுடையாய்! மண்ணை நீத்தே

என்னேக்கி விண்ணேக்கி ஏகினைநீ ?
என்றினியா மினிக்காண் போமே?

[பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார்]

இளங்குழவி இடைப்பயிலும் இயல்பினிவன்
இடைப்பயிற்சி என்ன நிற்கும்
களங்கமிலா உளம்படைத்துச் சாந்தியுல
கினுக்குதவும் காட்சி சான்றேன்
துளங்குமனை அறம்பூண்டு துலகினுக்கே
தொண்டுசெய்யுந் தூய ஞானி
விளங்குவிபு லானந்த அடிகளெனும்
பெரும்பெயரோன் வென்று வாழி.

சீராம கிருட்டினனர் ஞானநடை
மணியாகுஞ் சிறப்புக் கொண்டோன்
பாராதி புவனமெலாம் பரம்பொருளாய்ப்
பார்த்துவக்கும் பண்பு கண்டோன்
பேராரும் பாவலவன் நாவலவன்
முத்தமிழ்க்கோர் பெருமை தந்தோன்
நேராரும் இலாவிபுலா னந்தனெனும்
ஒண்தவத்து நிமலன் வாழி.

ஏழ்பொழிலும் இசைஇயம்பும் செகசிற்பி
எனும்புலவர் ஏந்தல் ஈந்து
வாழ்வினகப் பொருள்தொனிக்க மருவுபல
நாடகநூல் வரம்பு கண்டு
தாழ்வகல இலக்கணநூல் தமிழ்மகளுக்
கணிந்தழகு தானுங் கண்டோன்
சூழ்பிறவித் தளையறுத்த சுகுணவிபு
லானந்தத் தோன்றல் வாழி.

நள்ளிருளில் மட்டுநகர்க் கடலகத்து
நீர்மகளிர் நயந்து வந்து
தெள்ளுதமிழ் இசைபயிற்றக் குறுமுனிபோல்
தானுண்ட திறத்தி னலே
உள்உளமும் காண்பரிதாய்க் கரந்தொழிந்த
மற்றதனை உலகிற் கீந்த
வள்ளல்விபு லானந்த அடிகளென்னும்
குருநாதன் வாழி மாதோ.

வாணுளை மானுடலைப் பெரும்பொருளை
வரும்பொருளை மகிழ்ந்தர்ப் பித்துக்
கோணுமல் தமிழ்மகளை நலிவகற்றிக்
கொலுவிருத்திக் குளிர்ந்து காண்போன்
பூணுத நோன்பில்லோன் பொறுக்காத
பொறையில்லோன் புலத்திற் கப்பாற்
காணுத காட்சியில்லோன் எனும்விபுலா
னந்தவேள் கவின்று வாழி.

[ தி. சதாசிவ ஐயர் ]

இலங்கை யன்னையின் றெடுத்ததொர் அரும்பெறன் [மகவை]
இலங்குபாரத தேவிதன் னிருகரத்தேந்தித்
துலங்கு தூமணி யாக்கிநற் பணிகொண்ட கோவை
இலங்க லங்கின னெம்விபு லானந்த நிதியை

அந்த கப்பெய ருடைமையிற் குருடுமா யினைகொல்
செந்த மிழ்க்கலைச் சிகரமா மறைந்ததொல் யாழை
மூந்து போலர சிருத்துவான் முயன்றருள் விபுலா
னந்த வள்ளலை வவ்வினை தருமமோ, நமனே ?

வேறு

அரிதாய கணிதமதோ ஆங்கிலமோ தமிழ்க்கலையுட்
பெரிதாய நுழைபுலமோ பேரவையிற் புலவர்முனம்
விரிதாய பொருளுரையோ வேறெதுவோ அரிதடிகட்
கரிதாய தொன்றுகண்டோம் அகலாதெம்முடனிருத்
[தல்.

## [பண்டிதர் ஏ. பெரியதம்பிப் பிள்ளை]

காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு
கடவுட் காதல்மகன்
கருவிற் றிருவுள கலைஞன் பெற்றோர்
கண்ணிறை திருமயிலோன்
ஏரே றும்படி கீழ்பால் மேல்பா
லாக்கிநல் விசைநட்டோன்
இமயத்தலையிற் றமிழ்முத் திரைவரை
யீழக் கரிகாலன்
சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில
நூற்சுவை நிலைகூட்டித்
தெருட்டும் புதுமைக் கபிலன் கலியுக
தெய்வ அகத்தியனும்
பாரே றும்புக ழாளன் தெய்விக
பதவிய டைந்தனனே
பன்மொழி விபுலா னந்தன் தெய்விக
பதவிய டைந்தனனே

ஈழ முதற்பனி யிமயம் வரைக்கொடி
கட்டு மிசைத்தமிழன்
இந்திய வாணியை ஆங்கில பீடத்
தேற்றிய புதுமையினேன்

தோழமை கொள்வட மொழிமய மாகிய
தொன்மை யிசைத்தமிழைத்
தூய தனித்தமிழ் வடிவிற் றேற்றிய
தந்தை யெனுந்துணையான்
சூழமு தத்தமிழ் வாணர் மதிக்கொரு
சோதிச் செஞ்சுடரோன்
சுவாமிசி வானந் தக்கட லாடிய
படிமைத் தோற்றத்தோன்
வாழிய வன்சுக வாழ்வு புகுந்த
மங்கள நன்னாளே
மாதவ விபுலா னந்தன் வாழ்வடை
மங்கள நன்னாளே.

## [பண்டிதை இ. பத்மாசனி அம்மையார்]

நற்கலையாந் தமிழ்க்கலையு
நலந்திகழாங் கிலக்கலையுஞ்
சொற்கலையாம் வடகலையுந்
தூய்மைசெறி தவக்கலையாம்
வற்கலையாற் சிறப்பெய்த
வளம்பெருக்கி மாதவத்தின்
சிற்கலையார் மதியமெனச்
சீர்சாலுந் தவமுனிவா!

தமிழணங்கின் றவக்கொழுந்தே!
தாளாண்மை மிக்குடையாய்!
அமிழ்தெனவின் னிசையளிக்கும்
யாழ்நூலை யாராய்ந்தே
இமிழ்திரைசூழ் ஞாலத்தோ
ரெல்லோரு மின்பமுறத்

துமிதமழை சொரிவிபுலா
னந்தனெனுந் தமிழ்முனிவா!

மேனாட்டின் றலைச்சிறப்பாம்
விஞ்ஞானக் கலைபயின்று
தானாக்குந் தனிநூற்கோர்
பெருந்துணையா யதைக்கொண்டே
வானீட்டும் புகழ்படைத்த
யாழ்நூலை வகுத்தருளி
யேனோர்க்கும் வழிகாட்டு
மிசைமுனிவா வேகினையோ!

வேறு

பிறந்தவ ரிறத்தல் திண்ணம்
பெருகிய வறிவான் மிக்கோர்
இறந்தன ரெனினு மேலோ
ரிறந்தவ ரல்ல ரென்னும்
அறந்தரு முறைதா னுண்டே
யாதலா லடிக ளார்தம்
திறம்படு புகழை வாழ்த்திச்
செய்யநன் னெறியி னிற்பாம்.

[புலோலி, வித்துவான் க. முருகேச பிள்ளை]

கோச்சகம்

அயிலாருங் கண்மடவா
ளுமைபாக னடிசேர்ந்து
கயிலாயத் துறவுதரும்
காருண்யப் பெருமகனே
மயில்வாக னப்பெரியோய்
மாண்பமையும் பெருந்துறவோய்

இயலோங்கு விபுலானந்
தவடிகளோ வடிகேளோ.

உரமிகுந்த தமிழ்மொழியும்
உள்ளொளிய வாங்கிலமும்
தரமுவந்த வடமொழியுந்
தாண்மையிலா விசைநூலும்
குரவனென நின்றேத்தக்
குவலயத்திற் புதுமைவரத்
தரமுயர்த்தாய் தரமுயர்ந்தாய்
தாரணியிற் புலவோனே!

பூவேத்து மதிமாண்பா
புலவோர்கட் காரமுதே!
நாவேத்து நலமுடையோய்
ஞாலமிசை மிகுபுகழோய்!
கோவேத்து பெருந்துறவுக்
கோவில்கண்ட மாவரனே!
யாவேத்தி யுன்மகிமை
யானுரைப்பேன் துறவுடையோய்!

பூவுலகோர் பணிகொண்டாய்
பொன்னுலகோ ரணிகண்டாய்
யாவர்களும் போற்றிடவே
யிணையற்ற தூதுவனாய்த்
தேவுலகு வரவேற்கச்
சென்றனையே யவ்வுலகோர்
நாவுலகு தடிப்பேற
ஞானமுறை தெளிப்பாயே.

நில்லா தனவவற்றை
நிலையினவே யென்றுணரும்
புல்லறி வாண்மையது
கடையென்ற பொன்மொழிக்கு
எல்லாமா நல்லுலகு
மியலுவதை நாங்கண்டோம்
பல்லாரும் பேருட்குப்
படைத்திடவே மறைந்தனையோ ?

பேரறிவு படைத்திட்ட
பெரியோனே நின்மறைவு
சீரறியுந் தமிழ்மொழியின்
சிறப்பிற்கோ ரிடையூறும்.
ஆரறிவார் நின்னருமை ?
அறிந்தவர்க ளறிவார்கள்.
நீரறியும் நெருப்பறியும்
நீயறிந்த தமிழ்மொழியே.

செந்தமிழின் நிறைகுடமே!
சீரோங்கு மிசைப்படமே!
நந்தாத புகழ்மலரே!
நாவலர்கள் சேரிடமே!
அந்தமிலா நல்லிறைவன்
பாதமலர் பணியறமே
சந்தாரும் சுந்தரனே !
சாமிவிபு லானந்தனே !

அண்ணு மலைதனிலே
யடியேற்குப் பாடமுறை
எண்ணும லறிவிக்கு
மியற்கந்த சாமியுடன்

பண்ணாருந் தமிழ்மொழிநீ
பகர்விக்குங் காலமென்றோ ?
எண்ணாரும் நினைவெல்லா
மெண்ணமனம் புண்ணாமே.

எல்லாருந் தமிழறிந்தா
ராணலும் நின்போல
எல்லாரு மறிந்துமில
ரிவ்வுலகிற் பலநாலும்.
கல்லாருந் தெளிவுபெறக்
கட்டுரைகள் கதைமுறைகள்
இல்லாரு முள்ளவரு
மேற்றிடவே சொலவல்லாய்.

தொல்காப் பியமுதலாம்
பல்காப் பியமுணர்ந்தாய்
ஒல்காத பெரும்புகழிற்
சில்காத சீருடையோய்
மெல்காத நின்துறவே ?
யாரினிமேல் மேற்கொள்வார்?
செல்லாத மனமுடையோய்
தேவர்பணி மாதுறவோய்.

அறிவுடைய நூலெல்லா
மறிந்துள்ளா யதுதொட்டு
மறமெல்லாம் புறங்கண்டாய்
மாநிலத்து மேன்மைதரு
துறவுடைய வொழுக்கமே
தோதென்று மனங்கொண்டாய்
புறமுடைய சொல்லில்லாய்
புன்மையெலாந் தவிர்ந்தனையே.

மதுரைவளர் தமிழ்ச்சங்க
மண்டபத்து மிமாலயத்தும்
சதுரமுறு மண்ணாமலைச்
சர்வகலா சங்கத்தும்
புதுமுறைதேர் கொழும்புநகர்ப்
புன்மைதவிர் கழகத்தும்
விதிமுறைசேர் தமிழ்மொழியை
விதம்விதமாய் மொழிந்ததனால்

விண்ணவருந் தந்நாட்டில்
விளங்குகல்லூ ரியமைத்து
மண்ணிலவு தமிழ்கற்பான்
மனதினிலே நினைந்தார்கள்
எண்ணினரா சிரியன்தனை
யெவ்விடத்து மாருமிலை
பண்ணிதஞ்சேர் விற்பனனைப்
பாமுறைதேர்ந் தழைத்தனரே.

விபுதர்களும் தமிழ்கற்பான்
விபுலானந் தனையழைத்தார்.
தபுதலிலா மாணவர்நாம்
தவித்தலைந்து மதிகெட்டோம்.
விபுலர்னந் தாவென்று
விழையுமெம் முகம்பார்ப்பாய்?
தபுதலிலாத் தமிழழகா!
தாரணிக்கோர் பொலங்கொடியே!

எல்லாரு மோருலகி
விருப்பார்க ளதுவாகச்
சொல்லாரும் நின்னிருப்போ
வெவ்வுலகு மாயிற்று.

பல்லாருந் துதிகூறப்
பாருலகும் பொன்னுலகும்
வில்லார வீற்றிருப்பாய்
வேறுரோ விதுவாவார் ?

தோன்றினுற் புகழுடனே
தோன்றிடுக வென்பதற்கு
ஆன்றபே ரிலக்கியமா
யமைந்துள்ள வடிகேளோ!
சான்றுடைய நூல்கற்றுய்
கற்றபடி நிற்போனுய்ச்
சென்றுலும் நின்றுற்போற்
சீர்பலவு மாயினையே.

மண்ணுலக மிதினின்று
வரவழைத்து நின்துறவு
நண்ணுமுறை யதுகற்க
நலமுடனே தாம்நினைந்து
விண்ணவர்க ளழைத்தாரோ ?
விபுலானந் தவடிகாள்!
எண்ணரிய நினைக்காண்ப
தெந்நாளோ வெந்நாளோ ?

மண்ணுலகி லுடலெடுத்தால்
மாதேவ ராளுலும்
திண்ணமுட னதைவிடுத்தல்
தெய்வீக நிலையென்பர்.
அண்மையுரு வமலமுத்தி
யடையாது போயினையோ ?
கண்ணுதலார் காட்டாக்கால்
காண்பாரார் காசினியில் ?

[ பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ]

ஈழவள நற்கிரியின் மிசைத்தோன்றி
யிருகலையஞ் ஞான வல்லைப்
போழவெழுந் தறிஞருளப் போதுவிரித்
தகிலமெலாம் புகழ நின்ற
கேழிலகு புத்திரவி விபுலானந்
தப்பெயர்கொள் விபுதன் கீத
யாழறிவ னிசைத்தமிழி லகத்தியனுக்
கிணையென்ன விருந்த மேலோன்.

ஆங்கிலமுஞ் செந்தமிழு மாய்ந்தளவை
விஞ்ஞான வறிவு கைவந்
தோங்குமண்ணு மலைச்சருவ கலாசாலை
யுறுபுதமிழ்த் தலைமை தாங்கி
ஈங்கிவனுக் கிணையிலையென் றெவ்வவையு
மேத்தவவை முதன்மை யேற்றுத்
தாங்கரிய புகழீட்டி யீழவளத்
தாய்க்களித்த தவத்தின் செல்வன்.

கொழும்புநகர்ச் சருவகலா சாலைவளர்
தமிழெனும்பூங் கொடிமே லோங்கத்
தொழும்புபல செய்துகளை கண்ணுகித்
துணைநின்ற துகடீர் ஞானி
தொழும்படிவன் பொய்யடிமை யிலாதாரிற்
கவிபுகலுஞ் சொல்லின் செல்வன்
தழுங்கருவி ஒழுக்கமென வசனநடை
தமிழ்மொழிக்குத் தந்த சான்றோன்.

உலகமெலா மிந்துமத வுண்மைதெரிந்
துயர்நெறியி னொழுகி யுய்யப்

பலவரிய பிரசங்க மொழிந்தவிவே
கானந்தன் பரிந்து காட்டும்
அலகினெறி கடைப்பிடித்தே யகத்தோடு
புறந்துறந்த வடிகள் செம்மல்
துலையினொரு புடைகோடாச் சமநிலையிற்
றிரியாத தூய நெஞ்சன்.
தவவடிவ னருளொழுகு தடநயன
னினியமொழி சாற்று வாயன்
தவவினிய முகனறிஞர் தகைமைதெரி
பெரும்புலவன் சான்றோர் போற்றச்
சுவயமொழி தனிற்பேசுஞ் சொற்கொண்டோன்.
மார்ச்சரியச் சுவடு மில்லான்
பவநெறியிற் சரியாத விரதன்றமிழ்ப்
பற்றென்றே பற்று வாழ்ந்தான்.
இசைநுணுக்க முதலாய விசைத்தமிழ்நூ
லவிந்துபல யாண்டு சென்றும்
அசைவிலுணர் வாலதனை மீட்டமைக்க
அறிஞர்பெரி தலந்த காலைக்
குசைநுதியி னுண்மதியிற் பன்னூலாய்ந்
தியாழ்நூலென் றொருபேர் கூறி
இசையறிவ ரியலறிவ ரவைகேட்க
மரபினரங் கேற்று மேந்தல்.
தான்யாத்த விசைநூலைத் தமிழ்முனிக்குங்
கலைமகட்குஞ் சாற்ற வெண்ணி
ஊன்யாத்த பொய்யுடல மொருவியவி
யூணமர ருடல மெய்திக்
கான்பூத்த கற்பகக்கா விறைசுரர்கள்
முனிவரர்கள் களிப்பி னேற்ப

வான்நோக்கி நடந்தனனன் மண்ணுலக
மொளிகுன்றி மயங்க மாதோ.

## [ பண்டிதர் பொன். சின்னத்துரை ]

### கட்டளைக் கலித்துறை

வித்தை புலமை தலையின்
விளங்கிட வேந்துமொழிப்
புத்தியின் பாலா ரிடையிற்
பொலிந்து புதுமைநலம்
மெத்த முதலுற்றுச் சிந்தை
நடுநெறி சேர்ந்தழகு
தத்து தமிழின் தலைமைக்
கடையிவர் தம்பெயரே.

எண்டமி ழின்ப மெழுதமி
ழாறு தமிழ்நிலத்தின்
பண்டமி லைந்து தமிழ்மண
நாற்றமிழ் தாமெனவே
கண்டிட மூன்று தமிழ்வளம்
கொண்டிரு தண்டமிழின்
விண்டல மெச்ச வடைவிபு
லானந்த னேர்தமிழே.

காந்த முருண்டுதம் பாட்டினி
லோடிடக் காரிரும்பு
தாந்த மிடம்விட் டதுபற்றிச்
சார்புறுந் தன்மையெனச்
சாந்த மிகுவிபு லானந்த
சாமிகள் சார்கலைகள்

சேர்ந்தன சேர்ந்து பொலிந்தன
னென்னிது செப்படியே.

நம்பனை நாடுயர் யாழ்ப்பாணர்
நாடு நறுந்தமிழின்
கம்பனி னுடு வழுக்களை
நாடுநல் லீழமெனும்
வெம்புகழ் நாவிபு லானந்த
நாடெனின் வேறுபல
வம்புவி நாடெனத் தோன்றினு
மீங்கிதற் காகுவவோ ?

அளியக லாவிசைக் காவின
மெங்கு மலைந்தடுத்து
வளியக லாமணத் தேனரம்
பார்த்து வளம்பதித்துத்
தெளிபுலத் தாருங் கணிக்கவி
யாத்தனன் தீந்தமிழின்
தெளிவுல காரவைத் தானியாழ்
நூலெனுந் தேறலையே.

நாவல னாறு முகனெனத்
தோன்றிநல் லூர்புகழ
நாவலந் தீவுற நல்லுரை
யாமுறை நாட்டினனே.
நாவலர் மட்டு நகர்மயில்
வாகனன் யாழிசைநூல்
நாவலங் கொண்டுதன் தான்விபு
லானந்த நாவலனே.

தலத்திற் ககத்தியன் முன்னிருந்
தான்தக்க சான்றுகளில்
புலத்துக் ககத்தியர் தாம்பல
ரென்பதும் போதவில்லை
நலத்திற் கிளைத்துத் தழைத்து
வளரியல் நற்றமிழின்
குலத்திற் ககத்திய னின்றனைக்
கொண்டு குளித்தனமே.

அன்பாற் பிறந்தரு ளால்விளித்
தேதமிழ் நாவசைத்துத்
துன்னுங் கிலமாரி யந்தவழ்ந்
தாயுந் துறையிருந்து
தன்னுய் நடந்து தவமெழுந்
தாணவ மோடியுள
மன்னுகி ஞானக் கிழவிபு
லானந்தர் மாண்டனரே!

### தரவுக் கோச்சகம்

தென்னடு முழுமையினுஞ்
செழித்தாண்டு முடிவின்றிப்
பன்னளுந் தமிழருணக்
கொளத்தழைக்குந் தமிழ்மரத்தை
யின்னளிற் பண்டினர்போ
லிரண்டொன்றி லேறுமே
தொன்னளி னற்கனிகள்
சுவைதேறித் தலைகின்றன்.

இரண்டொன்று பட்டமிக
விடர்ப்பட்டுப் பெற்றினியார்

திரண்டொன்று மிப்புவியி
லெனைநிகர்வா ரெனநினைவார்,
கரங்கொண்டு புகட்டிடினும்
காணகில்லாக் கலைநிறைவை
வரங்கொண்டே பெற்றவிபு
லானந்த வல்லுனனே!

ஆசிரிய விருத்தம்

சிந்துவின் நாக ரீகத்
திறந்தனிற் சிறக்கும் யாழின்
வந்தியை நகரத் தீழத்
தலத்துறுந் தமிழன் றயே!
புந்திநீ வாடேல் ஈழப்
புலவிபு லானந் தன்போற்
பிந்திய மனேகர் நின்னைப்
பேணுவார் சிங்க ளத்தே.

[வித்துவான் க. இராமலிங்கம்]

வெண்பா

கந்தனரு ளாலிந்தக் காசினியி லோர்குருவாய்
வந்தவிபு லானந்த வள்ளலே! —பந்தவினைப்
பூதவுடம் போடு புகழுடம்பு மிங்கிருக்கச்
சோதியுடம் பேனெடுத்தாய் சொல்.

கோச்சகம்

செந்தமிழோ டாங்கிலமும்
தேசுதரு மாரியமும்
சிந்தைகொளக் கற்றுமிகச்
சிறந்ததோர் யாழ்நூலும்

தந்தெமக்குப் புகழீந்த
தவக்கொழுந்தே! தமிழ்நாட்டுச்
செந்திருவே! திகழ்குருவே!
சிறந்தமயில் வாகனனே!

சன்மார்க்க மேமார்க்கம்
சமயங்கள் மற்றவெல்லாம்
துன்மார்க்க மென்றுவிட்டுத்
துறவுகொண்டு தொண்டாற்றி
விண்மார்க்கஞ் சென்றவிபு
லானந்த விற்பனனே!
எம்மார்க்கஞ் சென்றாலும்
இனியுனையாம் காணுவமோ?

சன்மார்க்க நெறியோடு
தமிழ்மொழியு மாங்கிலமும்
எம்மார்க்கத் தவர்க்கும்யா
ழிசைநூலும் புகட்டிவைத்தே
துன்மார்க்க நெறிபுகுதாத்
துறவறமுங் காட்டியெமக்
கெம்மார்க்கஞ் சென்றனையா
மேங்கிமனம் வாடிடவே?

**அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

அந்நாளி லண்ணா மலைக்கழகத் ததிபதியாய்த்
தமிழ்வளர்த்தாய்
பின்னாளி லீழத்துக் கழகமதிற் பெரியதமிழ்
ஆசானாய்
இந்நாளில் யார்செய்த புண்ணியமோ இயலிசைநா
டகங்கள் மூன்றும்

தென்னூரும் தேவர்கள்தம் கழகத்திற் செப்பிடநீ
　　சென்றிட்டாயே!

கைத்தலா மலகமென இசைக்கலையாய்ந்
　　தினியயாழ்நூல் கவின வைத்தாய்
உத்தமா சிரியனா யுவந்துநன்
　　மாணவரை உய்ய வைத்தாய்
பத்திரா சிரியனாய்ப் பல்லோர்க்கும்
　　பேரறிவு பரப்பி வைத்தாய்
புத்தியா யுலகமதில் துறவறமு
　　மெல்லோர்க்கும் புகட்டி வைத்தாய்.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

கல்வியறி வுடனகை நல்லதுற வானவுன்
　　கருணையை நினைந்தழுவனோ?
கமலா சனைக்கழக மதிலேபிர சங்கித்த
　　காட்சியை நினைந்தழுவனோ?
தொல்வினைக ணீங்கும்வகை இன்மொழிக ளாலங்குச்
　　சொன்னதை நினைந்தழுவனோ?
தூயமன சோடுமெமை ஆசீர் வதித்திட்ட
　　துதிகளை நினைந்தழுவனோ?
எல்லவர்க் குங்கலைகள் சொல்லிவைத் தீரென்னு
　　மெழிலதை நினைந்தழுவனோ?
இசைநூலை ஆக்கியிவ் வீழமதற் கேபுகழை
　　ஈந்ததை நினைந்தழுவனோ?
தில்லைநட ராசனின் சேவடிகள் மறவாத
　　சிந்தையை நினைந்தழுவனோ?
தேடவரு துறவுநெறி கோடாத நின்செயல்கள்
　　சிந்திக்கி லெவருமழுவார்.

## கட்டளைக் கலித்துறை

ஏராட்டும் புன்னகை தன்னுட னேசொலு
    மின்சொற்களால்
தாராட்டப் பிள்ளை சலிப்பகன் றுலென்னச்
    சஞ்சலம்போம்.
பாராட்டிப் பேசியெம் பக்குவம் கண்டு
    பகுத்துணர்ந்து
சீராட்டக் காணுவ மோர்விபு லானந்த
    தேசிகனே !

அன்றுடு செய்த அருந்தவத் தாற்கயிலை
    யங்கிரியைக்
கண்டே திரும்பியிக் காசினிக் கேயதைக்
    காட்டமனங்
கொண்டேகி வந்திங் குருவ மெழுதி
    உணர்த்தியங்குச்
சென்றுய் திரும்புவை யோவிபு லானந்த
    தேசிகனே ?

## [ சோ. நடராஜன் ]

தெகிழ்ந்தறிவு கொண்டிசை
    சிறந்தனை யதுகண்டு
மகிழ்ந்தன மிறும்பூதொன்
    றெய்தின மீழத்தும்
புகழ்ந்தனம் போயெங்கும்
    போற்றலும் போற்றினம்;
இகழ்ந்தும் சிலவுரைகள்
    புறத்தே யிரைந்திட்டோம்;

கமழ்ந்துசெந் தேன்பிலிற்றும்
கற்பகப் பூப்போலத்
திகழ்ந்தனை தேடுவார்
தேடிச் சிறப்படைந்தார்.
அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போல வுன்புலத்தை
யகழ்வாரைத் தாங்கியென்று
மாதரித்தாய் வாழி.

நில்லா வுலகத்து
நிலையுள்ள செம்பொருளைச்
செல்லா திருக்கின்ற
செல்வத்தை யறிவாலே
சொல்லாது கண்டறியத்
துறவுநெறி கண்டனையே!
எல்லார்க்கு மிந்தவழி
யேலாதென் றேற்றனையே!

பொன்னைத் துறந்துவிட்டாய்
போகத்தை யுந்துறந்தாய்
பெண்ணைத் துறந்ததனற்
பெருந்துறவு கற்றுவிட்டாய்
கண்ணைத் திறந்துவைக்கும்
கல்வியையோ துறவாயால்
மண்ணிற் புகழ்துறக்க
மறந்ததுவோ மறந்தாயோ.

"அன்னை தனைத்துறப்பேன்
அருந்தமிழ்நா டுந்துறப்பேன்.
விண்ணவர் தம்வாழ்வை
வேண்டா மெனத்துறப்பேன்.

என்னுயிருக் குயிரா
        மிறைவனையுந் தான்துறப்பேன்.
கன்னித் தமிழென்றூற்
        கனவிலும்நான் துறவேனே"
எனவாங்கு,
ஒன்றுநீ யெம்மவர்க்கு
        முணர்த்திவிட்டா யுத்தமனே!
நன்றுநீ செய்தாய்
        நலங்கள்பல கண்டோமால்.
கலைபலவுங் கற்றதனாற்
        கற்றவர்க்கு விருந்தானாய்!
விலையொன்றுங் கருதாதே
        வித்தையினைத் தேடல்
தலையென்று கொண்டதனாற்
        றலைநின்று யெம்முள்
நிலையில்லா நினைவுகளுள்
        நிலைத்ததுநின் நினைவே.

[ அ. வி. மயில்வாகனன் ]

அதன்பின் னிங்கே அவலங் கேளீர்!
தமிழ்மண நாறு தனிப்பெரு மதுரை
சான்றவர் மலிந்த சால்புறு கரந்தை
அமிழ்தத் தமிழினை அழகோ டிசைக்கும்
அரிய யாழ்நகர் என்னு முப்பதிச்
சங்க மியர்வும் எங்கே, யெங்கே!
ஆய்கலை அண்ணலார் தோயிலை மதியார்
கருவிலு முருவிலும் கண்ணன் அனையார்
அறநிலைப் பள்ளியுள் அமைந்த அடிகாள்!

இறந்துந் தமிழுனை மறவா
ஏழிசைத் தொகுதி எழுப்பிய கிழமையோரே!

“பூவாற் பசுங்கொடியும் புன்சிரிப்பாற் கைம்மகவும்
நாவால் இளங்கிளியும் நன்கோதும்”—ஓவாதே
வீசு புகழ்விபு லானந்த வித்தகன் றன்
வாசலிடை வந்த வருக்கு!

உலகளித்த உத்தமனுர்
உதவியநற் றீந்தமிழைப்
பலகலையாய்ப் பண்பலவாய்ப்
பயின்றருளும் பாவலனே!
அலககன்ற தமிழிசைக்கு
மளவுகண்ட அடிகாள்! நீர்
நிலவுகின்ற புகழ்நிமிர
நின்மலன்றுள் சேர்ந்தனிரோ?

அருங்கலை பொலியண் ணமலை சென்னை
அணிகிளர் மாடங்கள் மலியப்
பெருங்கலை பொலியும் கொழும்புமா நகரம்
பெட்புறு பல்கலைக் கழகம்
விரும்புறத் தமிழை விரித்தருள் விஞைத!
வேகுமிக் கழகங்கள் வெதும்பி
வருந்துற எங்கோ மறைந்தனை? வாணி
மலர்ப்பத நீழலோ மகிழ்ந்தாய்?

[வயவையூர், ந. நமசிவாயம்]

வித்தகனை வியனிலங்கை விளங்க நின்ற
விறல்மணியை வேதமுதற் சாத்தி ரங்கள்
சித்தியுற வோர்ந்தவனைச் சமயம் பாடை
சிறக்கவரு மாறுமுக நாவ லோற்பின்

இத்தலத்தி லிறையருளா னெழில்சேர் யாக்கை
இனிதெடுத்துப் பரதமுத லிசைநா டெல்லாம்
மெத்தவரும் புகழ்நாட்டும் விபுலா னந்த
மெய்ம்மணியை யிழந்ததுமெம் விதியின் பாற்றே.

மட்டுநகர் மணித்தடத்தில் மலர்ந்த செந்தா
மரைமலரை, மாணிக்க மணியை, வித்தை
எட்டுமட்டுங் கண்டானை, யெண்ணில் நூல்கள்
எமக்கீந்த விற்பனனைப் பிரசங் கங்கள்
கொட்டுமட்டுங் கொட்டிமுழக் கிட்ட கோதிற்
குருமணியை, யாழ்நூற்பேர்க் குவையை யீந்த
சிட்டனென வருவிபுலா னந்த ஞானச்
செழுஞ்சுடரை யிழந்தனமென் செய்கு வோமே?

கலைமணியைத் தமிழ்வளர்த்த கார்மே கத்தைக்
கவிஞருளங் கொளும்வகையிற் கண்டி டாத
விலைமணியை நிலையறியா விறல்சேர் ஞான
வித்தகனை யொன்றெனநின் றிடாத பாடை
மலைவுஅறத் தேர்ந்துகரை கண்டு மேலாம்
மனமொடுங்க மோனஅறம் மருவி னன்சீர்
கலைவலுனர் உளமகிழ வுரைகள் தீட்டும்
கவின் "ஈழ மணி" மலரிற் காண லாமே.

O-, MVAW N51
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 104941
EGMORE

५५१२२